# වාර්ෂික වාර්තාව
# ஆண்டு அறிக்கை
# Annual Report
# 2024



නාගරික ජනාවාස සංවර්ධන අධිකාරිය
நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை
Urban Settlement Development Authority

# ஆண்டு அறிக்கை

# 2024



நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை

# உள்ளடக்கம்


தாபன ரீதியான நிர்வாக அறிக்கை ........................................ 4
தலைவரின் மீளாய்வு ........................................ 5
பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு ........................................ 6
பணிப்பாளர் சபையின் மீளாய்வு மற்றும் ஒழுங்கமைப்பு ........................................ 7
2024.12.31 ஆம் திகதியில் நகர குடியிறுப்பு அபிவிருத்தி அதிகார சபையின் புதிய பணிப்பாளர் சபை ........................................ 8
2024.01.01 முதல் 2024.10.01 திகதிவரை நகர குடியிறுப்பு அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளர் சபை ........................................ 12
பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் பொருட்டு புதிய பணிப்பாளர் சபைக் குழு அங்கத்தவர்களின் பங்கேற்பு ........................................ 17
பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் பொருட்டு பணிப்பாளர் சபை ........................................ 18
அங்கத்தவர்களின் பங்கேற்பு 2024.01.01 – 2024.10.01 ........................................ 18
ஆலோசனைக் குழு மீளாய்வும் கட்டமைப்பும் ........................................ 19
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் மீளாய்வு ........................................ 20
நகர குடியிறுப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவ கட்டமைப்பு ........................................ 21
நகர குடியிறுப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான உத்தியோகத்தர் சபை ........................................ 22
பௌதீக அபிவிருத்தி வேலைத்திட்டம் ........................................ 24
பௌதீக அபிவிருத்தி வேலைத்திட்டம் ........................................ 25
2024 ஆம் ஆண்டில் அரசாங்க தனியார் கூட்டிணைப்பின் பிரகாரம் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டிடப்பட்ட நடத்தர வருமானம் பெறுவோருக்கான வீடமைப்புக் கருத்திட்டம் ........................................ 25
நகர குடியிறுப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தபபட்ட குறைந்த வருமானம் பெறும் வீடமைப்புக் கருத்திட்டங்களின் வீடுகளை அகற்றுவதும் அபிவிரூத்தி நடவடிக்கைகள் மற்றும் சுவீகரிப்பு நடவடிக்கைகளும் ........................................ 27
நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட நடுத்தர வருமான வீடமைப்பு கருத்திட்டத்தில் விற்பனை செய்தல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் ........................................ 29
எதிர்கால பௌதீக கருததிட்டங்களில் சுற்றாடலை பாதுகாத்துக் கொள்வதற்கும் சுற்றாடலுக்கான எதிர்மறையான தாங்கங்களை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகளை குறைப்பதற்கும் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் ........................................ 29
பூர்த்தி செய்யப்பட்ட வீடமைப்பு கந்திட்டங்களில் பயனாளிகளுக்கு வீட்டு உரிமை மற்றும் உறுதிகள் வழங்குதல் ........................................ 30
ஆபத்துக்களை மதிப்பீடு செய்வதும் குறைப்பதற்குமான மூலோபாய வழிகள் ........................................ 31
சமூக அபிவிருத்தி வேலைத்திட்டம் ........................................ 32
சமூக அபிவிருத்தி வேலைத்திட்டம் 2024 ........................................ 33
சமூக அபிவிருத்தி வேலை திட்டங்களை குடியிருப்புகளில் நடைமுறைப்படுத்துதல் ........................................ 34
கல்வி வேலைத் திட்டங்கள் தொடர்பான புகைப்படங்கள் ........................................ 41
2024 உலக குடியிருப்பு தினம் ........................................ 49
உலக குடியிருப்பு தின தேசிய ஞாபகார்த்த வைபவம் - 2024 ........................................ 53
பிரதான பணிச் சுட்டிகள் ........................................ 54
கல்விக்கடன் வழங்குதல். ........................................ 59
நகரக் குடியிறுப்பு அதிகார சபையின் 2024.12.31ம் திகதியில் பணியாளர் குழாம் தொடர்பான விபரங்கள் ........................................ 60
இறுதி கணக்கு அறிக்கை ........................................ 61
கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை ........................................ 92

# நோக்கு

***"பெருமைமிக்க வாழ்வொன்றின் பொருட்டு நிலைபேறான நகரக் குடியிருப்புக்களை கட்டியெழுப்பதல்"***

# பணி

***"ஆரோக்கியமான ஒருங்கிணைந்த மற்றும் பாதுகாப்பு நிலையுள்ள நகர குடியிருப்புக்களை கட்டியெழுப்பவதும் பௌதீக, சமூக மற்றும் பொருளாதார ரீதியாக மக்களை வலுவூட்டுவதும் "***

# நகரக் குடியிறுப்பு அபிவிருத்தி அதிகார சபையின் குறிக்கோள்கள்

- ஒவ்வொரு நகர பிரதேசத்தின் பொருட்டும் திட்டமிடப்பட்ட ஒருங்கிணைந்த நகர குடியிருப்பினை உருவாக்குதல்.
- நகர்புற மக்களின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியினை மேம்படுத்தல்.
- நகர்புற மக்களிடையே சொத்துக்களின் உரிமைத்துவம் தொடர்பிலான ஒரு உணர்வினை ஏற்படுத்தல்
- அதிகார சபையின் செயற்திறனை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருதல்.

# தாபன ரீதியான நிர்வாக அறிக்கை



# தலைவரின் மீளாய்வு



2008ம் ஆண்டின் 36ம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை நகர வலயங்களில் வாழும் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக பௌதீக அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் மனிதவள அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

2024 ஆம் ஆண்டின் இறுதித் தவணையில் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் புதிய தலைவராக நியமனம் பெற்றதுடன் அங்கு முக்கியமாக அதிகார சபையில் இருந்த நிர்வாக முறையினை முறைப்படியான ஒரு திட்டத்திற்கு தயாரித்து அதனூடாக மீண்டெழும் செலவுகளை குறைத்ததும் உத்தியோகத்தர்களின் வினைத் திறனையும் பயனுறுதியான நிலையினையும் உயர்த்தும் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும்"வளமான நாடு - அழகான வாழ்க்கை"என்ற அரசாங்க கொள்கைகளுக்கு ஏற்றார் போல முன்வரும் 5 வருடங்களின் பொருட்டு 2025 - 2029 மூலோபாயத் திட்டத்தினைத் தயாரித்து அதற்குரிய அங்கீகாரங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டது .

இதனூடாக எதிர்காலத்தில் பொதுத் திறைச்சேரிக்கு சுமையொன்றாக அமையாது சுயமான ஈட்டுகை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற நிறுவனம் ஒன்றாக உருவாக்குவது முக்கிய நோக்கமாகும் என்பதுடன் பௌதீக அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் நகரப் பிரதேச குறைந்த வருமானம் பெறும் மக்களை மீளக் குடியமர்த்தும் பொருட்டு தேவையான வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், தரமற்ற வீட்டு அலகுகளை மேம்படுத்துவதற்காக காணிகளை உரித்தாகக் கொண்டுள்ள இருப்பினும் முறைப்படியான நிதியியல் வசதிகளை பெற்றுக்கொள்ள முடியாத ஆட்களுக்கு நிதி வசதிகளையும் கட்டுமாண ஆலோசனைகளையும் வழங்கும் பொருட்டு கருத்திட்டங்களை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் நடுத்தர வருமானம் பெறுவோருக்கு அரசாங்க - தனியார் கூட்டு முறையின் கீழ் (PPP) நாடு முழுவதும் ஒரு மாவட்டத்திற்கு குறைந்தது 100 வீட்டலகுகள் நிர்மாணிக்கப்படுகின்ற பிரகாரம் கருத்திட்டங்களை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக ஏழு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் அந்த வீடமைப்பு கருத்துத்திட்டங்களின் ஆரம்பகட்ட அங்கீகாரங்கள், அனுமதி நடவடிக்கைகள் காணியினைசுவீகரித்துக்கொள்ளல் மற்றும் காணி கொள்ளல், நடவடிக்கைகளை, மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதிகார சபையினால் மக்களின் பாவனைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள "லுனாவை சீவீவ் ரெசிடன்சீஸ்" மாடி வீட்டுத் திட்டத்தின் உறுதிகளை வழங்கும் முறை பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் திருத்தம் செய்து உரித்துடமை உறுதிகளை துரிதமாக வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

சமூக, அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் நகர பிரதேச குறைந்த வசதிகளை உடைய மக்களின் சமூக, பொருளாதார, கல்வி, சுகாதார, சமய மற்றும் கலாச்சார ரீதியாக வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதும் அவர்களை அறிவு, திறமை மற்றும் ஆளுமைகளை விருத்து செய்து அவர்களை சுய பலத்தோடு உயர்த்தி வைக்கும் பொருட்டு சமூக வலுவூட்டல் வேலை திட்டம் கல்வி வேலை திட்டம் தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத் திட்டம் மற்றும் சமூக கலாச்சார வேலைத் திட்டங்கள் ஆகிய 04 உப வேலைத் திட்டங்களின் ஊடாக 279 நகர அதிகார பிரதேசங்களில் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பின்னணி யொன்று உருவாக்கப்பட்டது. 2025 ஆம் ஆண்டில் 100 நகர அதிகார பிரதேசங்கள் உள்ளடங்குகின்ற பிரகாரம் இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக அதிகார சபையின் பணியாளர் குழாமினருக்கு பயிற்சி வேலை திட்டம் ஒன்றினை தயாரித்து அதன் ஊடாக விடய அறிவையும் திறமையையும் விருத்தி செய்து கொள்வதற்கு மிக பயனுறுதி வாய்ந்த மற்றும் வினைத்திறன் உள்ளதாக பணியில் ஈடுபடத் தேவையான ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

அதிகார சபையின் சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு அனைத்து சவால்களுக்கும் மத்தியில் தளராது இலங்கையில் நகர பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தினை சுபீட்ச நிலையை நோக்கி எடுத்துச் செல்ல நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக பொறுப்புக்களோடு தோள்கொடுப்பதனையும் குறிப்பிடுகின்றேன்.

**ஜே.எஸ்.டீ.எம்.அசங்க அபேவர்த்தன**
**தலைவர்**
**நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை.**

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு



2008 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்திற்கு ஏற்ப நகரப் பிரதேச குறைந்த வசதிகளை உடைய குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கு பௌதீக அபிவிருத்தி மற்றும் சமூக அபிவிருத்தி என்ற இருவகையான அணுகல்கள் ஊடாக கருத்திட்டங்களையும் வேலைத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதுடன் அதனூடாக மக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துவது அதிகார சபையின் முக்கிய குறிக்கோளாக உள்ளது.

அதிகார சபையில் (திட்டமிடல் மற்றும் தக.(மு.தொ.) பணிப்பாளர் பதவியில் கடமைகளை மேற்கொண்டு அதிகார சபையின் மூலோபாய திட்டத்தினை தயாரிப்பது உட்பட திட்டமிடல் செயல்பாடுகளுக்கு பங்களிப்பு செய்த எனக்கு 2024 நவம்பர் மாதம் 19ஆம் திகதி நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையில் பணிப்பாளர் நாயகமாக நியமனம் கிடைக்கப்பெற்றது நான் பெற்ற பாக்கியம் ஒன்றாகக் கருதுகின்றேன்.

அதன் பிரகாரம், ''வளமான நாடு - அழகான வாழ்க்கை'' அரசாங்கக் கொள்கைக்கு ஏற்றார் போல எமது அதிகார சபையால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பௌதீக மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னரை விட பயனுறுதி வாய்ந்த விதத்தில் புதியதோர் தோற்றுவாய் ஊடாக வரிசைப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் ஒன்று எமக்கு கிடைத்துள்ளது. விசேடமாக எமது அனுபவம் மற்றும் ஆய்வுகளின் அடிப்படையில் இனங்கண்ட குறைபாடுகளுக்கு தீர்வினை வழங்கி உயர்ந்தளவான வினைத்திறனோடு உண்மையான விதத்தில் நகரப் பிரதேச மக்களுக்கு நன்மைகளை வழங்குவதன் அடிப்படையிலான நாடு தழுவிய வேலைத் திட்டங்களைக் கொண்ட செயற்பாட்டுத் திட்டம் எம்மால் தயாரிக்கப்பட்டது.

விசேடமாக அனைத்து நகர அதிகார பிரதேசங்களும் உள்ளடங்குகின்ற பிரகாரம் சமூக அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், நாளாந்தம் அதிகரிக்கின்ற வீடுகளுக்கான கோரிக்கைகளை பூர்த்தி செய்வதற்கும் மாவட்டம் ஒன்றுக்கு ஆகக் குறைந்தது நூறு மட்டளவிலான வீடமைப்பு அலகுகளை நிர்மாணிக்க கூடிய நடுத்தர வகுப்பு வீடமைப்பு கருத்திட்டம் ஒன்று திட்டமிடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் இந்த நடுத்தர வகுப்பு மக்களின் பொருட்டு இனங்காணப்பட்டுள்ள 7 கருத்திட்டங்களை செயற்படுத்தும் பொருட்டு ஆரம்ப அனுமதிகளும் தேவையான அங்கீகாரங்களும் பெற்றுக் கொண்டு 02 கருத்திட்டங்களுக்கு பெறுகைச் செயற்பாடுகளையும் ஆரம்பிக்கக் கூடியதாக இருந்தது.

மேலும் சமூக அபிவிருத்தி வேலை திட்டங்களின் எல்லையினை மேலும் விரிவாக்கம் செய்து நகர அபிவிருத்தி அதிகார சபை போன்ற சம நிறுவனங்களால் நிர்மாணிக்கப்பட்ட மாடி வீடமைப்புக் கருத்திட்டங்களின் மக்களையும் அந்த வேலைத் திட்டங்களில் தொடர்பு படுத்திக் கொள்ள வாய்ப்புக்கள் கிடைத்துடன் அதனூடாக அந்த மாடி வீடுகளில் தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்க நேரடி பங்களிப்புக்கள் எம்மால் வழங்கப்பட்டுள்ளது.

அதிகார சபையில் பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்களில் இருந்து வீட்டுப் பிரச்சினைகளை உடைய அலுவலர்களுக்கு வீடமைப்புக் கடன் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வாய்ப்புகள் கிடைத்ததுடன் அதனூடாக உத்தியோகத்தர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதற்கும் ஊழியர்களின் வினைத்திறனை உயர்த்துவதற்கும் 2024 ஆம் ஆண்டிற்குள் முடியுமாக இருந்தது.

எதிர்காலத்தில் மேலும் விரிவான ஒரு பரப்பின் ஊடாக நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையில் பணிகளை விரிவாக்கி நடைமுறைப்படுத்துவதன் ஊடாக இலங்கையில் நகர பிரதேச குறைந்த வசதிகள் மற்றும் நடுத்தர வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வாய்ப்புக்கிடைக்கட்டும் என உளப்பூர்வமாக பிரார்த்திக்கின்றேன்.

**கே.கே.டபிள்யூ. துஷாரி பிரியங்கா டி சில்வா**
**பணிப்பாளர் நாயகம்**
**நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை.**

# பணிப்பாளர் சபையின் மீளாய்வு மற்றும் ஒழுங்கமைப்பு

நகர குறைந்த வசதிகளைக் கொண்ட கடியிறுப்புக்களில் வாழும் மக்களின வீடமைப்பு பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் அவர்களை சமூக, பொருளாதார மற்றும் உள ரீதியில் வலுவூட்டுவது நகரக் குடியிறுப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முக்கிய நோக்கமாகும். அதற்காக பௌதீக மற்றும் மனித அபிவிருத்தி ஆகிய இருவித அணுகுமுறைகளின் கீழ் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும், கருத்திட்டங்களும் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

1971 டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்திற்கு அமைய, நகரக் குடியிறுப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற சகல கொடுக்கல் வாங்கல்களையும் முறையாக கணக்குகளில் பதிவு செய்து கணக்குப் பதிவேடுகளை உறுதிப்படுத்தும் பொறுப்பு மற்றும் அதிகாரசபையின் கணக்கீட்டு நடவடிக்கைகளிலும் குறித்த ஆண்டுக்கான மிகை குறைபாடுகளின் உண்மையான மற்றும் நியாயமான அபிப்பிராயங்களை பெற்றுக்கொடுக்கின்ற நிதிக்கூற்றுக்களை தயார்செய்ய வேண்டிய பொறுப்பு அதிகார சபைக்கு பொறுப்பளிக்கப்படுகின்றது. அதற்கமைய, முறையான கணக்குப் பதிவேடுகளையும் பேணிவறுமாறும், நாளாந்தம் நடாத்தப்படுகின்ற கூட்டங்கள் மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் ஊடாக கணக்காய்வுக் குழு ஊடாக கணக்காய்வுக் குழு ஊடாக நிதியியல் அறிக்கையிடல் முறைமையினை மீளாய்வு செய்யுமாறு பணிப்பாளர் சபை அதிகார சபைக்கு கட்டளையிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயார்செய்யும் போது, ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் ஏற்புடையவாறு உரிய கணக்கீட்டு நியமங்களை ஏற்புடையதாக்கிக் கொள்வதற்கும், நியாயாமான மற்றும் அறிவுப்பூர்வமான தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகளின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் பணிப்பாளர் சபை கவனம் செலுத்தியுள்ளது. அதிகாரசபைக்கு உரித்தான சொத்துக்களைப் முறைப்படி முகாமைசெய்வதற்கு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. இது தொடர்பில் செயற்படும் போது பணிப்பாளர் சபையினால் அதிகாரசபையின் சொத்துக்களை பாதுகாத்துக் கொள்வதற்கும். அதன் அறிக்கைகள் பற்றி உண்மைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை நடைமுறைக்கு சாத்தியமானவாறு முடிந்தளவுக்கு உண்மைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை நடைமுறைக்கு சாத்தியமானவாறு முடிந்தளவுக்கு பாதுகாத்துக்கொள்ளக்கூடிய வகையில் நகர அபிவிருத்தி குடியிறுப்பு அதிகாரசபையின் சேவைகளை பாதுகாத்துக்கொள்ளக்கூடிய வகையில் நகர அபிவிருத்தி குடியிறுப்பு அதிகாரசபையின் சேவைகளை முறையாகவும் நிறைவேற்றத் தேவையான உள்ளக பரிசீலனைகள், உள்ளக கணக்காய்வு, நிதி மற்றும் கட்டுப்பாடுகளை வினைத்திறன் பூரணத்துவம் மிக்க உள்ளக, கட்டுப்பாட்டு முறைமை தாபிக்கப்பட்டுள்ளது.

# 2024.12.31 ஆம் திகதியில் நகர குடியிறுப்பு அபிவிருத்தி அதிகார சபையின் புதிய பணிப்பாளர் சபை

**நகர குடியிறுபபு அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்தின் பிரகாரம் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படுகின்ற பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள்**



**பொறியியலாளர் திரு எல்.பி. குமுதுலால்**
**பணிப்பாளர் சபை அங்கத்தவர்**

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்தின் பிரகாரம் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படுகின்ற அங்கத்தவர் பொறியியலாளர் திரு எல்.பி .குமுதுலால் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பதவியை வகிப்பதுடன் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் சுற்றாடல் பொறியியல் முகாமைத்துவம் தொடர்பில் பட்டத்தினையும் சிவில் பொறியியல் தொடர்பில் பட்டத்தினையும் கற்றுள்ளார்.
அத்துடன் பல நிறுவனங்களில் பணிப்பாளர் சபை அங்கத்துவத்தினை வகிப்பதுடன் நீர் விநியோக அமைச்சின் பணிப்பாளர் மற்றும் மேலதிக செயலாளர் (கருத்திட்டம் கண்காணிப்பு) உட்பட முக்கிய பதவிகளையும் வகித்தவராவார்.



**திரு என்.பீ.எம். ரணதுங்க**
**பணிப்பாளர் சபை அங்கத்தவர்**

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்தின் பிரகாரம் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படுகின்ற திரு என்.பீ.எம் ரணதுங்க அவர்கள் திட்டமிடல் சேவையிலும் பதவி வகித்துள்ளதடன் தற்போது ிதேசிய விடமைப்ப அபிவிருத்தி அதிகார சபையில் பதவியினை வகிக்கின்றார்.

அத்துடன் பல் நிறுவனங்களில் பணப்பாளர் சபை அங்கத்துவத்தினை வகிக்கின்றார்.



**திரு எச்.எம்.ஜே.எம்.ஹேரத்**
**பணிப்பாளர் சபை அங்கத்தவர்**

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையில் சட்டத்தின் பிரகாரம் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படுகின்ற திரு எச்.எம்.ஜே.எம்.ஹேரத் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபை உள்ளூராட்சி மற்றும் தொழிலமைச்சின் நீதி மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி பிரிவின் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) பதவியில் பணியாற்றுகின்றவர்.



**திருமதி ரேணுக்கா கொலம்பகே**
**பணிப்பாளர் சபை அங்கத்தவர்**

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் பிரகாரம் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படுகின்ற அங்கத்தவர் திருமதி ரேணுக்கா கொலம்பகே நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பிரதான நிதி உத்தியோகத்தர் பதவியில் பணியாற்றுகின்றவர்.

## நகர குடியிறுப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள்



**கட்டிடக் கலைஞர் திரு சித்துமினி ரத்ன மலல**
**பணிப்பாளர் சபை அங்கத்தவர்**

மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் கட்டிடக்கலை பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர், பட்டயம் பெற்ற கட்டிடக்கலைஞராக பணியாற்றுபவர். மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் கட்டிடக்கலை தொடர்பான பட்டப்பின் பட்டம், களனி பல்கலைக்கழக மொழியியல் தொடர்பான பட்டப்பின் பட்டம் கொழும்பு பல்கலைக்கழகத்தின் உளவளத்துணை தொடர்பில் பட்டப் பின் டிப்ளோமா மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் கட்டுமானத்துறை தொடர்பில் விஞ்ஞானவியல் பட்டத்தினையும் கற்றுள்ளார்.
அத்தோடு இலங்கை கட்டிடக் கலைஞர் நிறுவனத்தின் பட்டயம் பெற்ற கட்டிடக்கலை நிபுணர் ஒருவரும் ஆவார். பாடத்திட்ட அபிவிருத்தி தேசிய கல்வி நிறுவனத்தினதும், கைத்தொழில் அமைச்சினதும் அங்கத்தவர்-தோல்கள் பிரிவின் பொருட்டு ஆலோசகர் ஒருவராக பல நிறுவனங்களில் ஆலோசனை குழுவின் அங்கத்துவத்தினை வகிக்கின்றவர்.



**சட்டத்தரணி திரு வீ. ஈ. வெல்லப்புலி**
**பணிப்பாளர் சபை அங்கத்தவர்**

சட்டத்தரணி ஒருவராக பணியாற்றுவதுடன் கலைத்துறையில் கௌரவ பட்டத்தினையும் பொருளியலில் பட்டப்பின் பட்டத்தினையும் பெற்றுள்ளார்.
மேலும் உதவி பணிப்பாளராகவும்(சட்டம்) இலஞ்சம் மற்றும் ஊழல்கள் விசாரணைகள் ஆணைக் குழுவில் பணியாற்றியுள்ளார். அரச சட்டத்தரணியாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் நான்கு வருடங்கள் மட்டளவிலான காலம் பணியாற்றியுள்ளார். மேலும் 2012 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை சுயேச்சை ஆலோசகர் ஒருவராகவும் பணியாற்றுகின்றார



**பொறியியலாளர் திரு ஜானக்க பெரேரா**
**பணிப்பாளர் சபை அங்கத்தவர்**

மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் இயந்திரவியல் பொறியியல் பட்டதாரி ஒருவர் என்பதுடன் தாய்லாந்தில் ஆசிய தொழில்நுட்ப நிறுவனத்தின் பட்டப்பின் பட்டத்தினையும் பெற்றுள்ளார்.
மேலும் தெரிவு செய்யப்பட்ட ஆசிய நாடுகளின் தேசிய மட்டத்தில் தொழில்நுட்ப ஆற்றல்கள் அபிவிருத்தி தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆராய்ச்சிக் கருத்திட்டம் ஒன்றில் பணியாற்றியுள்ளார்.
கட்டுமானக் கைத்தொழில், ஆடைத், துறை உணவு பதனிடல் மற்றும் இயந்திர உபகரண உற்பத்தி (தேயிலை மற்றும் இறப்பர் பதனிடல்) தொடர்பான துறையில் 33 வருடங்கள் மட்டளவில் கைத்தொழில் முகாமைத்துவ அனுபவத்தினைக் கொண்டவர்.

# 2024.01.01 முதல் 2024.10.01 திகதிவரை நகர குடியிறுப்பு அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளர் சபை



**திரு ஹேரத் ஆராச்சிலாகே நிமேஷ் தில்ஷான் ஹேரத் பணிப்பாளர் சபை அங்கத்தவர் (நிறைவேற்று)**

நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பதவியை வகிப்பதுடன் பல நிறுவனங்களின் பணிப்பாளர் சபை அங்கத்தவர் பதவியினை வகிக்கிறார்.
இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான விஞ்ஞானவியல் கௌரவ பட்டம் பெற்றவர்(SLIIT)

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் வணிக நிர்வாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பினை பெற்றுள்ளார்.

சுற்றுலாத்துறை, சந்தைப்படுத்தல், வணிக அபிவிருத்தி, விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ கருத்திட்ட முகாமைத்துவம், மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் தொடர்பான 8 வருடத்திற்கு மேற்பட்ட கால அனுபவத்தோடு வணிக முகாமைத்துறையில் 15 வருடத்திற்கும் மேற்பட்ட கால சேவை அனுபவத்தினை கொண்டுள்ளவர்.
மேலும்
தலைவர் நகர அபிவிருத்தி அதிகார சபை
பணிப்பாளர் கொழும்பு லேண்ட் டெவலப்மெண்ட் நிறுவனம்
பணிப்பாளர் லங்கா ரெஸ்ட் ஹவுஸ் நிறுவனம்
தலைவர் நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்தி தனியார் நிறுவனம்
பணிப்பாளர்ஒனாலி ஹோல்டிங்ஸ் நிறுவனம்
பணிப்பாளர் தேயிலை இறப்பர் மற்றும தென்னந்தோட்ட பகுதி பிரிக்கும் கட்டுப்பாட்டுச் சபை
ஆகிய நிறுவனங்களில் பதவிகளை வகிக்கின்றவர்.



**திரு ரஜீவ் சூரியாரச்சி, பணிப்பாளர் சபை அங்கத்தவர்(நிறைவேற்று))**

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பதவியை வகிப்பதுடன் பல நிறுவனங்களின் பணிப்பாளர் சபை அங்கத்தவர் பதவியினை வகிக்கின்றவர்.

பணிப்பாளர் சபை அங்கத்தவர் வீடமைப்பு நிதிக் கூட்டுத்தாபனம்
பணிப்பாளர் சபை அங்கத்தவர் நகர அபிவிருத்தி அதிகார சபை
பணிப்பாளர் சபை அங்கத்தவர் ஹோட்டல் அபிவிருத்தியாளர்களின்(லங்கா) நிறுவனம்
பணிப்பாளர் தேயிலை இறப்பர் மற்றும் தென்னந்தோட்ட பகுதி பிரிக்கும் கட்டுப்பாட்டு சபை
உப தலைவர் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனம் (2019 - 2022) வரை
தலைவர் Cooplife Insurance Company
பணிப்பாளர் வீதி அபிவிருத்தி அதிகார சபை
இடர் முகாமைத்துவ பிரதி அமைச்சரின்ஒருங்கிணைப்புச் செயலாளர்
நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ பிரதி அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளர்(2010 - 2015)
ஒருங்கிணைப்பு செயலாளர் நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி (2006 - 2010)



**திரு போத்தலே அப்புஹாமிலாகே ருக்மல் சாமிந்த பியரத்ன பணிப்பாளர் சபை அங்கத்தவர் (நிறைவேற்று)**

நிதி அமைச்சின் கருத்திட்ட முகாமைத்துவ திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் பதவியில் பணியாற்றுகின்றவர் தற்போது,

கொழும்பு பல்கலைக்கழகத்தில் பிரதேச திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான இளமானிப் பட்டதாரி 2015
களனி பல்கலைக்கழக வணிக முகாமைத்துவம் (மனித வள முகாமைத்துவம் தொடர்பில் விசேட) இரண்டாம் தர மேல் மட்ட பட்டத்தினைப் பெற்றுள்ளார்.
மிலோதா நிதிக் கற்கை நிறுவனத்தில் கருத்திட்டக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு தொடர்பில் டிப்ளோமா 2018
ICTAD நிறுவனத்தின் பெறுகைச் செயற்பாடு மற்றும் ஒப்பந்த முகாமைத்துவம் தொடர்பில் உயர் சான்றிதழ் பாட நெறி-2009
DIPPCA - SLIDA நிறுவனத்தின் அரச பெறுகைச் செயற்பாடு மற்றும் ஒப்பந்த நிர்வாகம் தொடர்பில் உயர் கல்வி டிப்ளோமா – 2008
அரசாங்க பெறுகைச் செயற்பாட்டு முகாமைத்துவம் தொடர்பில் 08 வருட தொழிற்சார் அனுபவம் - (2005-2012)
பிரதேச திட்டமிடல் தொடர்பில் 05 வருட அனுபவம் (2012-2017)
கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு தொடர்பில் 04 வருட அனுபவம்(2017-இதுவரையில்)



**திரு ஏக்கநாயக்க வளவ்வே நளின் சமரக்கோன் பணிப்பாளர் சபை அங்கத்தவர் (நிறைவேற்றுனர் அல்லாத)**

உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராக பணியாற்றுகின்றதுடன் தற்போது

-Senior Attorney - at -Law as an Apprentice as AJS Associate & Legal Consultants 2012

-Junior partner at at-Law as an Apprentice as AJS Associate & Legal Consultant 2013-2015

- Partner at AJS Associate & Legal Consultant - 2015-2019
Independent Counsel & Legal Consultant-2013 to date
Partner at Samarakoon & Ranasinghe Associates from 2018 to date

இலங்கையில் உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராக 2012 ஆம் ஆண்டில் சத்தியப்பிரமாணம் செய்தல்.
இலங்கை சட்டக் கல்லூரி சட்ட இறுதி ஆண்டுப் பரீட்சையை 2011 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக பூர்த்தி செய்தல்

2011ம் ஆண்டில் சட்ட இளமாணிப் பட்டத்தினைப் பெற்றுக் கொள்ளல்(திறந்த பல்கலைக்கழகம்)

ஆங்கில டிப்ளோமா(NIBM) 2013 தொழிலாளர் முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் படிப்பினை பெற்றுக்கொள்ளல்(களனி பல்கலைக்கழகம்)





**திரு குளப்பு தந்திரி கோராலலாகே பிரசன்ன அரம்பத் பணிப்பாளர் சபை அங்கத்தவர் (நிறைவேற்றுனர் அல்லாத)**

உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராக பணியாற்றுவதுடன் பல நிறுவனங்களின் பணிப்பாளர் சபை அங்கத்துவத்தினை வகிக்கின்றார்.

சட்ட இளமானி பட்டம்(திறந்த பல்கலைக்கழகம்) 2011
ஆங்கில டிப்ளோமா(NIBM)2013
தொழிலாளர் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு (களனி பல்கலைக்கழகம்)
ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனம்- உயர் குழு அங்கத்தவர்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம் - பணிப்பாளர் சபை அங்கத்தவர்.
மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ஒருவராக 1992 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பணியாற்றியுள்ளார்.

1992 முதல் 2015 வரையிலான காலத்திற்குள் மனித உரிமைகள் மீறல் விசாரணைகள்.
* 1992 முதல் 1996 வரையில் மனித உரிமைகள் சிறப்புப் படையணியில் 04 வருட அனுபவம்.(கனிஷ்ட விசாரணை உத்தியோகத்தர் ஒருவராக)
உத்தியோகத்தர் ஒருவராக பணியில் இணைந்து சிரேஷ்ட விசாரணை உத்தியோகத்தர் ஒருவராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.
(நிர்வாக மற்றும் நிதிப் பணிப்பாளராக)
* 2013.06.12-ம் திகதியிலிருந்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நிர்வாகம் மற்றும் நிதி உத்தியோகத்தர் வருவதாக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

**திரு ஜீ.சீ.ஏ.யூ.பிரணாந்து பணிப்பாளர் சபை அங்கத்தவர் (நிறைவேற்ற அல்லாத)**

வணிக பீடம் ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் (1989-1992)

ஊடக சுதந்திரம் மற்றும் வெளியீடுகள் தொடர்பில் (International Academy for Leadership, Germany)

அரசியல்
மூலோபாயம் தொடர்பான (Council of Asia Liberals & Democrats Indonesia)

இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர்-இளைஞர் அபிவிருத்தி மற்றும் தொழில் அமைச்சு 1990-1994

பயிலுனர் ஆசிரியர் - கல்வி அமைச்சு 1994-2006
சுதந்திர ஊடகவியலாளர் இலத்திரணியல் ஊடகம் 1994-2006

முகாமையாளர் மனித வளங்கள் மற்றும் சமூக ஏற்புடமை -Global Transportation and Logistics Pvt Ltd Seeduwa 2006-2012)

பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்-Lanka Television Network (Pvt)Ltd.(VFM Radio) 2012-2018)

பணிப்பாளர் மேம்படுத்துகை -SMR Engineering(Pvt)Ltd 2004 இது வரை)

இலங்கை பாராளுமன்ற அரச தரப்பு பிரதம கொரடாவின் ஒருங்கிணைப்புச் செயலாளர் 2020 முதல் இதுவரை.



**திரு.டீ.எஸ்.ஜே.ஹேவாவித்தாரன பணிப்பாளர் சபை அங்கத்தவர் (நிறைவேற்றுனர் அல்லாத)**

சிவில் பொறியியல் தொடர்பான இளமானி விஞ்ஞான பொறியியல் (கௌரவ)பட்டதாரி-பேராதனைப் பல்கலைக்கழகம்

பணிப்பாளர்/சிவில் பொறியியல்
SMR Engineering (Pvt)Ltd 2004-இதுவரை கொழும்பு

நெறிப்படுத்தல் பணிப்பாளர் இசுறு இன்ஜினியரிங் தனியார் நிறுவனம் 1993 – 2003

கருத்திட்ட முகாமையாளர் ஆலோசனை பொறியியலாளர் மற்றும் ஒப்பந்த தனியார் நிறுவனம் 1991 தொடக்கம் 1992 வரை

வேலைத்தள பொறியியலாளர்,மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம் 1986-1991

பொறியியலாளர்- பணி, வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை 1985-1986

தலைவர் இலங்கை மல்யுத்த சம்மேளனம்

தேசிய ஒலிம்பிக் குழுவின் நிறைவேற்று குழு அங்கத்தவர்

தலைவர் எஸ்.எம்.ஆர். இன்ஜினியரிங் தனியார் நிறுவனம்

நெறிப்படுத்தல் பணிப்பாளர் இசுறு இன்ஜினியரிங் தனியார் நிறுவனம் கொழும்பு - 07, 1993 தொடக்கம் 2003 ஆம் ஆண்டு வரை

நெறிப்படுத்தல் முகாமையாளர்,K.M.C.1994 - 1995



**திரு பிரதீப் வீரசேக்கர பணிப்பாளர் சபை அங்கத்தவர்(நிறைவேற்றுனர் அல்லாத)**

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான இளமானிப் (வணிகக் கற்கை)பட்டம் - 1997

கொழும்பு பல்கலைக்கழக முதுமானி (சேவை முகாமைத்துவம்) பட்டப்பின் கற்கைகள்-2016

கௌரவ வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கௌரவ அமைச்சர் திரு. பிரசன்ன ரணதுங்க அவர்களின் பிரத்தியேக செயலாளர் 2020
கௌரவ ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு மேம்படுத்துகை சுற்றாடல் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் திரு பிரசன்ன ரணதுங்க அவர்களின் பிரத்தியேக செயலாளர் - 2020

இலங்கை விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனப் பணிப்பாளர் சபை அங்கத்தவர்-2020
மேல் மாகாண முதலமைச்சர் மற்றும் கல்வி அமைச்சர் திரு பிரசன்ன ரணதுங்க அவர்களின் பிரத்தியேகச் செயலாளர்

நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் சபை அங்கத்தவர் 2023

கௌரவ துறைமுக அபிவிருத்தி மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் திரு ரெஜீ ரணதுங்க அவர்களின் ஒருங்கிணைப்புச் செயலாளர் 2001

கொழும்பு மாநகர சபையின் நலன்புரி உத்தியோகத்தர் 2009 தொடக்கம் 2024 வரை



**திரு கஹட்ட கங்கானம்லாகே சுஜீவ சம்பத்**
**பணிப்பாளர் சபை அங்கத்தவர் (நிறைவேற்றுனர் அல்லாத)**

கல்விப் பொது தராதர உயர்தர உயிரியல் விஞ்ஞானப் பிரிவு

கொழும்பு பல்கலைக்கழக மனிதவள அபிவிருத்தி நிலையத்தின் மனித வள முகாமைத்துவம் தொடர்பான உயர் டிப்ளமோ

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தின் அகில இலங்கை பிரதான செயலாளர் பதவியில் சேவையாற்றியிருத்தல்.
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் ஒருவராக பணிபுரிந்து இருத்தல்

மினுவாங்கொடை பிரதேச செயலகத்தில் இணைப்பு செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவராக 10 வருட பணி அனுபவும்
மினுவாங்கொடை பிரதேச சபையின் உப தலைவராக 2011 ஆம் ஆண்டில் இருந்து இருமுறை பணியாற்றி இருத்தல்
மேல் மாகாண முதலமைச்சரின் ஊடகச் செயலாளர் மற்றும் ஒருங்கிணைப்புச் செயலாளராக 10 வருட சேவைக் காலத்தினை முடித்திருத்தல

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளராக கடமையாற்றியிருத்தல்.

சுற்றுலாத்துறை அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளராக பணிபுரிந்திருத்தல்

கைத்தொழில், ஏற்றுமதி, முதலீட்டு மேம்படுத்துகை அமைச்சின் ஒருங்கிணைப்புச் செயலாளராக பணிபுரிதல்
தெற்காசிய வலய இளைஞர் மாநாட்டில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துதல்.

## பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் பொருட்டு புதிய பணிப்பாளர் சபைக் குழு அங்கத்தவர்களின் பங்கேற்பு

| பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர | கூட்ட இலக்கமும் நடாத்தப்பட்ட திகதியும | வருகை |
|---|---|---|
| | 2024.12.18 | |
| | 11/2024 | |
| திரு ஜே.எஸ்.டீ.எம். அசங்க அபேவர்தன | √ | 1/1 |
| பொறியியலாளர் திரு. எல்.பீ. குமுதுலால் | √ | 1/1 |
| திரு.என்.பீ.எம். ரணதுங்க | √ | 1/1 |
| திரு. எச்.எம்.ஜே.எம். ஹேரத் | √ | 1/1 |
| திருமதி ரேணுக்கா கொலம்பகே | √ | 1/1 |
| கட்டிடக் கலைஞர் திரு.சித்துமின ரத்மலல | √ | 1/1 |
| சட்டத்தரணி திரு.வீ.ஈ. வெல்லப்புலி | √ | 1/1 |
| பொறியியலாளர் திரு. ஜானக்க பெரேரா | √ | 1/1 |

## பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் பொருட்டு பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பங்கேற்பு 2024.01.01 – 2024.10.01

| பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர் | கூட்ட இலக்கமும் நடாத்தப்பட்ட திகதியும | | | | | | | | | | | வருகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2024.01.02 | 2024.01.30 | 2024.02.28 | 2024.03.26 | 2024.04.10 | 2024.05.28 | 2024.07.03 | 2024.07.25 | 2024.08.21 | 2024.08.30 | 2024.09.12 | |
| | 11/ 2023 | 01/ 2024 | 02/ 2024 | 03/ 2024 | 04/ 2024 | 05/ 2024 | 06/ 2024 | 07/ 2024 | 08/ 2024 | 09/ 2024 | 10/ 2024 | |
| திரு.ஆர்.எம்.எஸ்.பீ.கே. ரத்னாயக்க | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | 11/11 |
| திரு எச்.ஏ.ஹேரத் | √ | √ | √ | √ | - | √ | - | - | √ | - | - | 11/06 |
| திரு.ரஜீவ் சூரியாரச்சி | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | 11/11 |
| திரு பீ.ஏ.ஆர்.சீ.பியரத்ன | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | 11/11 |
| திரு.ஈ.டபிள்யு. நளின் சமரக்கோண் | √ | √ | √ | √ | √ | √ | - | √ | √ | √ | √ | 11/10 |
| திரு.கே.பீ.கே.பீ. அரம்பத் | √ | √ | √ | √ | √ | √ | - | √ | √ | √ | √ | 11/10 |
| திரு.ஜீ.சீ.ஏ.யூ. பிரணாந்து | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | 11/11 |
| திரு.பீ.எஸ்.ஜே. ஹேவாவித்தாரண | √ | √ | √ | √ | √ | √ | √ | - | - | √ | √ | 11/09 |
| திரு. பிரதீப். விஜேரத்ன சேக்கர | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | - | - | - | 11/08 |
| திரு.கே.கே. சுஜீவ சம்பத் | √ | √ | √ | √ | √ | √ | - | √ | √ | √ | - | 11/09 |

# ஆலோசனைக் குழு மீளாய்வும் கட்டமைப்பும்

2008 ம் ஆண்டின் 36ம் இலக்க சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட நகர குடியிறுப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 10வது பிரிவிற்கமைய ஆலோசனைக்குழு தாபிக்கப்பட்டதுடன், நகர குடியிறுப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்திற்கு அமைய இக்குழுவானது போதுமானளவு ஆண் பெண் பிரதிநிதிகளைக் கொண்டுள்ளதனை உறுதிப்படுத்திக் கொண்டு அலோசனைக் குழுத் தலைவர் ஒருவரினதும் 14 அங்கத்தவர்களுக்கு மேற்படாத ஆட்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிகார சபைச் சட்டத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவின் மூலம் கீழ் குறிப்பிடப்படும் பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும் அவையாவன.

அதிகார சபையின் முன்மொழிவுகள், திட்டங்கள், கருத்திட்டம் மற்றும் செயற்பாட்டு வேலைத்திட்டங்களுக்குறிய ஏதேனும் ஒரு விடயத்தினை அங்கீகரிக்கும் போதும் அது தொடர்பில் செயற்படும் போதும் அது தொடர்பில் செயற்படும்போதும் ஆலோாசனைகளை வழங்குதல்.

ஆலோசனைக் குழுவின் பணிப்பொறுப்புக்கள் தொடர்பில் பணிப்பாளர் சபையின் அங்கீகரித்த சட்டதிட்டங்கள் பணிகளை நிறைவேற்றுதல்.

## அதிகார சபையின் ஆலோசனைக் குழுவின் அமைப்பு

| | |
|---|---|
| சட்டத்தரணி திரு கே.டீ.கே. பிரசன்ன அரம்பத் | - குழுத் தலைவர் |
| பட்டய பொறியியலாளர் திரு டி.ரீ.ராஜசேகரன் | - குழு அங்கத்தவர் |
| பட்டய கட்டக் கலைஞர் திருமதி பீ.எல்கே. இந்திக்கா பாலசூரிய | - குழு அங்கத்தவர் |
| திரு கே.டீ. நிஹால் ஹேவகே | - குழு அங்கத்தவர் |
| திரு தரங்க நளீன் கம்லத் | - குழு அங்கத்தவர் |
| செல்வி சானிக்கா கொபல்லவ | - குழு அங்கத்தவர் |
| திருமதி சுஜானி போகொல்லாகம | - குழு அங்கத்தவர |



குழுத் தலைவர்
சட்டத்தரணி திரு கே.டீ.கே. பிரசன்ன அரம்பத்



குழு அங்கத்தவர திரு
பட்டய பொறியியலாளர்
டி.ரீ.ராஜசேகரன்



குழு அங்கத்தவர்
பட்டய கட்டக் கலைஞர்
திருமதி பீ.எல்கே. இந்திக்கா பாலசூரிய



குழு அங்கத்தவர்
சிரேஷ்ட விரிவுரையாளர்
திரு கே.டீ. நிஹால் ஹேவகே



குழு அங்கத்தவர்
செல்வி சானிக்கா கொபல்லவ



குழு அங்கத்தவர்
திருமதி சுஜானி போகொல்லாகம

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் மீளாய்வு

சிறந்ததொரு நிதி அறிக்கையிடல் முறைமை ஒன்று காணப்படுவதனை உறுதி செய்வதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கும் உரிய அலுவலர்களுக்கு சரியான, பொருத்தமான மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக் கொடுக்கக்கூடியவாறு, அதனை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்வதை உறுதி செய்வதற்கும், சட்டங்கள் மற்றும் அதிகாரசபையின் கொள்கைகள் மற்றும் நியாயாதிக்க மற்றும் கூட்டிணைக்கப்பட நிர்வாகங்களுக்கு ஏற்பன போலவும் கணக்கீட்டு மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டை முகாமைத்துவம் செய்வதற்கும், மதிப்பீடு செய்யும் அதிகாரங்களை கணக்காய்வுக் குழுவிடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் திறைசேரியின் பிரதிநிதி மற்றும் ஏனைய பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் இரண்டு பேரை (02) உள்ளடக்கியதாக கணக்காய்வுக் குழு உள்ளது. அரச தொழில்முயற்சிகள் வழிகாட்டல்களுக்கு அமைய பணிப்பாளர் சபைக்கான திறைசேரியின் பிரதிநிதி, பிரதிப் பணிப்பாளர் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு, திரு. பி.ஏ.ஆர்.சி. பியரத்ன குழுவின் தவிசாளராகவும், ஏனைய பணிப்பாளர் சபை உறுப்பினர்களான சட்டத்தரணி திரு நளீன் சமரக்கோன் மற்றும் திரு ஜி.சி.ஏ.யூ. பெர்ணாந்து ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக செயற்பட்டார்கள்.

தேசிய கணக்காய்வுப் பணிமனையின் கணக்காய்வு அத்தியட்சகர் மற்றும் நேரொத்த அமைச்சின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் ஆகியோர் அவதானிப்பாளர்களாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டதுடன், தேவையானவாறு நகரக் குடியிறுப்பு அதிகாரசபையின் பிரிவுத் தலைவர்கள் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் ஏனைய அலுவலர்களும் கூட்டங்களில் பங்கேற்றார்கள். அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் இக்குழுவின் செயலாளராக செயற்பட்டார். உள்ளகக் கணக்காய்வாளரால் தயார் செய்யப்பட்ட 2024ம் ஆண்டுக்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் குழுவின் ஆராய்ந்து பார்த்தன் பின்னர் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பொருட்டு சிபாரிசு செய்தது.

மீளாய்வு ஆண்டிற்குள் இரண்டு குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது. கணக்காய்வு அறிக்கைகள், கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பிலான சிக்கல்கள் மற்றும் பதில்கள், உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வு அவதானிப்புக்கள், உள்ளகக் கட்டுப்பாட்டுக் கட்டமைப்புக்கள் உட்பட ஆண்டறிக்கைகளை உரிய காலத்திற்குள் தயார் செய்து சமர்ப்பிப்பதன் அவசியத்தன்மை பற்றி விசேட கவனம் செலுத்துவதும் உள்ளடங்களாக மேம்படுத்தல்கள் மற்றும் தேவையான ஏனைய துறைகள் பற்றியும் குழு கலந்துரையாடியது. தேவையான சீராக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் மேற்கொண்ட தீர்மானங்களுக்குறிய பின்பணி ஆய்வு நடவடிக்கைகளும் கலந்துரையாடப்பட்டது.

கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள் உள்ளடங்கிய கூட்டக் குறிப்புக்கள் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

உறுப்பினர்கள், அவதானிப்பாளர்கள் மற்றும் அலுவலர்கள் வழங்கிய பெறுமதிமிக்க பங்களிப்பு மற்றும் விசேடமாக கணக்காய்வுச் செயன்முறையின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட மிகப்பெறுமதி வாய்ந்த அவதானிப்புக்களையும் இங்கு உயர்வாக மதிக்கின்றேன்.



**குழுத் தலைவர்**
**பி.எ.ஆர்.சீ. பியரத்ன**



**குழு அங்கத்தவர்**
**சட்டத்தரணி நளின் சமரக்கோண்**



**குழு அங்கத்தவர்**
**ஜீ.சீ.ஏ.யூ. பிரணாந்து**

பணிப்பாளர் நாயகம், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு, நகர குடியிறுப்பு அபிவிருத்தி அதிகார சபை

# நகர குடியிறுப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவ கட்டமைப்பு

2024.12.31 திகதியில் கட்டமைப்பு
நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை



# நகர குடியிறுப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான உத்தியோகத்தர் சபை



திரு.ஜே.எஸ்.டீ.எம் அசங்க அபேவர்தன
தலைவர்
2024.10.16 திகதியிலிருந்து



திருமதி கே.கே.டபிள்யூ துசாரி த சில்வா
பணிப்பாளர் தலைமையதிபதி 2024.11.19 தொடக்கம்
பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் தக.மு.தொ)
2024.11.18 வரை



திரு. பிரியந்த ரத்னாயக
தலைவர்
2022.08.04 தொடக்கம் 2024.10.10



விஜயானந்த ஹேரத்
பணிப்பாளர் தலைமையதிபதி
2022.08.04 தொடக்கம்
2024.11.18



திருமதி பி.எம்.எ. வீரக்கொடி
பணிப்பாளர் (சமூக வலுவூட்டல்)
2024.03.01 வரை



திரு.எஸ். சுரங்க பணிப்பாளர்
(திட்டமிடல்)
கடமை தழுவல்
2024.11.26 வரை



குழு அங்கத்தவர்
திரு.ஜீ.சீ.ஏ.யூ. பிரணாந்து பதில்
பணிப்பாளர் (நிதி)
2024.09.09 முதல்



திரு.ஆர்.ஏ.சுசன்த
உதவிப் பணிப்பாளர்
சமூக வலுவூட்டல்
2024.03.02 முதல்



திரு. எ.எம்.பீ அதாவுத
பதில் பணிப்பாளர் (நிதி)
2023.11.30 முதல் 2024.09.06 வரை
பதில் பணிப்பாளர் (அறவீடுகள்)



திரு ஏ.ஜீ.ஆர். ஞானப்பிரிய
பதில் பணிப்பாளர் (நிர்வாகம்)
பதில் பணிப்பாளர் (பெறுகை)
2024.09.09 முதல்



திரு எல்.ஆர்.சாந்த
பிரதிப் பணிப்பாளர்
(உள்ளகக் கணக்காய்வு)



செல்வி அனுசா ராஜபக்ஷ
உதவிப் பணிப்பாளர்
(கட்டிடக் கலை)



திருமதி கே.ஐ. தர்ஷினி
உதவிப் பணிப்பாளர்
(சமூக வலுவூட்டல்)



திருமதி. எம். புஷ்பா
உதவிப் பணிப்பாளர்
(சமூக வலுவூட்டல்)



திரு.ஏ.எல்.ஹர்ஷ திலங்கர
உதவிப் பணிப்பாளர்
(காணி மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவம்)



திருமதி ஜயாத்ரீ ஆரியதிலக்க
உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி)
2024.10.03 முதல்



திருமதி ஷலனி அகலவத்தை
உதவிப் பணிப்பாளர் (சட்டம்)



செல்வி. ஏ.ஏ.வட்டகெதர
உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி)
கடமை தழுவல் 2024.11.26 முதல்

# பௌதீக அபிவிருத்தி வேலைத்திட்டம்





## பௌதீக அபிவிருத்தி வேலைத்திட்டம்

2008 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்திற்கு அமைய நகர பிரதேச குறைந்த வசதிகளை கொண்ட குடியிருப்புக்களில் வாழும் மக்களுக்கு பௌதீக அபிவிருத்தி மற்றும் சமூக அபிவிருத்தி என இருவகையான பிரவேசங்கள் ஊடாக கருத்திட்டங்களையும் வேலைத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவது அதிகார சபையின் முக்கிய குறிக்கோளாகும் என்பதுடன் அதன் ஒரு பிரவேசமாக பௌதீக அபிவிருத்தி வேலைத் திட்டத்தினை குறிப்பிட முடியும்.

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையால் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்பட்ட வீடமைப்புக் கருத்திட்டங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் உட்பட நிரந்தர நகர குடியிருப்பு அபிவிருத்தியினை உருவாக்கும் நிமித்தம் அரசாங்க தனியார் கூட்டு முயற்சியின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள கருத்திட்டங்கள் நடுத்தர வருமானம் பெறும் வீடமைப்புக் கருத்திட்டங்களின் ஆரம்பகட்ட அங்கீகாரங்கள் மற்றும் அனுமதி நடவடிக்கைகள் அத்துடன் காணி சுவீகரிப்பு மற்றும் காணி கொள்ளல் நடவடிக்கைகளை 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டது.

அதன் பிரகாரம் அந்த வீடமைப்புக் கருத்திட்டங்கள் தொடர்பிலும் அக்கருத்திட்டங்களிலிருந்து பெற்றுக் கொண்ட பௌதீக முன்னேற்றம் தொடர்பான தகவல்களையும் கீழுள்ள பிரகாரம் வகைப்படுத்த முடியும் .

மேலும் 2021 ஆம் ஆண்டில் மக்களின் பாவனைக்கு வழங்கப்பட்ட நடுத்தர வருமானம் பெறும் வீடமைப்புக் கருத்திட்டமான லுணாவை "சீவீவ்" வீடமைப்பு கருத்திட்டத்தில் பயனாளிகளுக்கு உரித்திற்கான உறுதிகளை வழங்குதலும் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டது..

## 2024 ஆம் ஆண்டில் அரசாங்க தனியார் கூட்டிணைப்பின் பிரகாரம் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டிடப்பட்ட நடத்தர வருமானம் பெறுவோருக்கான வீடமைப்புக் கருத்திட்டம்

### வெலிசரை மில்லகஹவத்த நடுத்தர வர்க்கத்தினருக்கான வீடமைப்புக் கருத்திட்டம்.

இக்கருத்திட்டமானது 2025 ஆம் ஆண்டில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டதுடன் கம்பஹா மாவட்டத்தின் வத்தளை பிரதேச செயலகப் பிரிவின், 179 எலபிட்டிவெல கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குச் சொந்தமான 2.4532 ஹெக்டேயர் அளவினையுடைய இக்காணியானது அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6 (1) பிரிவின் பிரகாரம் இலவச கொடுப்பனவு ஒன்றாக நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சுவீகரித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

அமை.ப 24/0165/618/010 என்ற இலக்கமும் 2024.01.22 ஆம் திகதியிடப்பட்டதுமான அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற அங்கீகாரத்தின் பிரகாரம் அரச பெறுகைச் செயற்பாட்டு வழிகாட்டலின் பிரகாரம் தேசிய அல்லது சர்வதேச போட்டித் தன்மை வாய்ந்த விலைகள் முறைக்கு அமைய பெறுகைச் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் கருத்திட்ட முன்மொழிவுகளை கோருவதற்காக மண்ணின் நிலைப்பாடு தொடர்பான கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் நோக்கத்தினை முன் வைத்துக்கொண்டு கருத்திட்டத்திற்கான அடிப்படை மண் பரிசோதனை அறிக்கையும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் இக்கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான ஆரம்ப அனுமதிச் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்ப படிவங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் தேசிய நீர் வளங்கள் மற்றும் நீர் விநியோக சபையின் பிராந்திய அலுவலகத்திற்கும் (களனி) முன்வைக்கப்பட்டுள்ளது.

### நிட்டம்புவை ஓச்சர்ட்வத்தை நடுத்தர வர்க்கத்தினருக்கான வீடமைப்புக் கருத்திட்டம்.

இக்கருத்திட்டமானது 2025 ஆம் ஆண்டில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்லை பிரதேச செயலகப் பிரிவின் நம்மாதளுவை கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குச் சொந்தமான 3.6932 ஹெக்டேயர் அளவினை உடைய காணி 2296/36 என்ற இலக்கத்தினையுடைய அதிவிசேட வர்த்தமானி மூலம் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சுவீகரித்துக் கொண்டுள்ளது.

இக்கருத்திட்டத்தினை செயற்படுத்தும் பொருட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சிபாரிசு 2024.06.14ஆம் திகதி கிடைத்துள்ளது.

அதன் பிரகாரம் அமை.பத் 21/0911/340/018 என்ற இலக்கத்தினையுடைய 2025.05.24ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய தேசிய போட்டி விலையின் கீழ் விலைகள் கோரப்பட்டுள்ளதுடன் அதற்கான மதிப்பீட்டு முன்மொழிவு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும் இக்கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அடிப்படை மதிப்பீட்டுச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்ப படிவங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபை தேசிய மின்சார சபை மற்றும் தேசிய நீர் வளங்கள் மற்றும் நீர் விநியோக சபைக்கு முன்வைத்துள்ளது.

### ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே கலப்பு அபிவிருத்தி வீடமைப்பு கருத்திட்டம்.

இக்கருத்திட்டம் 2025 ஆம் ஆண்டில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே பிரதேச செயலகப் பிரிவின் 522 A, எத்துல்கோட்டே மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு சொந்தமான 0.2795 அளவினை உடைய நிலப் பிரதேசத்தை கொண்ட இக்காணியானது அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6(1) பிரிவுக்கு அமைய இலவச கொடுப்பனவு ஒன்றாக நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சுவீகரித்துக் கொண்டுள்ளது.

மேலும், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே தபால் காரியாலய கட்டிடம் மற்றும் காணிகளுக்கான மதிப்பீட்டு அறிக்கை அரசாங்கத்தின் மதிப்பீட்டு திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

### ஹிக்கடுவ, துடுவேகொட கலப்பு அபிவிருத்தி வீடமைப்பு கருத்திட்டம்.

நகர்ப்புற வலயங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக பௌதீக அபிவிருத்திக் கருத்திட்டங்களை மேற்கொள்ளும் பொருட்டு கருத்திட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டு துடுவேகொட நகர வீடமைப்பு கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இருப்பினும் BD/CBP/01/04-2022 என்ற இலக்கத்தினுடைய அரச செலவுக் கட்டுப்பாட்டு தொடர்பான தேசிய பாதீட்டு சுற்றறிக்கைக்கு அமைய பௌதீக அபிவிருத்திக் கருத்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகளை இடைநிறுத்த வேண்டி ஏற்பட்டது. மேற் சொன்ன காரணத்தின் அடிப்படையில் இக் கருத்திட்டம் அரசாங்க தனியார் கூட்டினைப்பு முறையின் கீழ் மேற்கொள்வதற்காக புதிய கருத்திட்ட முன்மொழிவு ஒன்று தயாரிக்கப்பட்டது.

அக்கருத்திட்ட முன்மொழிவு அங்கீகாரத்தின் பொருட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு முன் வைக்கப்பட்டுள்ளது.

இக் கருத்திட்டத்திற்குரிய 0.6655 ஹெக்டேயர் பரப்பளவினையுடைய காணி அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6(1) பிரிவின் பிரகாரம் இலவச கொடுப்பனவாக நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பெயரில் எடுத்துக் கொள்வதற்கான

நடவடிக்கைகளின் இறுதி கட்டங்களில் தற்போது உள்ளதுடன் 1964 ஆம் ஆண்டின் 28-ஆம் இலக்க காணி கொள்ளல் சட்டத்துக்கு அமைய காணிக்கு அண்மியதாக அமைந்துள்ள தனியார் காணித் துண்டும் இந்த வீடமைப்பு கருத்துத்திட்டத்திற்காக சுவீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### அத்துருகிரிய கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம்.

கடுவெல பிரதேச செயலக பிரிவில் 487A சாந்தாலோக்ககம கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு சொந்தமான 0.4046 ஹெக்டேயர் பரப்பளவினை உடைய நிலத்தில் இக் கருத்திட்டத்தினை 2025 ஆம் ஆண்டில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் இக்காணியானது 1964 ஆம் ஆண்டு 28-ம் இலக்க காணி சுவீகரிப்பு சட்டத்திற்கு அமைய நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### கடுவெலை கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம்.

கடுவெலை தபால் அலுவலகம் அமைந்துள்ள 0.2757 ஹெக்டேயர் பரப்பளவினையுடைய காணி நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சுவீகரித்துக் கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையால் 2024 ஆம் ஆண்டில் நடுத்தர வருமானம் பெறும் நகர மக்களுக்காக தனியாரின் பங்கேற்பு முறையின் கீழ் மேற்கொள்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த மேற்படி வீடமைப்பு கருத்திட்டங்களுக்கு உரிய ஆரம்ப அனுமதிகள் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் காணியினை சுவீகரித்துக் கொண்டு நடவடிக்கைகள் மற்றும் கருத்திட்டத்தினை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்குரிய அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாண்டிக்குள் ஏற்பட்ட பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியில் நாட்டின் சகல நிர்மாண நடவடிக்கைகளும் தடைப்பட்டதுடன் கருத்திட்டத்தின் பொருட்டு கருத்திட்ட அபிவிருத்தியாளர் ஒருவரோ அல்லது முதலீட்டாளர் ஒருவரையோ தேடிக் கொள்வது கடினமாக இருந்தது.

## நகர குடியிறுப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தபபட்ட குறைந்த வருமானம் பெறும் வீடமைப்புக் கருத்திட்டங்களின் வீடுகளை அகற்றுவதும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் சுவீகரிப்பு நடவடிக்கைகளும்

### அங்குலானை, சயுருபுற வீடமைப்புக் கருத்திட்டம்.

மொறட்டுவை பிரதேச செயலகப் பிரிவின் அங்குலானை வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 0.6695 ஹெக்டேயர் அளவினை உடைய பயிறுகஹவத்த, தொம்பகஹவத்த/வெட்டகெய்யாவத்த என்ற பெயரை உடைய காணி நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கும் பொருட்டு அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கான கொடுப்பனவுப் பத்திரம் தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இக்காணியின் உரிமம் அதிகார சபைக்கு கிடைத்தவுடன் இந்த வீடமைப்புக் கருத்திட்டத்தினை அகற்றியுள்ள பயனாளிகளுக்கு உறுதிகளை வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியுமாக உள்ளது.

மேலும் இந்த வீடமைப்புக் கருத்திட்டத்தில் வெளிவாரிப் பிரிவினரால் சேதமாக்கப்பட்டுள்ள 11 வீட்டலகுகளுக்கு நிரந்தர வதிவிடமில்லாத புதிய பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றிலிருந்து 8 வீட்டலகுகளை திருத்தம் செய்யும் நடவடிக்கைகள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### அனுராதபுரம் துரு இத்துருகம வீடமைப்பு கருத்திட்டம்.

அனுராதபுர மாவட்டத்தின் மத்திய நுவரகம் பலாத்த பிரதேச செயலகப் பிரிவில் 302 என்ற இலக்கத்தினையுடைய கிராம பிரிவான கட்டுக்கெலியாவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் 7.7586 ஹெக்டேயர் பரப்பளவினை உடைய பரசன்கஸ்வெவ மூக்கலான என்ற பெயரையுடைய காணியில் இக்கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இக்காணியானது அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6(1) பிரிவின் பிரகாரம் இலவச கொடுப்பனவொன்றாக அதிகார சபை பெற்றுக் கொண்டுள்ளது.

மேலும் இந்த வீடமைப்பு கருத்திட்டத்தின் பயனாளிகளுக்கு விடுவிக்கப்படாத வீடுகளை இவ்வாண்டில் பொருத்தமான பயனாளிகளுக்கு விடுவிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### தலவாக்கலை லிந்துளை வீடமைப்புக் கருத்திட்டம்.

நுவரெலியா மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவில் ஹொலிரூட் எஸ்டேட் என்ற பெயரை உடைய காணியில் இக்கருத்திட்டத்தினை ஆரம்பித்து பயனாளிகளுக்கு வழங்கியுள்ளதுடன் இக்காணிக்குறிய மதிப்பீட்டறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இக்காணிக்காண மறுசீரமைப்பு ஆணைக் குழுவினால் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சுவீகரித்துக் கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### சிலாபம் நரியாகொடல்ல வீடமைப்புக் கருத்திட்டம்.

புத்தளம் மாவட்டத்தின் சிலாபம் பிரதேச செயலகப் பிரிவில் 568 முன்னேஸ்வரம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் பரப்பளவில் 2.308 ஹெக்டேயர் அளவினை உடைய மீக்குளம் (தேன்குளம்) அல்லது நரியகொடல்ல என்ற பெயரை உடைய காணியில் இக்கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இக்காணி அதிகார சபைக்கு விற்பனை உறுதியொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாண்டில் வீடமைப்பு கருத்திட்டத்தில் வீடொண்டினை நிர்மாணிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய வேலைப் பகுதிகளின் பொருட்டு பொருத்தமான ஒப்பந்ததாரர் ஒருவரை தெரிவு செய்து கொள்வதற்கு பெறுகைச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்கருத்திட்டத்தின் வடிகாண் தொகுதிகளை நிர்மாணித்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக அதிகார சபையின் உள்ளக நிதியொதுக்கீடுகளில் இருந்து ரூ.மில்லியன் 2.86 இற்கான தொகை சிலாபம் பிரதேச சபைக்கு வழங்குவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைக்க செயலாளரின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள முன்வைக்கப்பட்டுள்ளது.

### சிங்கபுர மாடி வீட்டுக் கருத்திட்டம்.

திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவில் பொரளை வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் 0.4423 ஹெக்டேயர் பரப்பளவினையுடைய 48ஆம் இலக்க தோட்டம் என்ற பெயரையுடைய காணியில் இக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் காணியானது அரசாங்கத்தின் காணிகள் கட்டளை சட்டத்தின் 6(1) பிரிவின் பிரகாரம் இலவச கொடுப்பனவு ஒன்றாக அதிகார சபைக்கு சுவீகரித்துக் கொண்டுள்ளது.

### வதுலு செவன வீடமைப்புக் கருத்திட்டம்.

வதுலு செவன வீடமைப்பு கருத்திட்டம் அமைந்துள்ள காணியின் உரிமைத்துவத்தினையுடைய நகர அபிவிருத்தி அதிகார சபையின் இலவச கொடுப்பனவின் அடிப்படையில் அரசாங்கத்தினால் ஒப்படைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### சஹஸ்புர மாடி வீட்டுக் கருத்திட்டம்.

பொரளை “சஹஸ்புர” வீடமைப்புக் கருத்திட்டம் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முன்னோடி நிறுவனமான வரையறுக்கப்பட்ட ரியல் எஸ்டேட் எக்ஸ்சேஞ்ச்(தனியார்) நிறுவனத்தினால் “திறசர புறவர்” (நிலை பேரான நகரம்) வேலைத் திட்டத்தின் கீழ் கொழும்பு மாநகர சபை வலயத்திற்குள் குறைந்த வசதிகளுக்கு மத்தியில் வாழ்ந்த குடும்பங்களை இலக்காகக் கொண்டு நிர்மாணிக்கப்படுகின்ற மாடிவீடமைப்புத் திட்டம் ஒன்றாகும்.

இந்த மாடி வீடமைப்புத் தொகுதிக்குச் சொந்தமான 329 மீளுகைக்குட்பட்ட அலகுகள் பிரசித்த நொத்தாரிஸ் திருமதி.ரீ.லியனாரச்சி அவர்களால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 155ஆம் இலக்கம் மற்றும் 2018.02.21ஆம் திகதியின் உறுதி மூலம் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டது.

இந்த வீடமைப்புக் கருத்திட்டத்தின் வணிக அலகுகள் அதிகார சபைக்கு வருமானம் ஒன்று கிடைக்கின்ற பிரகாரம் அரசாங்கத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்குவதற்கும் நடவடிக்கைகள் தொகுக்கப்பட்டு வருகின்றது.

## நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட நடுத்தர வருமான வீடமைப்பு கருத்திட்டத்தில் விற்பனை செய்தல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்

### லுனாவை சீ வீவ் ரெசிடன்சீஸ் வீடமைப்புக் கருத்திட்டம்.

நடுத்தர வருமானம் பெறும் மற்றும் கீழ்மட்ட நடுத்தர வருமானம் பெரும் மக்களின் வீடமைப்புத் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் செலவிடக் கூடிய விலைக்கு வீடுகளை வழங்கும் முறை ஒன்றின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட 356 வீடமைப்பு அலகுகளைக் கொண்ட இந்த வீடமைப்பு கருத்திட்டத்தின் சகல வீட்டலகுகளும் பயனாளிகளின் பாவனைக்காக விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்த வீடமைப்புக் கருத்திட்டத்தின் நிர்மாண ஒப்பந்த நடவடிக்கைகள் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டதுடன் கருத்திட்ட முகாமைத்துவத்தினை அரசாங்க அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டு தாபத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இவ் வாண்டில் கருத்திட்டத்தின் பொருட்டு மீலாளுகை முகாமைத்துவ அதிகார சபையினால் மீளாளுகைச் சொத்தொன்றாக பிரகடனப்படுத்தும் இறுதிச் சான்றிதழ் 2024.0319-ம் திகதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த வீடமைப்புக் கருதிட்டத்தின் வெளிப்புற சுவர்களில் நீர் அடையாளங்களை பூசுவதற்குரியதாக தேசிய போட்டி ரீதியான விலை மனு திட்டத்தின் கீழ் விலை மனுக்கள் வரவழைக்கப்பட்டு ஒப்பந்தக்காரர் ஒருவரை தெரிவு செய்து கொள்வது இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டது.

எதிர்கால பௌதீக கருத்திட்டங்களில் சுற்றாடலை பாதுகாத்துக் கொள்வதற்கும் சுற்றாடலுக்கான எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகளை குறைப்பதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்.

## எதிர்கால பௌதீக கருததிட்டங்களில் சுற்றாடலை பாதுகாத்துக் கொள்வதற்கும் சுற்றாடலுக்கான எதிர்மறையான தாங்கங்களை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகளை குறைப்பதற்கும் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்

- மின் உற்பத்திக்கும் மனையலகுகளின் பொருட்டு சுடுநீரை வழங்குவதற்கும் சூரிய சக்தியை பயன்படுத்துதல்.
- கருத்திட்டங்களையும் பொதுவான இடங்களையும் பசுமையான வலயம் என அபிவிருத்தி செய்வதும் அவற்றின் எதிர்கால பராமரிப்பினை முகாமைத்துவ கூட்டுத் தாபனத்தின் ஊடாக பயனாளிகளின் பங்கேற்புடன் மேற்கொள்ளல்.
- கருத்திட்டம் செயற்படுகின்ற காணியில் சேருகின்ற மழைநீர் மற்றும் மனை அலகுகளால் வெளியேற்றப்படுகின்ற கழிவு நீரை களஞ்சியப்படுத்தி சுத்தப்படுத்தியதன் பின்னர் கருத்திட்டத்தின் வீட்டுத் தோட்ட பயிற்செய்கை நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்துதல்.

## பூர்த்தி செய்யப்பட்ட வீடமைப்பு கருத்திட்டங்களில் பயனாளிகளுக்கு வீட்டு உரிமை மற்றும் உறுதிகள் வழங்குதல்

2024 ஆம் ஆண்டில் அதிகார சபையினால் மக்கள் பாவனைக்கு வழங்கப்பட்ட வீடமைப்புக் கருத்திட்டங்களின் உரித்தொடமை உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இங்கு பயனாளிகளுக்கு நீண்டகால தவணை அறுதி ஒப்பந்தத்தின் பிரகாரம் வீடுகளை வழங்கியிருந்தமை காரணமாக அதிகமான வீடமைப்புக் கருத்திட்டங்களின் உறுதிகளை வழங்க முடியாமல் போயுள்ளதுடன் குறித்த பயனாளிகள் அந்த ஒப்பந்த காலவரையறையின் இறுதியில் சகல கொடுபனவுகளையும் பூர்த்தி செய்ததன் பின்னர் உரித்துடைமை உறுதியினை வழங்க வாய்ப்புகள் உள்ளன.

### வீடுகளுக்குறிய உறுதிகளை வழங்கும் நடவடிக்கைகள்

| # | வீடமைப்பு கருத்திட்டம் | வீடுகளின் எண்ணிக்கை | 2023 ஆம் ஆண்டு வரைஉறுதிகள் வழங்கப்பட்டதன் முன்னேற்றம் | 2024 ஆம் ஆண்டில்வழங்கப்பட்டுள்ள உறுதிகள் | வழங்கப்பட உள்ள உறுதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | சஹஸ்புர மாடி வீடமைப்புக் கருத்திட்டம் | 686 | 587 | - | 99 |
| 2 | அனுராதபுரம்-துரிஇத்துருகம பசுமைக் குடியிருப்பு கருத்திட்டம் | 108 | 01 | - | 107 |
| 3 | வதுலு செவன மாடி வீடமைப்புக்கருத்திட்டம் | 50 | - | - | 50 |
| 4 | சிங்கபுர வீடமைப்புக் கருத்திட்டம்-Iஆம் கட்டம் | 60 | - | - | 60 |
| 5 | சிங்கபுர வீடமைப்பு கருத்திட்டம்-IIஆம் கட்டம் | 60 | - | - | 60 |
| 6 | அங்குலானை “சயுருபுற”மாடி வீடமைமைப்புக் கருத்திட்டம் | 288 | - | - | 288 |
| 7 | சிலாபம் நரியகொடல்ல நகர வீடமைப்பு கருத்திட்டம் | 57 | - | - | 57 |
| 8 | தலவாக்கலை நகர வீடமைப்பு கருத்திட்டம் | 54 | - | - | 54 |
| 9 | லுனாவை சீ வீவ் ரெசிடன்சீஸ் மாடி வீடமைப்புக் கருத்திட்டம் | 356 | | 16 | 340 |
| | மொத்தம் | | **588** | **16** | **1,115** |

## ஆபத்துக்களை மதிப்பீடு செய்வதும் குறைப்பதற்குமான மூலோபாய வழிகள்

| # | ஆபத்துக்கள் | ஆபத்துக்களை ஆபத்துக்களை குறைப்பதற்கான மூலோபாய வழிகள். |
|---|---|---|
| 1 | எமது அதிகார சபை மற்றும் ஏனைய இணை நிறுவனங்கள் மறுசீரமைப்பு வீடமைப்புக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது பயனாளிகளுக்கு முழுமையான சமூக உயிர்ப்பூட்டல் வேலைத் திட்டங்கள் முறையான பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படாமை | தற்போது அதிகார சபையில் உள்ள மனித வளங்கள் வரையறுக்கப்பட்டுள்ள மையினை குறைத்துக் கொள்ளும் பொருட்டு சகல நகர அதிகார பிரதேசங்களுக்கு தற்போது சேவையில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சமுதாய அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்களை முன்வைத்தல் கொழும்பு பல்கலைக்கழக சமூகவியல் பீடத்தின் மாணவர்களை பயிற்சி அடிப்படையில் அதிகார சபையில் நிரந்தர பணியாளர்களோடு கள நடவடிக்கைகளின் பொருட்டு ஈடுபடுத்துதல |
| 2 | முன் வரும் நான்கு வருட காலத்திற்குள் அரசாங்க தனியார் கூட்டு முயற்சியின் ஊடாக சுய செலவுகளை ஈடு செய்து கொள்ளும் முறையொன்றில் செயல்படுதல | அதிகார சபையினால் வணிகத் திட்டமிடல் ஒன்று தயாரித்துள்ளதுடன் அதன் பிரகாரம் திறைச்சேறிக்கு செலவு அழுத்தங்கள் ஏற்படுத்தாதவாறு கூடிய பொருளாதார பெருமதியுடைய குறைந்த அளவு பயன்பாடு உள்ள காணியினைப் பயன்படுத்திக் கொண்டு நடுத்தர வருமானம் பெறுவோர் வீடமைப்பு கருத்திட்டங்களை செயல்படுத்துவதும், அதனூடாக ஈட்டப்படுகின்ற வருமானத்திலிருந்து சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், வீடமைப்பு கடன் திட்டங்கள் மற்றும் வீடு மறுசீரமைப்பு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் |
| 3 | பௌதீக மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்துவதற்கு நெறிப்படுத்தல் வலையமைப்பு ஒன்றினை விரிவு படுத்திக் கொள்ள வேண்டியுள்ளமை. | தற்போது மாவட்ட செயலகங்கள் ஊடாக பிரதேச செயலகங்களில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட அரசு உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பினை இந்த வேலை திட்டத்தின் பொருட்டு பெற்றுக் கொள்வதற்கு மாவட்ட செயலகங்களை விளக்கமளிக்கும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். |
| 4 | பௌதிக அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு அதிகரித்துள்ள நிதியியல் செலவுகளுக்கு (கயைெடுௌடையட உழளவ) மத்தியில் அபிவிருத்தியாளர்களின் பங்கேற்பு குறைந்துள்ளமை. | நிர்மாணங்களுக்குரிய தொழிற்படு மூலதனம் மாத்திரம் அபிவிருத்தியாளர்களுக்கு செலவழிக்க வேண்டியுள்ள விதத்தில் நிர்மாண இலக்குகளின் அடிப்படையில் இடைக்கால கொடுப்பனவு முறை ஒன்றினை செயல்படுத்துவதும் இக்கருத்திட்டத்தின் சகல முன் விற்பனை அடிப்படையில் நிதி மதிப்பிடலும். |
| 5 | நகரப் பிரதேச இலக்கிடப்பட்ட பயனாளிகளுக்கு செலவிடக் கூடிய விலையில் வீடுகளை வழங்குவதற்கு நடைமுறையில் உள்ள சவால்கள் (வீடுகளை நிர்மாணிக்கும் பொருட்டு ஏற்படுகின்ற செலவுகள் மற்றும் பயனாளிகளின் கொள்வனவு செய்யும் ஆற்றல்களில் உள்ள சமனற்ற நிலை | சந்தை ஆய்வுகள் போன்ற முறையான ஆய்வுகளை மேற்கொள்வதன் ஊடாக குறித்த கருத்திட்டத்தின் இலக்குகளிடப்பட்ட குழுக்களை இனங்காண்பதும் அதன் பிரகாரம் செலவிடக் கூடிய விலைக்கு வீடுகளை வழங்குவதற்காக கருத்திட்ட முன்மொழிவுகளை தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| | | உள்ளக உழைப்புக்களின் ஊடாக சலுகை அடிப்படையில் வீடமைப்புக் கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். |
| | | வணிக வங்கிகளுடன் கலந்துரையாடி சலுகை அடிப்படையில் வீடமைப்புக் கடன்களை வழங்குவதற்கான ஆற்றல்களை ஆராய்ந்து பார்ப்பதற்கு கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| 6 | நகர அதிகார பிரதேசங்களில் உள்ள காணிகள் வரையறுக்கப்பட்டுள்ளமையினாலும் இனங்காணப்பட்டுள்ள காணிகளை அபிவிருத்தி செய்யும்போது முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற சிக்கல்கள். | குறைந்த பயன்பாடு உள்ள அரசாங்க சொந்தமான காணிகளை பொறுப்பேற்று செங்குத்துரீதியாக அபிவிருத்தி கருத்திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துதல் |
| | | அரசாங்க நிறுவனங்கள் தற்போது பயன்பெறுகின்ற, இருப்பினும் மேலும் அபிவிருத்தி செய்யக்கூடிய ஆற்றல்கள் உள்ள காணிகளை இனம் கண்டு அந்த நிறுவனங்களுடன் கூட்டிணைக்கப்பட்ட ஒத்துழைப்புடன் இரு தரப்பினருக்கும் நன்மைகள் கிடைக்கின்ற பிரகாரம் கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களை செயற்படுத்துதல்.(உதாரணமாக ஸ்ரீஜயவர்த்தனபுர கடுவெலை மற்றும் அநுராதபுரம் கலப்பு அபிவிருத்தி கருத்திட்டங்கள் தற்போது தபால் திணைக்களம் பயன்பெறுகின்ற காணிகளில் மேற்கொள்ளல்) |
| | | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுக்குச் சொந்தமான பொருளாதார ரீதியான பெறுமதியினை உடைய காணிகளை கொள்வனவு செய்து அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். |
| 7 | அதிகார சபையின் தத்துவங்கள் மற்றும் பணிகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தேவையான நிரந்தரமான பணியாளர் குழாமில் தற்போது வெற்றிடங்கள் உள்ளதால் அதன் வினைத்திறனுக்கு நேரடியாக தாக்குச் செலுத்துதல். | பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்கள் போன்ற பயிலுனர் மாணவர்களை அதிகார சபையின் நிரந்தர பணியாளர் குழாமினருடன் களத்துறை கடமைகளில் ஈடுபடுத்துதல். |
| | | ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளும் பொருட்டு தேவையான அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பித்தல். |

# சமூக அபிவிருத்தி வேலைத்திட்டம்



# சமூக அபிவிருத்தி வேலைத்திட்டம் 2024

2008 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்திற்கு அமைய நகர் பிரதேச குறைந்த வருமானம் பெறும் வசதிகளை கொண்ட குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கு பௌதீக மற்றும் சமூக அபிவிருத்தி என இருவகையான வழிகளின் ஊடாக கருத்திட்டங்களும் வேலைத்திட்டங்களும் செற்படுத்தப்படுகின்றது.

அதன் ஒரு வழியாக நகர பிரதேச குறைந்த வசதிகளை உடைய குடியிருப்புகளை மையமாகக் கொண்டு அவற்றில் வாழும் குறைந்த வசதிகளை கொண்ட நகர மக்களின் சமூக, பொருளாதார, கல்வி, சுகாதார, சமய மற்றும் கலாச்சார ரீதியாக வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதும் அவர்களிடத்தே அறிவு, தேர்ச்சி, திறமை, ஆளுமை விருத்தியினை இணை விருத்தி செய்து தன்னம்பிக்கையோடு மேலெலச் செய்வதற்காக சமூக அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் 2011 ஆம் ஆண்டில் இருந்து நகர அபிவிருத்தி அதிகார சபையால் பிரகடனப்படுத்தப்பட்ட நகர வலயங்களில் வாழும் மக்களை அடிப்படையாகக் கொண்டு குறைந்த வசதிகளை உடைய குடியிருப்பு மக்களை மையமாகக் கொண்டு சமூக அபிர்த்து வேலை திட்டங்கள் செயல்படுத்தப்பட்டது.

அதன் பிரகாரம் 2021-2025 ஐந்து வருட செயற்பாட்டுத் திட்டத்தில் முழு நாடும் உள்ளடங்குகின்ற பிரகாரம் இந்த வேலைத் திட்டம் செயற்படுத்தப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டிலிருந்து மக்கள் பங்கேற்பினை மேம்படுத்துதல், குறைந்த வருமானம் பெறும் நகர மக்களின் வாழ்க்கை தரத்தினை நேர்மறையாக விருத்தி செய்து கொள்ளல் மற்றும் மக்கள் கூட்டினைப்பினைப் பலப்படுத்தி உப வேலைத்திட்டங்கள் 04 இன் கீழ் செயல்படுத்தப்படுகின்றது.

1) சமுதாய அபிவிருத்தி வேலை திட்டம்
2) கல்வி வேலை திட்டம்
3) தொழில் முயற்சியான்மை அபிவிருத்தி வேலை திட்டம்
4) சமய, கலாச்சார மற்றும் திறன் மேம்பாட்டு வேலை திட்டம்

அதன் பிரகாரம் மேற்படி சகல தலையீடுகளுக்கும் உரிய உப தலையீடுகள் மற்றும் செயற்பாடுகளின் ஊடாக குறைந்த வசதிகளை உடைய மக்களின் குறிக்கோள்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

2024 ஆம் ஆண்டில் நாடு பூராகவும் 11 மாவட்டங்கள் உள்ளடங்குகின்ற பிரகாரம் 22 குடியிருப்புக்களில் நகரப் பிரதேச குறைந்த வசதிகளை உடைய குடியிருப்புகளில் வாழும் 8796 வீட்டு அலகுகளில் பொருளாதார சமூக கலாச்சார சுகாதார மற்றும் கல்வி நிலையினை அபிவிருத்தி செய்யும் பொருட்டு சமூக அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இந்த மாவட்டங்களுக்கு கொழும்பு, கம்பஹா, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, குருநாகலை, இரத்தினபுரி, நுவரெலியா, மாத்தளை, அனுராதபுரம் மற்றும் மொனராகலை ஆகியன உள்ளடங்குகின்றது கீழ் மட்டத்திலிருந்து மக்கள் பங்கேற்பு தலை ஈட்டினூடாக மக்களை அடிப்படையாகக் கொண்ட தீர்வுகள் தொடர்பில் கவனத்தினைச் செலுத்தி இந்த சமூக அபிவிருத்தி வேலை திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

## சமூக அபிவிருத்தி வேலை திட்டங்களை குடியிருப்புகளில் நடைமுறைப்படுத்துதல்

### 1) சமுதாய அபிவிருத்தி வேலைத் திட்டம்

இந்த வேலைத் திட்டத்தின் மூலம் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தச் செய்யும் பொருட்டு சமூக, பொருளாதார, கலாச்சார ரீதியாக ஒருமைப்பாட்டுக்கு வரும் வரை அவர்களை தொடர்ச்சியாக வலுவூட்டச் செய்யும் வேலைத் திட்டம் ஒன்றினை தயாரிப்பது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

நகரமயமாக்களுடன் சமூகத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் முகம் கொடுத்துள்ள சிக்கல்களுக்கு சமூக வலுவூட்டல் வேலைத் திட்டத்தின் ஊடாக அப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு பகுப்பாய்வு ரீதியான தீர்வுகளை வழங்குவதற்கும் சமூகத்தில் சமூக விரோத செயற்பாடுகளுக்கு மற்றும் கவனத்திற்கு உள்ளாகி உள்ள நபர்களை அதிலிருந்து மீட்டெடுத்தல் மற்றும் அனைவருக்கும் சுகாதார பாதுகாப்பு உள்ள வாழ்க்கை முறை ஒன்று உருவாக்கிக் கொடுத்தல் சுற்றாடல் ரீதியான உணர்வு, உள்ள சமூகமொன்றினை உருவாக்குவதும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் இந்த மக்களிடையே கலாச்சார பன்முகத்தன்மையினை விளங்கிக் கொண்டு அவர்களின் சமூக நிலைகளை மேம்படுத்தும் பொருட்டு மக்கள், தனிநபர் மற்றும் சமுதாய அடிப்படை அமைப்புக்களை உயிர்ப்பூட்டுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நேரடி மக்கள் பங்களிப்பின் ஊடாக அவர்களின் நற்செயல்களை உறுதிப்படுத்தி மற்றும் நிலைபேரான அபிவிருத்தியின் பொருட்டு நகரப் பிரதேச குறைந்த வருமானத்தினையுடைய மக்களை வலுவூட்டுவது இந்த வேலை திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன் 2024 ஆம் ஆண்டில் அது உப வேலை திட்டங்கள் ஐந்தின் ஊடாக கீழ் உள்ள பிரகாரம் செயற்படுத்தப்படும்.

### 1.1 மக்கள் சங்கங்களை உருவாக்குவதும் இற்றைப் படுத்துவதும்.

தன்னம்பிக்கையோடு முன்னேறுகின்ற சமூகம் ஒன்றினை கட்டி எழுப்பும்போது கீழ் மட்டத்தில் உள்ள மக்களை அணிதிரட்டும் கோட்பாட்டு ரீதியான அதிகாரத்தினையுடைய அமைப்பு ஒன்றாக சமுதாய அடிப்படை அமைப்புகளை(CBO) அழைக்க முடியும் என்பதுடன் அது நிரந்தரமானது ஒன்று என்பதனை உறுதிப்படுத்துவதனால் சமுதாய அபிவிருத்தியின் முக்கியமான பிரிவு ஒன்றாகும்.
அதன் பிரகாரம் இவ்வாண்டிற்குள் தெரிவு செய்யப்பட்ட ஐந்து மாடி வீடு அமைப்புத் தொகுதிகளில் ஐந்து சமுதாய அடிப்படை அமைப்புகள் மற்றும் இரத்தினபுரி மாதம்பை குடியிருப்பில் உள்ள சமுதாய அடிப்படை அமைப்பு ஒன்றும் உருவாக்கப்பட்டதுடன் அவற்றினை நடாத்திச் செல்லும் பொருட்டு ஆரம்ப தொழில்நுட்ப அறிவும், தேவையான வழிகாட்டல்களும் இந்த வேலை திட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டது.

### 1.2 சிறு குழு வேலைத் திட்டம் (நிதி முகாமைத்துவம்)

இந்த வேலை திட்டத்தின் கீழ் மக்களின் இணங்காடப்பட்ட தேவைப்பாடு ஒன்றான சேமிப்பினை மேம்படுத்துதல் சிறு குழு முறையில் நுண் நிதியின் வற்புறுத்தல்களுக்கு உள்ளாகி உள்ள பெண்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை அடிப்படையாகக் கொண்ட குடும்பங்களை பலப்படுத்துவது, ஒத்துழைப்புப் பொருளாதார முறை ஒன்றினை கட்டி எழுப்புவதனை நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்படுவதுடன் இங்கு 15 குடியிருப்புகளின் 24 சிறு குழுக்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### 1.3 போதைப் பொருள் தடுப்பு மற்றும் புனர்வாழ்வின் பொருட்டு முன் வைக்கும் வேலைத் திட்டம்.

நகரப் பிரதேச குறைந்த வசதிகளை உடைய குடியிருப்புகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட "போதையில் இருந்து விடுவிக்கப்பட்ட குடியிருப்பு" வேலைத் திட்டம் மக்களிடையே விருத்தி அடைந்து வருகின்றது. போதைப் பொருள், மதுசாரம் மற்றும் புகை பாவானையினைக் குறைத்தல் அத்துடன் அதில் ஈடுபடுவதனை தவிர்ப்பதற்காக விஞ்ஞான ரீதியான முறைகள் பயன்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இதற்காக மதுசாரம் மற்றும் போதை பொருள் தகவல் நிலையத்தின்(ADIC) வளப்பங்களிப்போடு சிறுவர் கழகங்கள் இளைஞர் கழகங்கள் என்பனவற்றினைக் கூட்டிணைத்து விழிப்புணர்வு மற்றும் நடைமுறை பட்டறையினை நடாத்துவதன் ஊடாக போதைப் பொருள் மதுசாரம் மற்றும் புகைத்தல் பாவனை ஊடாக ஏற்படுகின்ற சமூக பொருளாதார மற்றும் சுகாதார ரீதியாக பிரச்சனைகளை குறைப்பதற்காக இந்த வேலை திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. சிறுவர்கள் மற்றும் இள வயசினர்களை இலக்காகக் கொண்டு அவர்களுக்கான விளக்கத்தினை விரிவுபடுத்துதல் மற்றும் செயற்பாடு உள்ள தடுப்பு வேலைத் திட்டம் ஒன்றினை தயாரிக்கும் பொருட்டு தலைமைத்துவ பயிற்சி முகாம் நடாத்தப்பட்டது. அத்துடன் செயற்பாடு உள்ள போதைப்பொருள் தடுப்பு இளைஞர் குழுக்களை நிறுவனத்திற்கு வரவழைத்து அவர்களால் போதை பொருள் தடுப்புக்காக மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

மேலும் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின்(ADIC) உத்தியோகத்தர்கள் குடியிருப்புகளுக்கு சென்று இளைஞர்களையும் சிறுவர் கழக அங்கத்தவர்களையும் மாதத்திற்கு ஒரு தடவை விளக்கமளித்தல், பல்வேறு வேலை திட்டங்களின் பொருட்டு தொடர்பு கொள்ள சிறுவர் கழகங்களுக்கு இடையே போட்டிகளை நடாத்துதல் போன்ற வேலைத்திட்டங்களின் பொருட்டு தொடர்பு படுத்திக் கொண்டமை மேற்கொள்ளப்பட்டது.

## 1.4 மக்கள் சுகாதார மேம்பாட்டு வேலை திட்டம்.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் புதிய இளைஞர் யுவதிகளின் துப்புர வேட்பாட்டினை மேம்படுத்துவதற்காக விழிப்புணர்வுப் பட்டறைகள் நடத்தப்பட்டதுடன் அவர்களுக்கு சுகாதார பாதுகாப்பு தொகுதிகள் வழங்கப்பட்டமை மேற்கொள்வது குறித்த பிரதேச சுகாதார வைத்திய உத்தியோகத்தர் பணிமனையின் உத்தியோகத்தர்களின் பங்களிப்போடும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின்(UNICEF) அனுசரணையுடனும் மேற்கொள்ளப்பட்டது.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் கண்காணிப்பின் கீழ் "ஆரோக்கியமாக இருப்போம் அழகாகுவோம்""சுவனி தியனியனீ"(ஆரோக்கியமுள்ள மகளே) போன்ற புத்தகத் தொகுதி ஒன்றினை அச்சிட்டு அப்பட்டறையின் பொருட்டு கலந்து கொள்கின்ற இள வயதினருக்கு வழங்கப்படுவதுடன் ஐந்து வயதிலும் குறைந்த போஷனைக் குறைபாடுள்ள சிறுவர்கள் மற்றும் போஷனைக் குறைபாடுள்ள கர்ப்பினித் தாய்மாரின் போஷனை நிலையினை உயர்த்துவதற்காக விழிப்புணர்வு மற்றும் அவர்களுக்கு தகுதியான போஷாக்குள்ள உலர் உணவு பொருட்கள அடங்கிய பொதிகளோடும் சுகாதார பாதுகாப்புள்ள சுவர்க்காரம் அடங்கிய பொதித் தொகுதி ஒன்றும் வழங்கப்பட்டதுடன் அதற்கான அனுசரணையினை UNICEF நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் சுகாதார மேம்பாட்டு பணியகம் பெருந்தோட்ட மற்றும் நகர சுகாதார அலகு மற்றும் UNICEF ஆகியன கூட்டினைந்து முன்பள்ளி சிறார்களுக்குப் போஷாக்கு தொடர்பான விழிப்புணர்வு வேலைத் திட்டங்கள் மற்றும் குடியிருப்புகளில் வாழும் யுவதிகளின் உள சுகாதார நிலையினை சிறந்ததாக ஆக்கும் குறிக்கோளுடன் ஆரோக்கியமான வாழ்வு ஒன்று மற்றும் பொறுப்புக் கூற வேண்டிய இளமை தொடர்பான விழிப்பூட்டல் வேலைத் திட்டமும் நடத்தப்பட்டது.

கொழும்பு மாவட்ட சுகாதார வைத்திய அலுவலகத்தின் வாய்ச்சுகாதார மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் பற் சிகிச்சை வேலைத்திட்டமும் நடாத்தப்பட்டதுடன் அது தொடர்பில் விழிப்புணர்வுகளை மேற்கொண்டு வயது வந்தோரினதும் சிறுவர்களினும் பற்களை சுத்தம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொண்டு மேலதிக சிகிச்சைகளுக்காக முன் வைக்கப்பட வேண்டிய ஆட்களை சிகிச்சைகளுக்கு முன்வைக்கப்பட்டதுடன் கொலொன்னாவை சுகாதார வைத்திய உத்தியோகத்தர் பணிமனையின் வைத்தியர்களினதும் உத்தியோகத்தர்களினதும் பங்கேற்புடன் 35 வயதிற்கு மேற்பட்ட மக்களுக்கு நீரிழிவு, கொலஸ்ட்ரால், கண் பரிசோதனை மற்றும் பற்சிகிச்சையுடன் பற்களின் பரிசோதனைகள் சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் வெள்ள நீரில் மூழ்கிய வீட்டு உரிமையாளர்களுக்கு அந்த வீடுகளை துப்புரவு செய்து கொள்ளும் பொருட்டு சுகாதார பாதுகாப்பு உதவிகள் வழங்கப்பட்டதுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மக்கள் பணிப் பிரிவு மற்றும் ஹெல்ப் பேஜ் நிறுவனத்தின் தலையீட்டுடன் 50 வயதுக்கு மேற்பட்ட முதியோரின் கண்கள் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடிகளும் வழங்கியதுடன் கண்ணில் வெண்புரைகளை அகற்றும் வேலைத் திட்டமும் மேற்கொள்ளப்பட்டது.

UNICEF நிறுவனத்தின் தலையீட்டின் அடிப்படையில் மக்களின் சுகாதார மற்றும் சுகாதார பாதுகாப்புக்கான சவர்க்கார உற்பத்திக்கான பயிற்சி அளிக்கும் வேலை திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 1.5 காலநிலை மாற்றங்களின் தாக்கங்களை குறைக்கச் செய்யும் வேலைத் திட்டம்.

சுற்றாடல் அமைச்சின் காலநிலை மாற்றம் தொடர்பான செயலகம் மற்றும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) ஆகிய நிறுவனங்களின் வளப் பங்களிப்பின் அடிப்படையில் காலநிலை மாற்றங்களின் தாக்கங்களை குறைக்கும் பொருட்டு குடியிருப்புகளின் சிறுவர்களின் பங்கேற்புடன் சுற்றாடல் குழுவை உருவாக்குதல், சுற்றாடல் நேயமிக்க வாழ்க்கை முறை, நீரைப் பாதுகாத்தல், எரிசக்தியை சேமித்தல் மற்றும் கழிவுப் பொருட்களை முறையான விதத்தில் அகற்றுவது தொடர்பில் மாடி வீடமைப்பு சார்ந்த சிறார்கள், கல்வி பயிலும் பாடசாலைகளிலும் விழிப்பூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் காலநிலை மாற்றத்தினை குறைக்கும் பொருட்டு பங்களிப்புச் செய்வதற்குரிய கீழ் குறிப்பிடப்படும் நடைமுறை வேலைத் திட்டங்களும் செற்படுத்தப்படுகின்றது.

- மரநடுகை வேலைத் திட்டம்
- திண்மக்கழிவு முகாமைத்துவ வேலைத் திட்டம்
- சிரமதான நிகழ்வுகள்.

வருடாந்த முன்னேற்றம்.

- 2024ஆம் ஆண்டின் பொருட்டு 05 புதிய மாடி வீட்டுத் திட்டங்கள் கொழும்பு மாவட்டத்தில் இனங்கண்டுகொண்டமையும் அவதானிப்புக்கள்மேற்கொள்ளப்பட்டமையும்.
- இனங்காணப்பட்ட அந்த 05 மாடி வீட்டுத் திட்டங்களிலும் 05 பிரதான சமுதாய அடிப்படை அமைப்புக்கள் மற்றும் மாதம்பே குடியிருப்பில் சமுதாய அடிப்படை அமைப்பு ஒன்றும் உருவாக்கப்பட்டு 13 குடியிருப்புகளில் சமுதாய அபிவிருத்திச் சங்கங்கள் இற்றைப்படுத்தப்பட்டது.
- 24 சிறு குழுக்கள் சேமிப்பு மேம்பாட்டின் பொருட்டு 15 குடியிருப்புகளில் ஆரம்பிக்கப்பட்டு அக்குழுக்களுக்கு 210 அங்கத்தவர்கள் தொடர்புப்பட்டுள்ளனர்.
- போதைப் பொருள் தடுப்பு தொடர்பில் ஐந்து பட்டறைகள் 209 சிறார்களின் பங்கேற்போடும் 05 தலைமைத்துவ பயிற்சி முகாம்கள் 205 இளைஞர் யுவதிகளின் பங்கேற்போடும் நடாத்தப்பட்டது.
- சுகாதார மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் 03 பட்டறைகள் மேற்கொள்ளப்பட்டத்தடன் கலந்துகொண்ட 100 யுயதிகளுக்கு துப்பரவேற்பாட்டுப் பொருட்களற்ற உள்ளடங்கிய தொகுதியில் வழங்கப்பட்டது.
- குடியிருப்புகளின் இளைஞர் குழுக்களுக்கு (40 இளைஞர் யுவதிகள்)02 பயிற்சி வேலைத் திட்டங்களும் முன் பள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு தடுப்பு வேலைத் திட்டமும் 26 மாணவர்களின் பங்கேற்போடு நடாத்தப்பட்டது.
- சிறு குழுக்கள் சார்ந்த தடுப்பு மற்றும் நிதி முகாமைத்துவ வேலைத்திட்டங்கள் 02 குடியிருப்புகளில் 22 பேரை தொடர்புபடுத்திக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.
- போதைப் பொருள் தடுப்புக் குழு குடியிருப்புகள் மட்டத்தில் 12 குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளது.
- சுகாதாரத்தினை மேம்படுத்தும் வேலை திட்டத்தின் கீழ் 5 வயதிலும் குறைந்த போஷாக்கு குறைவான சிறார்கள் மற்றும் போஷாக்குக் குறைவான கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் போஷனை தொடர்பாக நடாத்தப்பட்ட 8 பட்டறைகளில் போஷனை உள்ள உலர் உணவுப் பொருட்கள் அடங்கிய 331 பொதிகளும் வழங்கப்பட்டது.
- கைகளைக் கழுவும் நடவடிக்கைகள் தொடர்பில் மற்றும் கிருமிகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு மூன்று பட்டறைகள் 324 பாடசாலை மாணவர்களின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டதுடன் 40 மாணவர்களினதும் 33 முதியோரினது இனம் பங்கேற்புடன் 02 பற் சிகிச்சை வேலை திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டது.
- மக்களின் சுகாதார நிலையினை உயர்த்துவதற்காக தொற்றா நோய்களைப் பரீட்சிக்கும் முகாம் ஒன்று நடாத்தப்பட்டதுடன் இதில் 61 பேர் கலந்து கொண்டனர்.
- வெள்ளத்தில் மூழ்கிய வீடுகளுக்கு 418 சுகாதார பாதுகாப்பு பொருட்கள் அடங்கிய தொகுதிகள் ஐந்து குடியிருப்புகளுக்கு இடையே பகிர்ந்து அளிக்கப்பட்டது.
- 55 வயதுக்கு மேற்பட்ட வயது வந்தோர்களின் இரு கண்களும் பரிசோதிக்கப்பட்ட போது அவர்களுக்கு மூக்கு கண்ணாடி வழங்குதல் மற்றும் கண்ணில் உள்ள வெண்புரைகளை அகற்றுவதன் ஊடாக ஏழு பேருக்கும் 53 பேருக்கு மூக்குக் கண்ணாடியும் பெற்றுக் கொள்ள கூடியதாக இருந்தது.
- சுகாதாரம் மற்றும் துப்புர வேட்பாடு என்பனவற்றின் பொருட்டு சவர்க்கார உற்பத்தி தொடர்பான பயிற்சி வேலை திட்டங்கள் இரண்டு மேற்கொள்ளப்பட்டதுடன் இதில் 44 பேர் கலந்து கொண்டனர்.
- சுற்றாடல் வேலைத் திட்டத்தின் கீழ் 17 குடியிருப்புகளில் 1002 சிறார்கள் பங்கேற்புடன் மரம் நடுகை மற்றும் சிரமதான வேலைத் திட்டங்கள் குடியிருப்பு மட்டத்திலும் மக்கள் சங்கங்கள் மற்றும் சிறுவர்களையும் தொடர்பு படுத்திக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

**சமுதாய அபிவிருத்தி வேலை திட்டங்களோடு தொடர்புடைய புகைப்படங்கள்.**

## 1.1 மக்கள் சங்கங்களை ஆரம்பிப்பதும் இற்றைப் படுத்துவதும்





1.2 சிறு குழு வேலை திட்டம் (நிதி முகாமைத்துவம்)




1.3 போதைப் பொருள் தடுப்பு மற்றும் புனர்வாழ்வின் பொருட்டு முன் வைக்கும் வேலைத் திட்டம்




1.4 மக்கள் சுகாதார மேம்பாட்டு வேலைத் திட்டம்




1.5 காலநிலை மாற்றங்களின் தாக்கங்களை குறைக்கச் செய்யும் வேலைத் திட்டம்.




## 02. கல்வி வேலைத் திட்டம்.

போட்டித் தன்மையுள்ள, மாற்றம் அடையக்கூடிய உலகில் வெற்றிகரமான நிலையின் பொருட்டு குறைந்த வசதிகளை உடைய குடியிருப்புக்களில் வாழும் சிறார்கள் இடத்தே, அறிவு, திறமை, ஆற்றல் விருத்தி மற்றும் உளச்சார்பு நிலையினையுடைய சிறுவர்களை குறைந்த வசதிகளை உடைய குடியிருப்புகளில் இருந்து உருவாக்குவது இந்த கல்வி வேலைத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

### 2.1 இள வயதினர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி வேலை திட்டம்.

சிறுவர் மற்றும் இளைஞர் சமூகத்தினை தொடர்பு படுத்திக் கொண்டு அவர்கள் தொடர்பில் விசேட கவனத்தினைச் செலுத்தி சிறுவர் கழகங்கள் இளைஞர் கழகங்களை உருவாக்கி அச் சங்கங்களுடாக அவர்களது உள ஆரோக்கியத்தினை விருத்தி செய்து கொள்வதற்கும் அவர்களது அறிவுத் திறமையினை விருத்தி செய்வதற்கும் அவர்களிடத்தில் தலைமைத்துவம் ஆளுமைப் பண்புகளை கட்டி எழுப்பதற்கும் இது தொடர்பில் விசேட அறிவுள்ள வளவாளர்களின் பங்களிப்பினை பெற்றுக்கொண்டு பல்வேறு வேலை திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இதனூடாக சிறுவர்களுக்குத் தேவையான வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்படுவதுடன் தலைமைத்துவம் ஆளுமை விருத்தி வேலை திட்டங்களை செயற்படுத்துவதன் ஊடாக இளைஞர் சமூகத்தில் தலைமைத்துவ உளவிருத்தியினை சமூகத்தில் உருவாவதும் வினைத்திறன் உள்ள, பணியாற்றக்கூடிய இளைஞர் சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கு தலைமைத்துவ பயிற்சி பட்டறைகள் மற்றும் படைப்பாக்க திறன்விருத்தியினை மேம்படுத்துவதற்கும் புத்தாக்கங்களை மேற்கொள்ளும் விதம் தொடர்பில் பயிற்சி வேலை திட்டங்களின் ஊடாக அவர்களிடம் மறைந்துள்ள திறமைகளை மெருகூட்டி இளைஞர் சமூகத்தின் உள ஆரோக்கியத்தினை விருத்தி செய்யும் பொருட்டு படைப்பாக்கத்திறன் வேலைத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றது.

அத்துடன் சமூகத்தில் வாழும் போது சிறுவர்கள் மிக இலகுவில் விபத்துகளுக்கும் அழுத்தங்களுக்கும் உள்ளாவதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களை முன்னமே இனம் காண்பதற்கு முன்னாயத்தமாக இருப்பதற்கு அவ்வாறான நிலைகளை குறைப்பதற்கு மற்றும் அதற்கு ஈடு கொடுக்கக் கூடிய சக்தியினை ஏற்படுத்துவதற்கு சிறுவர் பாதுகாப்பில் பலப்படுத்தும் நோக்கில் குடியிருப்புகளின் சிறார்களுக்கு சிறுவர் உரிமைகள் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் அதன் சட்டப் பின்னணி தொடர்பில் விளக்கமளிக்கும் வேலைத் திட்டங்கள் நடாத்தப்படுகின்றது.

### 2.2 நூலகங்களை ஆரம்பித்தல்.

இங்கு குடியிருப்புகளில் சிறுவர்க் கழகங்களை ஆரம்பிப்பதன் ஊடாக சிறுவர்கள் மற்றும் இளைஞர் சமூகம் புத்தகங்களை வாசிப்பதற்கும் ஆர்வத்தினை ஏற்படுத்துவது கல்வித் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு மற்றும் அதனூடாக அறிவு திறமை மனப்பாங்கினை கட்டி எழுப்பும் பொருட்டும் வெளிவிடய புத்தகங்களின் பயன்பாட்டின் ஊடாக சிறுவர்களின் விடயத்தோடு இணைந்த அறிவினை விருத்தி செய்து கொள்ளும் நோக்கில் சிறுவர் நூலகங்கள் ஆரம்பிக்கப்படுகின்றது. மாநகர சபைகளுக்குச் சொந்தமான நூலகங்களில் இருந்து அகற்றப்பட்ட இருப்பினும் பயன்பாட்டுக்குத் தகுதியான விடயத்தோடு இணைந்த மற்றும் வெளிவிடய புத்தகங்கள் மற்றும் இலக்கிய மாதத்தின் நிமித்தம் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்ட புத்தகக் கண்காட்சியிலும் இதன் பொருட்டு தேவையான புத்தகங்கள் இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட நூலகங்களுக்கு வழங்கப்பட்டது.

### 2.3 கல்வியியல் ரீதியாக விழிப்பூட்டும் வேலைத் திட்டம்.

குடியிருப்புகளில் வாழும் சிறுவர்கள் பொருளாதார ரீதியான சிரமங்கள் மற்றும் குறைந்த வசதிகளின் கீழ் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு கல்வியியல் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. குடியிருப்புகளின் சிறுவர்களது தொடர்ச்சியான ஆரம்ப கல்விக்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்குவதன் ஊடாக கல்வித்திறமையை மேம்படுத்துவது இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. தேசிய சுதந்திர தின வைபவத்துடன் இணைந்ததாக சிறுவர்களின் அறிவுத் திறனையும் மனபாங்கினையும் விருத்தி செய்யும் நோக்குடன் குடியிருப்பு மட்டத்தில் தேசிய சுதந்திர தின வைபவங்கள் ஒழுங்கு செய்யப்பட்டது. இங்கு சிறுவர்களின் அறிவினை விருத்தி செய்யும் போட்டிகள் நடத்தப்பட்டு அதனூடாக வெற்றி பெற்ற சிறுவர்களுக்கு திறமைப் பாராட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டது.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் சிறுவர்களது தொடர்ச்சியான பாடசாலைக் கல்வியை மேம்படுத்துவதற்காக பாடசாலை காலணிகளை கொள்வனவு செய்வதற்கு பற்றுச் சீட்டுகள் (எழரஉாநசள) மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டது.

இதன் கீழ் பாடசாலை செல்லாத சிறுவர்கள் எழுதவாசிக்க ஆற்றல் இல்லாத சிறுவர்கள் பாடசாலைக் கல்வியோடு இணைந்ததாக மேலதிக கல்வையினை பெற வேண்டி சிறுவர்கள் மற்றும் பொருளாதார சிரமங்கள் காரணமாக கல்விவாய்ப்புகளை இழந்த பிள்ளைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. அச்சிறார்களுக்கு சமூக வலுவூட்டல் பிரிவு உத்தியோகத்தர்களால் மேலதிக வகுப்புகள் நடத்தப்பட்டு அவர்களது அறிவு மற்றும் எழுத்தறிவினை விருத்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு தொடர்ச்சியாக பாடசாலை செல்லாத சிறார்கள் இனம் கண்டு அவர்களது பெற்றோர்களுடன் கலந்துரையாடுவதன் ஊடாக வீட்டு மட்டத்தில் அப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிறுவர்களின் படைப்பாக்க ரீதியான ஆற்றல்கள் மற்றும் பரந்த வினாப்பத்திரங்கள் அளவிலான சிந்தனைகள் உருவாக்கும் பொருட்டு பல்வேறு செயற்பாடுகள் விவாத போட்டிகள் வினாபத்திரங்களை வழங்குதல் விளையாட்டுப் போட்டிகள் நடாத்துதல் போன்ற வேலைத் திட்டங்களும் இந்த வேலைத் திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும் குடியிருப்புக்களின் குறைந்த வருமானம் பெறும் ஆட்களின் சமயக் கல்வியினை பெறும் சிறுவர்களை தொடர்பு படுத்திக் கொண்டு அச்சிறார்களின் தொடர்ச்சியான சமயக் கல்விக்காக அறநெறிப் பாடசாலைச் சீருடைகளை வழங்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் புலமை பரிசுகளின் பொருட்டு தோன்றிய சிறுவர்களை பரிட்சைக்கு முகம் கொடுக்க வேண்டிய முறைகள் பிரச்சனைகள் இனம் காணுதல், பிரச்சனைகளை தீர்க்க தர்கரீதியாக தீர்ப்பு முறைகள் உட்பட சிந்தனையாற்றலை விருத்தி செய்வதும் சவால்களை வெற்றி கொள்ளும் பொருட்டும் சிறுவர்களை பயிற்றுவிக்கும் வேலை திட்டங்கள் நடத்தப்பட்டது. இதன் பொருட்டு பிரபல வளவாளர் ஒருவரை தொடர்பு படுத்திக் கொண்டு நடைமுறை செயற்பாடுகள் ஊடாக வினா பத்திரங்கள் கலந்துரையாடப்பட்டது.

கம்பஹா மாவட்டத்தின் குடியிருப்புகளில் இவ்வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது பாரிய பங்களிப்பினை வழங்கிய கம்பஹா செனரத் பரணவித்தான தேசிய பாடசாலையில் சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளை இலகுவாகவும் நவீன தொழில்நுட்பத்திலே பயன்படுத்தியும் மிக பயனுறுதி வாய்ந்த விதத்தில் மேற்கொள்வதற்கு பாடசாலை அதிபரின் கோரிக்கைக்கு அமைய பொலிவுறு(ளுஅயசவ ஊடயளள சுழழஅ) வகுப்பறை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

அதனோடு இளைஞர் யுவதிகளை தொடர்பு படுத்திக் கொண்டு அவர்களது பிரச்சனைகளை இனம் காண்பது அப்ப பிரச்சனைகளை தர்க்க ரீதியாக தீர்க்கும் முறைகள் தொடர்பில் நடைமுறை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

நகர குடியிருப்புகளில் பாடசாலை செல்லக்கூடிய வயதினையுடைய இருப்பினும் பல்வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இடை நடுவில் பாடசாலை செல்வதை இடைநிறுத்திய மாணவர்களை மீள பாடசாலைக் கல்வியின் பொருட்டு முன் வைப்பது சமூக அபிவிருத்தி வேலை திட்டத்தின் ஒரு நடவடிக்கையாகும். இக்குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் சிறுவர்களை இனம் கண்டு அவர்களை குடியிருப்புக்களுக்கு அண்மியதாக உள்ள பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். இருப்பினும் அவர்களின் அதிகமானோருக்கு கல்வி உபகரணங்களை கொள்வனவு செய்வது சிரமங்கள் ஏற்பட்ட மையினால் பாடசாலை உபகரணத் தொகுதிகளும் வழங்கப்பட்டது.

### 2.4 குறுகிய கால தொழில் பயிற்சியும் திறன் மேம்பாட்டு வேலை திட்டமும்.

குடியிருப்புகளில் உள்ள இளைஞர் யுவதிகள் முறையான கல்வியினை பெறாமை காரணமாக முறையான தொழிற்பயிற்சி ஒன்றினைப் பெறாமை மற்றும் அவர்களது கவனயீனமும் தொழில் பயிற்சி தொடர்பாக உள்ள கல்வி நிறுவனங்கள் தொடர்பான அறியாமை காரணமாக தொழிலில்லாததாக வீணாக காலம் கடத்தப்படுகின்றது. இதன் காரணமாக இந்த இளம் சமூகத்தினரை தொழில் ரீதியான தகுதிகளை உடைய இளம் சமூகத்தினராக ஆக்குவதற்கும் அதனுடாக தொழில்களில் ஈடுபடச் செய்யவும் துணை புரியும் நோக்கத்தோடு இந்த வேலை திட்டத்தினை செயல்படுத்துவதன் பொருட்டு தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சியினை வழங்கும் அதிகார சபையின் பாடநெறிகளை தெரிவு செய்து கொள்ள வேண்டிய விதம் தொடர்பில் விழிப்பூட்டல் வேலை திட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது.

**<u>வருடாந்த முன்னேற்றம்</u>**

- குடியிருப்பில் உள்ள சிறுவர்களின் திறமைகளை விருத்தி செய்யும் பொருட்டு பலமான சிறுவர் கழகம் ஒன்றினை கட்டியெழுப்பி அந்த சிறுவர் கழகத்தினை நிலை பெயரானதாக நடத்திச் செல்கின்றது அதன்பிறகாரம் ஏழு சிறுவர் கழகம் தாபிக்கப்பட்டமையும் 12 கழகங்கள் இற்றைப் படுத்தப்பட்டமையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- தலைமைத்துவம், ஆளுமை விருத்தி, வேலைத்திட்டங்கள் 9 குடியிருப்புக்களில் மேற்கொள்ளப்பட்டதுடன் 331 சிறுவர்கள் அந்த வேலைத் திட்டத்தில் கலந்து கொண்டனர்.

- சிறுவர்களின் மனப்பாங்கு திறமையை விருத்தி செய்யும் வேலை திட்டத்தின் கீழ் கடுவெலை-வெலிஹிந்த குடியிருப்பின் சிறுவர்கள் அந்த குடியிருப்பிலேயே பல்வேறு நிகழ்ச்சிகள் ஆயத்தப்படுத்தி முன் வைத்ததுடன் நடனத்தின் பொருட்டு 45 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

- சிறுவர்களின் ஆக்கத் திறமையினை மேம்படுத்தும் பொருட்டு புதிய படைப்புக்களை மேற்கொள்ளும் விதம் தொடர்பான பயிற்சி வேலைத் திட்டங்கள் 7 மேற்கொள்ளப்பட்டதுடன் அதில் 124 சிறுவர்கள் தொடர்புபட்டனர்.

- சிறுவர் பாதுகாப்பினை பாதுகாத்துக் கொள்ளும் குறிக்கோளுடன் குடியிருப்புகளில் வாழும் சிறுவர்களுக்கு சிறுவர் உரிமைகள், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் அவற்றின் சட்ட ரீதியான பின்னணிகள் தொடர்பில் விளக்கமளிக்கும் வேலைத் திட்டங்கள் 8 மேற்கொள்ளப்பட்டதுடன் அதில் 188 சிறுவர்கள் கலந்து கொண்டனர்.

- அறிவு, திறமை, உள மேம்பாடு என்பவனைவற்றின் பொருட்டு சிறுவர் சமூகத்தினை தொடர்பு படுத்திக் கொண்டு குடியிருப்புக்களின் பொதுவான பாதுகாப்பு உள்ள இடமொன்றினைத் தெரிவு செய்து கொண்டு பத்து சிறுவர் நூலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு அது துணை புரிகின்றது.

- தேசிய சுதந்திர தின வைபவத்தோடு இணைந்ததாக சிறுவர்களின் அறிவுத்திறமை மற்றும் மனப்பாங்கினை விருத்தி செய்யும் நோக்குடன் குடியிருப்பு மட்டத்தில் நடாத்தப்பட்ட தேசிய சுதந்திர தின விழா வேலைத் திட்டங்கள் மூன்று குடியிருப்புகளில் 254 சிறுவர்கள் மற்றும் மக்களின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டது.

- சிறுவர்களின் படைப்பாக்க ஆற்றல்கள் மற்றும் விமர்சன ரீதியான சிந்தனைகளை உருவாக்குவதற்கு கட்டுரைப் போட்டி ஒன்று மேற்கொள்ளப்பட்டதுடன் அதில் வெற்றி பெற்ற சிறுவர்கள் மூவருக்கு டி எஸ் ஐ வவுச்சர் வழங்கப்பட்டது.

- குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் சிறார்களது பாடசாலைக் கல்வியினை மேம்படுத்துவதற்காக பாடசாலைகளுக்கான காலணிகளை கொள்வனவு செய்வதற்காக 80 வவுச்சர்கள் சிறுவர்களுக்கு வழங்கப்பட்டது.

- சிறார்கள் தொடர்ச்சியான அறநெறிக் கல்விக்காக அறநெறி பாடசாலைகளுக்கான சீருடைகள் வழங்கப்பட்டது.

- 2024 ஆம் ஆண்டில் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோன்றுகின்ற மாணவர்களை தொடர்பு படுத்திக் கொண்டு ஐந்து வேலை திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதில் 455 பேர் தொடர்பு கொண்டனர்.

- பாடசாலைக் கல்வியினை இடைநிறுத்திய 13 மாணவர்களை திரும்ப பாடசாலை கல்வியில் ஈடுபடும் நடவடிக்கைகளை மேற்கொண்டமை (சங்ஹிந்த செவன வீடமைப்பு தொகுதியில் இரண்டு சிறார்கள் முவதொர உயன வீடமைப்புத் தொகுதியில் இரண்டு சிறார்கள் மற்றும் அங்குலான சயிருபுற வீடமைப்பு தொகுதியில் 9 சிறார்களும்)

- குடியிருப்புகளில் வாழும் சிறுவர் சிறுமிகளின் தொடர்ச்சியான ஆரம்ப கல்விக்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்குவதற்காக 40 மாணவர்களுக்கு முன்பள்ளி உபகரணங்கள் வழங்கப்பட்டது.

- தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் பாட நெறிகளை தெரிவு செய்து கொள்ள வேண்டிய விதம் தொடர்பில் விளக்கமளிக்கும் வேலைத் திட்டங்கள் எட்டு 99 மாணவர்களின் பங்கேற்போடு நடத்தப்பட்டது அத்தோடு தொழிற்பயிற்சிப் பாடநெறியின் பொருட்டு 10 பேர் முன்வைக்கப்பட்டதுடன் 16 பேர் தையல் பாடநெறியை கற்று வருகின்றனர்.

## கல்வி வேலைத் திட்டங்கள் தொடர்பான புகைப்படங்கள்

### 2.1 இளைஞர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி வேலை திட்டங்கள்





### 2.2 நூலகங்களை ஆரம்பித்தல்





### 2.3 கல்வி விழிப்பூட்டல் வேலைத்திட்டங்கள்





### 2.4 குறுகிய கால தொழில் பயிற்சி மற்றும் திறமை விருத்தி வேலை திட்டங்கள்.





## 03. தொழில் முயற்சி அபிவிருத்தி வேலை திட்டங்கள்.

சுய தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தியின் ஊடாக மக்களது பொருளாதார சிறப்பு நிலையினை கட்டி எழுப்புவது இதன் குறிக்கோளாகும். மக்களையே அடிப்படையாகக் கொண்ட சிறிய அளவிலான உற்பத்தி பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்தல் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பின் தள்ளப்பட்ட மக்களுக்கிடையே மறைந்திருக்கின்ற சிறிய அளவிலான உற்பத்திகளை வெளிக்கொணறுவதன் முக்கியமான கட்டமைப்பாக இந்த வேலைத் திட்டத்தினை அழைக்க முடியும்.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை இனம் காண புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்துதல், அவர்களுக்கு நிதிக் கடன் வசதிகளை வழங்குதல் மற்றும் சந்தை வாய்ப்புகளை அறிமுகப்படுத்தி நகர குறைந்த வசதிகளையுடைய குடியிருப்புகளின் மக்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டி அவர்களுக்கு பலம் ஒன்றாக இருப்பது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவதுடன் அது தொடரான 4 உப வேலைத் திட்டங்களின் ஊடாக கீழுள்ள பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

### 3.1 தொழில் முயற்சி அபிவிருத்தி பயிற்சி
(வளங்களின் கட்டணம், பயிற்சி, பொருட்கள், நிர்வாகம், செலவு)

### 3.2 தொழில் முயற்சியாளர்களை விளக்கம் அளிக்கும் வேலை திட்டம்.

சிறிய அளவிலான வணிகம் ஒன்றினை ஆரம்பித்தல் மற்றும் வெற்றிகரமாக நடாத்திச் செல்லும் பொருட்டு எதிர்கால தொழில் முயற்சியாளர்களின் தொழில் முயற்சி அபிவிருத்திச் செயற்பாடுகளை இனம் கண்டு நகர குடியிருப்புகளில், சுய தொழிலில் ஈடுபடும் மற்றும் புதிதாக சுய தொழில் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்புடன் உள்ள ஆட்களுக்கு தேவையான தொழில்நுட்ப அறிவு நிதியுதவி மற்றும் வழிகாட்டல்களை வழங்கி தனக்கென்று வணிகம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு, ஊக்குவிப்பதற்கு மற்றும் மேம்படுத்துவதற்கு உதவுகின்ற பிரகாரம் பயிற்சி வேலைத் திட்டங்களை திட்டமிடுவது மேற்கொள்ளப்படுகின்றது.

குறைந்த வருமானம் பெறும் மக்களின் உழைப்பினை பயனுள்ள விதத்தில் பயன்படுத்திக் கொண்டு பொருளாதாரத்தினை கட்டி எழுப்புவதும், மனைப்பொருளாதாரத்தினை பலப்படுத்துவதும் இந்த வேலைத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. மக்களின் தேவைகளின் பிரகாரம் ஆடை தயாரிக்கும் பயிற்சி சவர்க்கார உற்பத்தி பயிற்சி, விளக்குத்திரி உற்பத்தி பயிற்சி கைகழுவும் திரவங்கள் மற்றும் பண்டங்களை கழுவும் உற்பத்திகள் அத்துடன் பத்திக் உற்பத்தி தொடர்பான பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டது.

மேலும் தற்போதுள்ள பொருளாதார சிக்கல்களை வெற்றி கொள்வதற்கு சுய தொழிலை அறிமுகப்படுத்தி அவற்றினை நடாத்திச் செல்கின்ற விதம் தொடர்பில் சந்தையினை உருவாக்கிக் கொள்வது தொடர்பில் விளக்கங்கள் மேற்கொள்ளப்பட்டது விதாத்தா வள நிலையங்கள், இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, விவசாய அமைச்சு, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, சிறு தொழில் முயற்சிகள் அபிவிருத்தி நிறுவனம் மற்றும் பிரதேச செயலகங்கள் போன்ற அரசு நிறுவனங்கள் இதற்கு தேவையான வளப்பங்களிப்பினை வழங்கியது.

### 3.3 புதிய.'.நடைமுறையில் உள்ள.'.சிறிய அளவிலான தொழில் முயற்சியார்களுக்கு உதவிகள் மற்றும் நிதி உதவிகளை வழங்குதல்.

**(ரூபா 25இ000ஒ50 கடன் 10 மூ வருடாந்த வட்டியுடன்)**

புதிய தொழில் முயற்சி ஒன்றினை ஆரம்பிப்பதற்கு அல்லது நடைமுறையில் உள்ள தொழில் முயற்சியினை விரிவாக்கம் செய்வதற்கு விரும்புகின்ற தொழில் முயற்சியளர்களுக்கு சிறிய அளவிலான தொழில் முயற்சியினை மேம்படுத்தும் பொருட்டு சலுகை வட்டி வீதத்துடனான கடன் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அந்த மக்களுக்கு சுய தொழில் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு சிறிய அளவிலான தொழில் முயற்சிக்கு பயிற்சி வேலை திட்டங்கள் ஊடாக தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டது.

### 3.4 தொழில் முயற்சியாளர்களை பின் பணி ஆய்வு செய்தல்.

சுய தொழிலை ஆரம்பித்தல், நடாத்திச் செல்வது தொடர்பாக நடத்தப்பட்ட பட்டறை மட்டும் பயிற்சி சார்ந்த தொழிற்முயற்சியாளர்களால் போட்டிச் சந்தைக்குள் தனது உற்பத்திகளை தரம் வாய்ந்த விதத்தில் வாடிக்கையாளர்களுக்கு முன் வைப்பதற்கு பின்னணி ஒன்றினை உருவாக்குவது இந்த வேலைத் திட்டத்தின் மூலம் நடைபெறுகின்றது இங்கு அறிவைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் பயிற்சிகளை பெறுதல் மற்றும் நிதிகள், பலன்களை பெற்றுக் கொண்டதன் பின்னர் சுய தொழில் முயற்சியாளர்களின் பொருளாதாரத்திற்கு தாக்கங்கள் ஏற்படுகின்ற விதம் மற்றும் அவற்றினை நடாத்திச் செல்கின்ற விதங்கள், பின் பணி ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

சிறு தொழில் முயற்சியாளர்களுக்கு தனது உற்பத்திகளை விரிவான வரம்பிற்குள் வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் அவர்களது உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு சந்தைகளை அறிமுகப்படுத்துவதோடு ஒழுங்கு மூலம் செய்வதன் ஊடாக அவ்வாறான சிறிய தொழில் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பதற்கு எமது அதிகார சபையின் தலையீடு வழங்கப்படுகின்றது. தொழில் முயற்சியாளருக்கு போட்டிச் சந்தையில் தனது உற்பத்திகளை தரம் வாய்ந்த விதத்தில் முன்வைப்பதற்கும் தனது உற்பத்திகளுக்கான கட்டளைகளை பெற்றுக் கொள்வதற்கும் நடைமுறையில் உள்ள பொருளாதார முறைகள் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கு உற்பத்தியின் பொருட்டு பெறுமதி ஒன்றினை வழங்குவதற்கு இந்த சந்தைகள் இருப்பதன் ஊடாக வாய்ப்புகள் கிடைக்கின்றன.

அதன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டில் செப்டம்பர் 30 மற்றும் அக்டோபர் 01 ஆகிய இரு தினங்களில் செத்சிரிபாய வளவுக்குள் தொழில் முயற்சி விற்பனைக் கண்காட்சி நடைபெற்றதுடன் அதில் எமது அதிகார சபையின் நிதியல் ரீதியான கடன்களை பெற்றுக் கொண்ட தொழில் முயற்சியாளர்கள் ஊடாக நடாத்தப்பட்ட சுய தொழில் பயிற்சி பட்டறையின் பொருட்டு கலந்து கொண்ட தொழில் முயற்சியாளர்களின் கூட்டுறவுடன் இந்த வணிகக் கண்காட்சி நடாத்தப்பட்டது. அங்கு உற்பத்தி மற்றும் உணவு ஆகிய இரு பிரிவுகளிலும் தொழில் முயற்சியளர்கள் கலந்து கொண்டதுடன் அவர்களை ஊக்குவிக்கும் முகமாக அனுசரணையாளர்களின் தலையீட்டினைப் பெற்றுக் கொண்டு பரிசீல்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது மேலும் மேற்படி இரு பிரிவுகளின் ஊடாக சுற்றாடல் நேயமிக்க மற்றும் உள்நாட்டு உற்பத்திகளை முன்வைத்த வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்கள் சின்னங்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டது.

<u>**வருடாந்த முன்னேற்றம்**</u>

- மக்கள் 85 பேருக்கு சுய தொழில் வேலைத் திட்டம் தொடர்பான ஆரம்ப விளக்கங்கள் மேற்கொள்ளப்பட்டது.
- 190 தொழில் முயற்சியளர்களுக்கு பயிற்சி பட்டறைகள் நடத்தப்பட்டது
- விளக்குத்திரி உற்பத்தி, சவர்க்கார உற்பத்திக்கு, பத்திக் உற்பத்திப் பயிற்சி, பசளை உற்பத்தி பயிற்சி, தையல் பயிற்சி (கொழும்பு கம்பஹா நுவரெலியா இரத்தினபுரி மாவட்டங்களில் பயிற்சி வேலை திட்டங்கள் நடத்தப்பட்டது)
- 13 தொழில் முயற்சியாளர்களுக்கு சுய தொழில் கடன் திட்டத்தின் மூலம் கடனை வழங்குதல்
- சுய தொழிலில் ஈடுபடுவோரை ஊக்குவித்தல் சந்தை வாய்ப்புகளை அறிமுகப்படுத்தும் நோக்கத்தோடு வருட இறுதியில் வணிக கண்காட்சி செப்டம்பர் 30 மற்றும் அக்டோபர் 1 ஆகிய இரு தினங்களில் செத்சிரிபாய வளவிற்குள் 45 தொழில் முயற்சியாளர்களின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டது.

## தொழில்முயற்சி அபிவிருத்தி வேலைத் திட்டத்தோடு தொடர்புடைய புகைப்படங்கள

**3.1** தொழில்முயற்சி அபிவிருத்தி பயிற்சி (வளக்கட்டணம், பயிற்சி, மூலப் பொருட்கள், நிர்வாகச் செலவு))






**3.2 தொழில் முயற்சியாளர்களை விளக்கம் அளிக்கும் வேலைத் திட்டங்கள்**



**3.3 புதிய நடைமுறையில் உள்ள சிறிய அளவிலான தொழில் முயற்சியாளர்களின் பொருட்டு உதவிகளும் நிதி உதவிகளையும் வழங்குதல்**
**(ரூபா.25,000 x 50 கடன் 10% வருடாந்த வட்டியுடன்)**




**3.4 தொழில் முயற்சியாளர்களை பின் பணி ஆய்வு செய்தல்.**






## 04. சமய கலாசார மற்றும் திறன் மேம்பாட்டு வேலைத் திட்டம்

இலங்கையின் சமய மற்றும் கலாச்சார கலைகள் தொடர்பான நவீன இளைஞர் சமூகத்திற்குள் விருப்பம் ஒன்றினை ஏற்படுத்துவதும் கலைத்திறமைகளை உடைய இளைஞர் யுவாதிகளுக்கு புதிய திசையினை உருவாக்கிக் கொடுத்து நவீன உலகிற்கு பொருத்தமான கலை திறமைகளை உடைய உணர்வு மிக்க ஆக்களை உருவாக்குவதனை நோக்காக கொண்டு நாடு தழுவிய ரீதியில் உள்ள நகர குடியிருப்புகளில் வசிக்கும் இளைஞர் சமூக மற்றும் சிறுவர் சமூகத்தினை இலக்காகக் கொண்டு இந்த வேலை திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அது கீழுள்ள உப வேலை திட்டங்கள் இரண்டின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

4.1.1 கலாச்சார மற்றும் சமய வேலைத் திட்டங்கள்
4.1.2 வெற்றி பெறுபவர்களை பாராட்டுதல்

இங்கு இனங்களுக்கிடையே சமய சகவாழ்வினை உருவாக்குவது மற்றும் ஆத்மீக விருத்தியினை உருவாக்குவதற்காக குடியிருப்பு மட்டத்தில் வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டது சிறுவர்களுக்கு இடையே தேசிய அபிமானத்தினை உருவாக்குவது மற்றும் சிறுவர்களின் திறனாற்றல்களை விருத்தி செய்வதற்காக இந்த கலாச்சார மற்றும் சமய வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

குடியிருப்புகளில் வாழும் குறைந்த வருமானம் பெறும் சமயக் கல்வியை பெறுகின்ற சிறார்கள் சமயக் கல்வியினை உயர்த்துதல் கலாச்சார மற்றும் சமயத் திறமைகளை பாராட்டும் முகமாக அச்சிறுவர்களுக்கு பரிசீல்களும் வழங்கப்பட்டன.

சிறுவர் கழகங்கள், இள மற்றும் முதியோர் சங்கங்கள் கூட்டிணைந்து குடியிருப்புகளில் சித்திரைப் புத்தாண்டினை ஒழுங்கு செய்தது இனங்களுக்கிடையே மற்றும் கலாச்சார சகவாழ்வினை உருவாக்குவது, ஆத்மீக விருத்தியினை ஏற்படுவதன் ஊடாகவும் சிறுவர்களின் படைப்பாக்கத்திறன் மற்றும் திறமைகள் மேம்படுவதற்காக இந்த வேலை திட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றது.

சமுதாய அமைப்புகள், இளையோர் மற்றும் முதியோர் சங்கங்கள் மூலம் வெசாக் அலங்காரம் மற்றும் பக்தி கீத போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டதுடன் கானசாலைகள் தர்மபோதனை போன்ற நன்மையான விடயங்கள் வெசாக், பொசன் நோன்மதி தினத்திற்காக குடியிருப்பு மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. சிறுவர்கள் மக்கள்களை தொடர்பு படுத்திக் கொண்டு சிறார்களின் கலைத்திறனை இனம் காண்பதற்கு பல்வேறு போட்டிகளுடன் ரசனை விருந்து வேலை திட்டங்களும் நடைபெற்றது.

2024 ஆம் ஆண்டின் பொருட்டு உலக குடியிருப்பு தின ஞாபகார்த்தத்தினை நோக்காகக் கொண்டு முழு நாடும் உள்ளடங்குகின்ற பிரகாரம் நகரப் பிரதேச குறைந்த வருமானத்திணை உடைய குடியிருப்புகளின் சிறுவர் சிறுமிகளின் படைப்பாக்கத் திறனையும், சிறுவர் மனப்பாங்கினையும் அதிகரிக்கச் செய்யும் நோக்கோடு சிறுவர் நடன போட்டி ஒன்று நடாத்தப்பட்டது. இங்கு ஒரு நடனக் குழுவிற்கு 04 இற்கும்12இற்கும் இடைப்பட்ட சிறுவர்கள் கலந்து கொண்டதுடன் அவர்களுக்கு புதிய ஆக்கங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பமும் உருவாகியது. இந்த நடனப் போட்டியின் பொருட்டு சிறுவர்கள் தனது குடியிருப்புக்குள் மிக ஊக்கத்தோடு பயிற்சிகளில் கலந்து கொண்டதுடன் நடன போட்டிகளில் தனது நடனங்களை படைப்பாக்க ரீதியாக சமர்ப்பித்தனர்.

இந்த நடன போட்டியினை மத்தியஸ்தம் செய்வதற்கு இத்துறையில் பிரபலமான ஆட்களை கொண்ட நடுவர் குழு ஒன்று கலந்து கொண்டது. கொழும்பு, கம்பஹா, காலி, மாத்தறை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள் உள்ளடங்குகின்ற பிரகாரம் குடியிருப்பு மட்டத்தில் 30 நடனக் குழுக்கள் இந்த வேலை திட்டத்தின் பொருட்டும் கலந்து கொண்டனர் அதில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை பெற்றுக் கொண்ட சிறுவர் நடனக் குழுக்களுக்கு உலக குடியிருப்பு தின ஞாபகார்த்த வைபவத்தில் சான்றிதழ்களும் கிண்ணங்களும் வழங்கப்பட்டது.

**வருடாந்த முன்னேற்றம்**

- இனங்களுக்கிடையே சமய சகவாழ்வினை உருவாக்குதல் மற்றும் ஆத்மீக விருத்தியினை ஏற்படுத்துவதற்காக சமய வேலைத் திட்டங்கள் நடத்தப்பட்டது.இதன் பொருட்டு 85 பேர் கலந்து கொண்டனர்.
- சிறுவர்கள் மத்தியில் தேசிய அபிமானத்தினை ஏற்படுத்துவது மற்றும் சிறுவர்களின் திறனாற்றலை விருத்தி செய்வதற்காக சுதந்திர தின விழாவினை கொண்டாடுதல் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதுடன் மூன்று குடியிருப்புகளில் இருந்து 70 சிறுவர்கள் மற்றும் முதியோர்கள் கலந்து கொண்டனர்.
- சமயக் கல்வியினைப் பெறுகின்ற சிறுவர்களின் சமய அறிவை அதிகரித்தல், கலாச்சார மற்றும் சமயத் திறமைகளை மதிப்பிடுவதற்காக 150 மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டது.
- ஒன்பது குடியிருப்புகளில் ஏப்ரல் மாதத்தில் தமிழ் சிங்கள புத்தாண்டு வைப்பவங்களை ஒழுங்கு செய்ததுடன் இதற்காக 1610 மேற்பட்ட ஆட்களின் சிறுவர்கள் முதியோர் மற்றும் இளவயதினரன கலந்து கொண்டனர்.
- குடியிருப்புகள் மட்டத்தில் சிறுவர் கழகங்கள், சமுதாய அமைப்புகள், முதியோர் சங்கங்கள் என்பன கூட்டினைந்து வெசாக் அலங்கார கண்காட்சி, பக்திகீத போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டதுடன் தானம் வழங்குதல், தர்ம போதனை போன்ற புண்ணியமான நடவடிக்கைகளும் ஒழுங்கு செய்யப்பட்டதோடு இந்த வேலை திட்டத்திற்காக 810 பேர் 11 குடியிருப்புகளில் இருந்து தொடர்பு பட்டனர்.
- சமயக் கல்வியினை தொடர்ச்சியாக நடாத்திச் செல்லும் பொருட்டு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த ரத்கம ரலஜயபுர சமய பாடசாலை திரும்ப ஆரம்பிக்கப்பட்டமை. இதற்காக 40 சிறுவர்கள் திரும்ப கல்வியை பெற்றுக் கொள்வதற்கு தொடர்பு படுத்தப்பட்டனர்.
- சிறுவர்களின் ஆற்றல்கள் மற்றும் கலைத்திறன்களை இனங்காண்பதற்கு நடாத்தப்பட்ட ரசனை விருந்து நிகழ்வின் பொருட்டு 63 சிறார்களும் 19 ஆட்களும் கலந்து கொண்டனர்.

## சமய கலாச்சார மற்றும் திறன் மேம்பாட்டு வேலை திட்டங்கள்.

### சமய நிகழ்வுகள்





சுதந்திர தின வைபவத்தினை கொண்டாடுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடாத்துவதும்




சிறுவர்களின் சமயக் கல்வியினை உயர்த்துதலும் கலாச்சார மற்றும் சமய திறன்களை மதிப்பீடு செய்வதற்காக பரிசில்களை வழங்குதல்.




தமிழ் சிங்கள புத்தாண்டு வைப்பவத்தினை ஒழுங்கு செய்தல




பக்தி கீதம் தானசாலை மற்றும் தர்ம போதனை புண்ணிய நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல்




**சமயக் கல்வியினை வழங்குதல்**





**சிறுவர்களின் ஆற்றல்கள் மற்றும் கலைத்திறன்களை இனங்காண்பதற்காக நடாத்தப்பட்ட இரசனை விருந்து நிகழ்வுகள்**





**உலக சிறுவர் தின கொண்டாட்டதிற்காக நடாத்தப்பட்ட சிறுவர் நடன போட்டிகள்**









## 2024 உலக குடியிருப்பு தினம்

உலக குடியிருப்பு தின ஆரம்பம் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கும் போது 1985 ஆம் ஆண்டில் ஜமைக்கா கிங்ஸ்டன் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித குடியிருப்பு ஆணைக்குழுவின் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முன்மொழி ஒன்றின் அமைய 1986 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாத முதலாவது திங்கட்கிழமை தினத்தில் உலக குடியிருப்பு தினம் சர்வதேச மட்டத்தில் வைபவ ரீதியாக கொண்டாடப்படுகின்றது அதன் பிரகாரம் இவ்வாண்டில் இளையோரின் பலத்தினைக் கொண்ட பூரணமான நகரம் ஒன்று என்ற தலைப்பின் கீழ் 38-வது உலக குடியிருப்பு தினம் கொண்டாடப்பட்டது.

2010 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஆரம்பகட்டத்தில் கொழும்பு நகரப் பிரதேசம் மற்றும் அதன் பின்னர் நாடு பூராகவும் விரிவாக்கம் செய்து 11 மாவட்டங்கள் உள்ளடங்கிய பிரகாரம் குறைந்த வசதிகளை உடைய மக்களை தொடர்புபடுத்திக் கொண்டு தொடர்ச்சியாக உலக குடியிருப்பு தின வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

அதற்கு அமைய சிறுவர் ஓவியப்போட்டிகள், சிறுவர் நடனப் போட்டிகள் சிறுவர் குறுந்திரைப்பட போட்டிகள், தொழில் முயற்சி வணிக மேம்பாட்டு வேலைத் திட்டங்கள், சிறு குழு அங்கத்தவர்களுக்கான நிதி முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிப் பட்டறைகள், அணிக்கு ஆறு பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டிகள், பெற்றோர் பாதுகாப்பற்ற சிறுவர்களுக்கான பாடசாலை உபகரணங்களை வழங்குதல், சிறுவர் நூலகங்களை உருவாக்குதல் மற்றும் பொதுச்சொத்துக்களின் பயன்பாடு தொடர்பான விழிப்புணர்வு வேலைத் திட்டங்கள் நடாத்தப்பட்டது .

உலக குடியிருப்பு தினத்தினை தலைப்பாகக் கொண்டு ஒவ்வொரு வருடமும் நடத்தப்படுகின்ற சிறுவர் ஓவிய போட்டிகள் அதே விதத்தில் 2024 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது அதன் பிரகாரம்

- 6-9 வயதுத் தொகுதி
- 10-14 வயதுத் தொகுதி
- 15-18 வயதுத் தொகுதி

இதன்கீழ் 2024 ஆம் ஆண்டில் சமூக அபிவிருத்தி வேலை திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட குடியிருப்புகளின் சிறார்களது பங்கேற்போடு மேலே குறிப்பிடப்பட்ட போட்டிகள் நடத்தப்பட்டது. முதலாவது கட்டத்தில் சிறுவர்களால் முன்வைக்கப்பட்ட ஓவியங்கள் 3500 லிருந்து படைப்பாக்க ரீதியான 500 ஓவியங்கள் இரண்டாம் கட்டத்தின் பொருட்டு தெரிவு செய்து கொள்ளப்பட்டதுடன் அந்த 500 பேரின் பங்கேற்போடு இரண்டாம் கட்டத்தில் ஓவியப் போட்டிகள் கம்பஹா உடுகம்பொல செனரத் பரணவித்தான தேசிய பாடசாலையில நடாத்தப்பட்டது. அங்கு 6-9 வயதுத் தொகுதியின் பொருட்டு அழகான நகரம் ஒன்றின் நாளைய தினம், இலகு அழகு ஒன்றிணைந்த நகரம் ஒன்று, மரம் செடி "கொடி நிறைந்த அழகான நகரம் ஒன்று" என்ற பெயரிலும் 10-4 மற்றும் 15-18 வயது தொகுதியின் பொருட்டு நகர எழுச்சிக்கு இள வயதினரின் நோக்குகள், இயற்கையோடு நகரை கட்டி எழுப்புவோம், நகரையும் சுற்றாடலையும் கூட்டினைப்போம் ஆகிய தலைப்புகளின் ஊடாக ஓவிய ஆக்கங்கள் மேற்கொள்ளப்பட்டது இங்கு சிறுவர்கள் மிக ஊக்கத்தோடும் அர்ப்பணிப்போடும் இதில் கலந்துகொண்டு சித்திர ஆக்கங்களை மேற்கொண்டமையைக் காணக் கிடைத்தமை விசேட அம்சமாகும்.

மேலும் சிறுவர்களின் படைப்பாக்கத் திறமைகளை பயன்படுத்திக் கொண்டு "இளவயது பலத்தினால் நிறைந்த ஒரு நகரம்" என்ற தலைப்பின் கீழ் கையடக்க தொலைபேசிகளைப் பயன்படுத்தி ஐந்து நிமிட ஆக்கபூர்வமான குறுந்திரைப் போட்டி ஒன்றினை செயற்படுத்தியதுடன்(ஒரு குழுவில் ஆகக் கூடியது 11 சிறார்கள்) வென்ற வகையில் 10 குழுக்களில் 100 பேர் மட்டளவில் அதில் கலந்து கொண்டனர் விஷேடமாக அது செயல்பாடு உள்ள சிறுவர் கழகங்களின் அங்கத்தவர்களின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டது.

இதன் பொருட்டு சமூக அபிவிருத்தி வேலை திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட கொழும்பு கம்பஹா மாத்தளை நுவரெலியா ஆகிய மாவட்டங்களின் குடியிருப்புகளில் இருந்து குறுந்த திரைப்படங்கள் முன்வைக்கப்பட்டது சிறுவர் குறுந்திரைப்படம் தொடர்பான விசேட நிபுணத்துவத்தினையுடைய நடுவர்களைக் கொண்ட நடுவர் குழுவின் பங்கேற்பின் அடிப்படையில் சிறந்த ஆக்கங்கள் மூன்று

வெற்றி பெற்ற குறுந்திரைப் படமாக தெரிவு செய்யப்பட்டது. இங்கு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் சான்றிதழ்கள் கிண்ணங்களும் வழங்கப்பட்டது.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை இனங்காணுதல், புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்துதல், அவர்களுக்கு நிதியியல் கடன்களை வழங்குதல் மற்றும் சந்தை வாய்ப்புகளை அறிமுகப்படுத்தி நகரப் பிரதேச குறைந்த வசதிகளை உடைய குடியிருப்புக்களில் மக்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டச் செய்யும் பொருட்டு தேவையான வேலைத் திட்டங்கள் சுய தொழில் வேலை திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. உற்பத்தபி பொருளாதாரத்தினை அடிப்படையாகக் கொண்டு உலக குடியிருப்பு தினத்தோடு இணைந்ததாக தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்புகளை அறிமுகப்படுத்துவது இந்த வேலைத் திட்டத்தின் குறிக்கோளாகும்.

இந்த வேலைத் திட்டத்தின் பொருட்டு உணவுப் பிரிவு, உற்பத்திப் பிரிவு, ஆகிய இரு பிரிவுகளிலிருந்தும் 45 தொழில் முயற்சியளர்கள் பங்கேற்றனர். விசேடமாக தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் கலந்து கொண்டு புதிதாக உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்த தொழில் முயற்சியாளர்கள் மற்றும் தொழில் முயற்சியிலே மேற்கொண்டு வருகின்றவர்களை தொடர்ந்தும் பலப்படுத்திக் கொள்வதற்கு இன்னொருமுறை வழங்குவது இதன் முக்கிய குறிக்கோளாகும்.

சிறு குழு உத்தியோகத்தர்களின் பொருட்டு ஊக்குவிப்பு ரீதியான வேலைத் திட்டம் ஒன்று உலக குடியிருப்பு தினத்தோடு இணைந்ததாக, சுற்றாடல் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது. இங்கு 15 சிறு குழுக்களின் 52 உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் சிறு குழுக்களில் உள்ள உத்தியோகத்தர்களின் நிதியியல் ஒழுக்காற்று, கணக்குகளை பராமரித்து செல்லல், மக்கள் பங்கேற்பு மற்றும் குழுமுறையின் செயற்பாட்டு அறிவுத் திறன் மற்றும் மனப்பாங்கினைவிருத்தி செய்யும் பொருட்டு இப்பட்டறை நடத்தப்பட்டது இதன் பொருட்டு மொனராகலை, அனுராதபுரம், காலி, கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களின் குடியிருப்புகளில் இருந்து சிறு குழு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

உலக குடியிருப்பு தினத்தினைக் கொண்டாடும் பொருட்டு நகர பிரதேச குறைந்த வசதிகளை உடைய குடியிருப்புகளில் வாழும் இளைஞர் யுவதிகளின் விளையாட்டுத் திறமைகளை உயர்த்துவதனை நோக்கமாகக் கொண்டு அணிக்கு ஆறு பேரடங்கிய மென் பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. இளைஞர் யுவதிகளுக்கு இடையே ஒரு குழு ரீதியான உணர்வு தலைமைத்துவம் மற்றும் மனப்பாங்கினை விருத்தி செய்வதன் ஊடாக அவர்களை மனித வள அபிவிருத்தி கேட்பார்க்கு நேரடியாக பங்களிப்புச் செய்து கொள்வது இந்த வேலை திட்டத்தினை மேற்கொள்வதன் முக்கிய குறிக்கோளாக இருந்தது.

மேலும் நகரப் பிரதேச இளைஞர் பிரிவினரிடையே அதிகரித்து வருகின்ற சமூக விரோத செயற்பாடுகளை குறைத்து மற்றும் அவர்களை சமூகத்திற்கு அத்தியாவசியமான ஆட்களாக மாற்றுவதும் இந்த வேலைத் திட்டத்தின் குறிக்கோள் ஆகும். கொழும்பு மாவட்டத்தில் முதலாவது சுற்றிற்கான போட்டிகள் சாலிக்கா விளையாட்டு அரங்கிலும் கம்பஹா மாவட்டத்தின் முதலாவது சுற்றின் போட்டிகள் கம்பஹா செனரத் பரணவிதான தேசிய பாடசாலையிலும் நடாத்தப்பட்டது. கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களின் இரண்டாம் சுற்றுப் போட்டிகள் கம்பஹா செனரத் பரணவிதான தேசிய பாடசாலையில் நடாத்தப்பட்டு அதில் வெற்றி பெற்றோர் தெரிவு செய்து கொள்ளப்பட்டது. இந்த ஆறு பேர் கொண்ட கிரிக்கெட் போட்டியானது ஆண்கள் மற்றும் பெண்கள் என்ற வகையில் இரு தொகுதிகளின் கீழ் போட்டிகள் நடத்தப்பட்டது. இங்கு கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய இரு மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி 05 மகளிர் கிரிக்கெட் குழுவும் கொழும்பு நகர வளையத்திலிருந்து 11 கிரிக்கெட் குழுவும் கம்பஹா மாவட்டத்தில் இருந்து 11 ஆண்கள் கிரிக்கெட் குழுவினரும் போட்டியிட்டனர்.

| சொத்து | 01/01/2024 திகதியில் மீதி | வருடாந்த சிபாரிசு / மாற்றங்கள் | வருடாந்த அகற்றுதல் / மாற்றங்கள் | 31/12/2024 திகதியில் மீதி | 01/01/2024 திகதியில் திரட்டிய தேய்மானம் | 2024 ஆண்டின் தேய்மானம் | பண்டங்கள் அகற்றுதல் / மாற்றங்கள் திரட்டிய தேய்மானம் | 31/12/2024 திகதியில் திரட்டிய தேய்மானம் | 31/12/2024 திகதியில் மீதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கணக்கீட்டு மென்பொருள் | 500,000.00 | - | - | **500,000.00** | **349,657.53** | **125,000.00** | - | **474,657.53** | **25,342.47** |

| விபரம் | 2024 (இல.ரூ) | 2023 (இல.ரூ) |
|---|---|---|
| குறிப்பு *10* | | |
| தொடர் சேவை | | |
| அங்குலானை சன சமூக நிலையம் | 6,747,972.83 | 6,747,972.83 |
| லுனாவை தொடர் வேலை | (0.01) | (0.01) |
| நாவலப்பிட்டி வீடமைப்பு வேலைத்திட்டம் | 623,846.17 | 623,846.17 |
| துடுவேகொட வீடமைப்பு வேலைத்திட்டம் | 871,755.00 | 871,755.00 |
| அநுராதபுரம் கலப்பு அபிவிருத்தி வேலைத்திட்டம் | 47,922.74 | 47,922.74 |
| அத்துருகிரிய நடுத்தர வருமானம் | 84,500.00 | 84,500.00 |
| கடுவெளை வீடமைப்புக் கருத்திட்டம் | 1,176,830.10 | 1,176,830.10 |
| களுத்துறை பெப்பிலியாவத்தை | 5,940.00 | 5,940.00 |
| ஒச்சரட்வத்தை வீடமைப்பு | 3,496,910.90 | 2,492,432.80 |
| ஸ்ரீ ஜயவர்த்தனபுர கருத்திட்டம் | 2,014,232.72 | 1,894,232.72 |
| வெலிசரலமில்லகஹவத்தை கருத்திட்டம் | 10,928,882.59 | 8,528,507.59 |
| **மொத்தம்** | **25,998,793.04** | **22,473,939.94** |

*குறிப்பு 13*

**திரட்டிய செலவுகள்**

| | | |
|---|---|---|
| திரட்டிய உ.சே.நி | 1,393,551.58 | 1,198,617.78 |
| திரட்டிய உ.ந.நிதி | 209,029.76 | 179,792.68 |
| திரட்டிய செலவுகள் (சேவைகள்) | 10,000.00 | |
| மொத்த எரிபொருளும் உராய்வு நீக்கி | 275,153.31 | 297,680.49 |
| திரட்டிய தங்குமிட | 11,583.00 | - |
| திரட்டிய குத்தகை வாகனம் | 671,692.32 | 726,564.11 |
| திரட்டிய சட்டக் கணக்கு | 3,000.00 | 6,000.00 |
| திரட்டிய லுனாவை வீடமைப்புத் திட்டம் | 434,831.43 | 2,999,464.37 |
| திரட்டிய மேலதிக நேர | 327,470.83 | 458,750.75 |
| திரட்டிய அலுவலக வாடகை | 2,791,948.16 | 2,525,697.25 |

| விபரம் | 2024 (இல.ரூ) | 2023 (இல.ரூ) |
|---|---|---|
| திரட்டிய ஏனைய கொடுப்பனவுகள் | - | 5,000.00 |
| திரட்டிய அறவீடுகள் தரகு | - | 23,467.54 |
| திரட்டிய வாகனத் திருத்தமும் பராமரிப்பும் | 1,834,600.00 | 73,262.23 |
| திரட்டிய தொலைப்பேசிக் கட்டணம் | 123,462.10 | 219,621.92 |
| திரட்டிய பிரயாணப்படி | 36,440.10 | 17,789.10 |
| திரட்டிய சுவசக்தி மனிதவள அபிவிருத்தி | - | 40,993.19 |
| செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் | 800,000.00 | 1,255,040.00 |
| செலுத்த வேண்டிய அ.பொறி.கூட். கணக்கு | 0.90 | 0.90 |
| செலுத்த வேண்டிய முத்திரை கட்டணக் கணக்கு | 9,175.00 | 10,175.00 |
| திரட்டிய ஸ்ரீவிக்ரமபுர செலவுகள் | - | 31,111.52 |
| பணியாளர்களுக்கான திரட்டிய உழைப்புக் கொடுப்பனவு | - | 11,950.00 |
| திரட்டிய போக்குவரத்து கொடுப்பனவு | 415,000.00 | 450,000.00 |
| உத்தியோகத்தர்களின் திரட்டிய பிரயாணப்படி மற்றும் உழைப்புக் கொடுப்பனவு | - | 4,000.00 |
| திரட்டிய தூய்மையாக்க கட்டணம் | 252,756.00 | 99,076.93 |
| திரட்டிய தோற்றுவாய் சமூக மயப்படுத்தல் | - | 340,393.51 |
| திரட்டிய பணிப்பாளர் கட்டணம் | - | 108,000.00 |
| திரட்டிய வரிசெலுத்துவோரின் வரி | 56,306.00 | 4,514.00 |
| திரட்டிய அச்சுச்செலவு | 84,880.00 | 144,100.00 |
| திரட்டிய கணினி திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு | 43,213.00 | 81,910.00 |
| திரட்டிய பணியிட பயன்பாட்டுச் செயலகம் | - | 2,464.45 |
| திரட்டிய SM செலவுகள் | - | 22,900.00 |
| திரட்டிய ஸ்ரீ விக்ரமபுர | 15,500.00 | 4,474.91 |
| திரட்டிய பணியாளர் குழாம் கொடுப்பனவு B/M | - | 4,000.00 |
| திரட்டிய எழுது கருவி | 1,145,207.29 | 103,500.00 |
| சகல பணியாளர் குழாமினருக்கான திரட்டிய தொலைபேசி கட்டணம் | 66,000.00 | 65,000.00 |

| விபரம் | 2024 (இல.ரூ) | 2023 (இல.ரூ) |
|---|---|---|
| திரட்டிய பயிற்சிகள் | - | 10,000.00 |
| திரட்டிய பயிலுனர்கள் | 64,250.00 | 85,750.00 |
| திரட்டிய நலன்புரி | - | 37,770.00 |
| திரட்டிய உலக குடியிறுப்பு தினம் | 105,000.00 | 500,000.00 |
| செலுத்த வேண்டிய வங்கிக் கட்டணம் | - | 50,000.00 |
| வங்கி வருமானம் அங்குலானை MC நிதியம் | 7,177.48 | 15,110.47 |
| திரட்டிய சமூக அபிவிருத்தி | 52,284.80 | 551,000.00 |
| வட்டி வருமானம் லுனாவை MC நிதியம் | 206,394.65 | 50,097.53 |
| வட்டி வருமானம் சிங்ஹபர MC நிதியம் | 1,147.44 | 1,529.91 |
| வட்டி வருமானம் வதுளவத்தை MC நிதியம் | 664,228.95 | 488,719.73 |
| செலுத்த வேண்டிய சம்பளம் | 115,917.30 | 147,324.28 |
| திரட்டிய ஓச்சர்ட்வத்தை செலவுகள் | 31,000.00 | 31,000.00 |
| செலுத்த வேண்டிய பிடிபண வரி | 2,448,791.73 | 1,901,362.40 |
| திரட்டிய – நீர்கசிவு | 16,595,520.00 | - |
| திரட்டிய – அங்குலானை பராமரிப்பு | 1,331,602.36 | |
| திரட்டிய – அநுராதபுரம் பரமரிப்பு | 292,797.80 | |
| திரட்டிய தொடர்பாடல் (பைபர் தொடர்பு) | 75,000.00 | |
| திரட்டிய அலுவலக உபரகணங்கள் திருத்தம் மற்றும் பராமரிப்பும் | 231,931.34 | |
| திரட்டிய – பணியாளர் குழாம் ஊக்குவிப்புக் கொடுப்பனவு | 50,000.00 | |
| திரட்டிய வலைத்தள மற்றும் ஏனையவற்றின் திருத்தங்களும் பராமரிப்பும் | 18,153.83 | |
| **மொத்தம்** | **33,301,998.46** | **15,384,976.95** |

***குறிப்பு 14***

**முகாமைத்துவ கூட்டுத்தாபன நிதியம்**

| | | |
|---|---|---|
| முகாமைத்துவ கூட்டுத்தாபன நிதியம | 14,514,000.00 | 14,514,000.00 |
| MC நிதியம் லுனாவை | 35,600,000.00 | 35,600,000.00 |

| விபரம் | 2024 (இல.ரூ) | 2023 (இல.ரூ) |
|---|---|---|
| MC நிதியம் சிங்கபுர | 2,671,854.45 | 2,671,854.45 |
| MC நிதியம் வதுளுவத்தை | 1,780,000.00 | 1,780,000.00 |
| **மொத்தம்** | **54,565,854.45** | **54,565,854.45** |

*குறிப்பு 15*

**பிடிபணம்**

| | | |
|---|---|---|
| பிடிபணம் - அங்குலானை பராமரிப்பு | 5,012.50 | 35,370.00 |
| பிடிபணம் - லுனாவை தீப்பாதுகாப்புக் கதவுகள் | 1,681,245.46 | 1,681,245.46 |
| பிடிபணம் மதுஷான் இரும்பு வேலைகள் | 16,882.50 | 16,882.50 |
| பிடிபணம் - பணியாளர் வீடமைப்புக் கடன் | 2,230,000.00 | - |
| பிடிபணம் - கட்டிடப் பராமரிப்பு | 26,260.25 | 26,260.25 |
| பிடிபணம் - வளநிலையம் | 0.44 | 16,220.50 |
| பிடிபணம் - தலவாக்கலை | 0.05 | 19,783.55 |
| **மொத்தம்** | **3,959,401.20** | **1,810,762.26** |

*குறிப்பு 16*

**செலுத்த வேண்டியவை**

| | | |
|---|---|---|
| அநுராதபுரம் உறுதிக்ட கட்டண் | 11,275.00 | 11,275.00 |
| இடர்கடன் முற்கொடுப்பனவு | 29,581.46 | - |
| நன்கொடைகள் SM வேலைத்திட்டம் | 2,985.00 | 26,940.00 |
| முற்கொடுப்பனவு – லுனாவை வீடமைப்புக் கருத்திட்டம் | 41,709.99 | - |
| முற்கொடுப்பனவு – பணியாளர் வாடகைக் கடன் | 7,501.33 | - |
| மீளச் செலுத்தும் வைப்புகள் - SW | 14,000.00 | 4,000.00 |
| பெறுனர்கள் - மீளச் செலுத்தும் தொகை | 10,000.00 | 10,000.00 |
| லுனாவை உறுதிக் கடன்கள் | 2,130,750.00 | |
| **மொத்தம்** | **2,247,802.78** | **52,215.00** |

| விபரம் | 2024 (இல.ரூ) | 2023 (இல.ரூ) |
|---|---|---|
| *குறிப்பு 17* **ஆரம்பக் கொடுப்பனவு** | | |
| ஆரம்பக் கொடுப்பனவு – தலவாக்கலை | 5,000.00 | 5,000.00 |
| ஆரம்பக் கொடுப்பனவு –அங்குலானை | 100,000.00 | 100,000.00 |
| ஆரம்பக் கொடுப்பனவு – துருஇத்துரகம | 2,360,000.00 | - |
| மொத்தம் | **2,465,000.00** | **105,000.00** |
| *குறிப்பு 18* **ஒதுக்கம்** | | |
| பணியாளர் குழாம் பணிக்கொடை | 37,928,137.50 | 29,637,547.00 |
| *குறிப்பு 19* **திறைசேரி நன்கொடைகள்** | | |
| லுனாவை வீடமைப்புக் கடன் | 1,167,316,673.63 | 1,167,316,673.63 |
| மொத்தம் | **1,167,316,673.63** | **1,167,316,673.63** |
| *குறிப்பு 20* **நிலையான சொத்துக்களின் அடிப்படையில் மூலதன அன்பளிபபக்கள்** | | |
| நிலையான சொத்துக்களின் மூலதன அன்பளிப்புகள் | - | - |
| *குறிப்பு 21* **அரச மானியங்கள்** | | |
| சஹஸ்புர(விற்ற விடுகள்) | 16,421,345.26 | 16,421,345.26 |
| சிங்ஹபுர (விற்ற விடுகள) | 3,734,709.68 | 3,734,709.68 |
| வதுவத்தை(விற்ற விடுகள) | 29,701,963.36 | 29,701,963.36 |
| ஸ்ரீ ஜயவர்தணபுர | 287,500,000.00 | 287,500,000.00 |
| வெலிசரை காணி | 320,000,000.00 | 320,000,000.00 |
| சஹஸ்புர வணிக அலகு | 44,777,000.00 | 44,777,000.00 |
| மொத்தம் | **702,135,018.30** | **702,135,018.30** |

| விபரம் | 2024 (இல.ரூ) | 2023 (இல.ரூ) |
|---|---|---|
| *குறிப்பு 22* | | |
| **ஒதுக்கம்** | | |
| இடர் கடனுக்கான ஒதுக்கம் | 15,000,000.00 | 15,000,000.00 |
| வருமான ஒதுக்கம் | 36,625,000.00 | 36,625,000.00 |
| மொத்தம் | **51,625,000.00** | **51,625,000.00** |

**நகர குடியிறுப்பு அபிவிருத்தி அதிகார சபை**

**2024 டிசெம்பர் 31 ம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிச் செயற்திறன் கூற்றின் குறிப்புகள்**

*குறிப்பு 23*

**வட்டி வருமானம்**

| விபரம் | 2024 (இல.ரு) | 2023 (இல.ரு) |
|---|---|---|
| வட்டி வருமான சேமிப்பு (IPG) | 391.86 | 575.18 |
| வட்டிக் கணக்கு – அங்குலானை | 1,009,996.46 | 212,798.89 |
| வட்டிக் கணக்கு – இடர் கடன் | 648,396.00 | 627,026.05 |
| வட்டிக் கணக்கு – ரஜ்கம | 1,468,502.77 | 1,687,175.26 |
| சகஸ்புர வட்டிக் கணக்கு - Sold | 387,169.30 | 551,428.48 |
| Interest Account- Scattered loan | 44,421.67 | 344,701.06 |
| வட்டிக் கணக்கு – Sold சிங்கபுர | | 15,804.00 |
| வட்டிக் கணக்கு – சுவசக்தி | 21,699.74 | 31,662.88 |
| வட்டிக் கணக்கு – துருஇத்துருகம | 1,943,403.16 | 1,816,002.46 |
| வட்டிக் கணக்கு – ந.கு.அ.அ.சபை – பணியாளர் குழாம் கடன் | | 9,599.81 |
| வட்டிக் கணக்கு – வதுல்லவத்தை | | 191,407.97 |
| வட்டிக் கணக்கு – நிலையான வைப்பு | 136,773,791.73 | 223,313,217.37 |
| வட்டிக் கணக்கு – சேமிப்புக் கணக்கு | 154,191.65 | 589,450.03 |
| வட்டிக் கணக்கு – மோட்டார் சைக்கிள் கடன் | 13,935.54 | |
| வட்டிக் கணக்கு – லுனாவை பணியாளர் குழாம் H/u | 1,877,153.17 | |
| வட்டிக் கணக்கு – லுனாவை வீடமைப்புக கருத்திட்டம் | 16,649,542.09 | 10,621,912.29 |
| வட்டிக் கணக்கு – பணியாளர் குழாம் வீடமைப்புக் கடன் | 397,691.56 | |
| வட்டி வருமானம் - சிங்ஹபுர மீள் குடியேற்றம் | | 90,966.76 |
| தலவாக்கலை விற்ற வீடுகள் - வட்டி | 563,677.92 | 257,995.14 |
| **மொத்தம்** | **161,953,964.62** | **240,361,723.63** |

| விபரம் | 2024 (இல.ரூ) | 2023 (இல.ரூ) |
|---|---|---|

*குறிப்பு 24*

**பிற வருமானங்கள்**

| | | |
|---|---|---|
| நிர்வாகம் மற்றும் பிற கட்டணங்கள் - அநுராதபுரம் | 60,280.00 | |
| வணிக அலகு – ஒப்பந்தக் கட்டணம் | | 1,200.66 |
| லுனாவை வீடமைப்புக் கருத்திட்டம் | | 6,000.00 |
| லுனாவை பிற வருமானங்கள் | | 15,607.30 |
| பிற வருமானங்கள் இனங்காணப்படாத நேரடி வைப்புக்கள் | | 124,770.00 |
| பிற வருமானங்கள் - ஓச்சர்ட்வத்தை | 108,958.00 | 125,240.00 |
| சஹய உறுதிக் கட்டணம் | 11,300.00 | 23,000.00 |
| சிங்கபுற வாடகை வருமானம் | | 120,000.00 |
| ஸ்ரீ விக்ரமபுர – சனசமூக நிலைய வருமானம் | 141,250.00 | 91,800.00 |
| நானாவித வருமானங்கள் | 19.30 | 33,139.65 |
| விநியோகப் பதிவுக்கட்டணம் | 343,000.00 | 189,000.00 |
| மேலதிக கட்டணக் கணக்கு | | 674,346.67 |
| மீளச் செலுத்தப்படாத டென்டர் வைப்புக்கள் | 326,000.00 | 34,500.00 |
| **மொத்தம்** | **990,807.30** | **1,438,604.28** |

*குறிப்பு 25*

**வீடமைப்பு கருத்திட்டங்களிலிருந்து டென்டர் வைப்புக்கள்**

| | | |
|---|---|---|
| துருஇத்துருகம வீடமைப்புக் கருத்திட்டம் விற்பனை | | 3,472,852.10 |
| லுனாவை வீடமைப்புக் கருத்திட்டத்தின் விற்பனை | | 21,068,641.19 |
| | | **24,541,493.29** |

*குறிப்பு 26*

**அகற்றல்களிலிருந்து கிடைக்கப்பெறும் இலாபம்**

| | | |
|---|---|---|
| அகற்றிய பொருட்களின் விற்பனை | | **27,518.78** |

| விபரம் | 2024 (இல.ரூ) | 2023 (இல.ரூ) |
|---|---|---|
| ***குறிப்பு 27*** | | |
| **சம்பளங்கள்** | | |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கொடுப்பனவு | 133,186.20 | 240,000.00 |
| பணிப்பாளர் சபைக் கொடுப்பனவும் பிற செலவுகளும் | 1,398,888.75 | 1,030,000.00 |
| வரவு செலவுக் கொடுப்பனவு | 6,600,546.61 | 7,276,908.67 |
| ஆலோசனைக் குழுக் கொடுப்பனவு | 74,200.00 | 342,000.00 |
| வாழ்க்கைச் செலவு | 21,553,930.70 | 11,185,317.42 |
| ஊ.சே.நிதியம் | 9,480,136.13 | 8,840,960.71 |
| ஊ.ந.நிதியம் | 2,370,033.79 | 2,210,240.05 |
| எரிபொருள் கொடுப்பனவு | 2,665,816.24 | 3,676,053.34 |
| விடுமுறைக்கான கொடுப்பனவு | 1,302,968.40 | 1,460,866.29 |
| நேர்முகப் பரீட்சை மற்றும் பிற சபைகளின் கொடுப்பனவு | 94,000.00 | 468,000.00 |
| மேலதிக மற்றும் விடுமுறை தின கொடுப்பனவுகள் | 4,736,205.21 | 5,186,639.80 |
| சம்பளமும் படியும் | 57,420,011.61 | 61,875,946.66 |
| பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் பணியாளர் குழாம் கொடுப்பனவு | 88,000.00 | 46,000.00 |
| பணியாளர் குழாமின் நட்ட ஈட்டுக் கட்டணம் | | 192,500.00 |
| பணியாளர் குழாம் ஊக்கக் கொடுப்பனவு | 2,400,000.00 | 2,900,000.00 |
| தொலைபேசி கொடுப்பனவு – உத்தியோகத்தர் | 611,831.45 | 686,575.00 |
| தொலைபேசிக் கொடுப்பனவு – பிற பணியாளர்கள் | 829,000.00 | 791,000.00 |
| பயிலுனர் கொடுப்பனவு | 1,189,500.00 | 1,326,500.00 |
| போக்குவரத்து கொடுப்பனவு | 5,129,420.83 | 6,840,000.00 |
| சீருடைக் கட்டணம் | 277,950.00 | 241,800.00 |
| வாகனக் கொடுப்பனவு | 1,296,666.67 | 651,666.66 |
| நலன்புரி | 1,778,754.00 | 2,271,200.00 |
| | **121,431,046.59** | **119,740,174.60** |

| விபரம் | 2024 (இல.ரூ) | 2023 (இல.ரூ) |
|---|---|---|
| ***குறிப்பு 28*** | | |
| **பிரயாணப் படிகள்** | | |
| பிரயாண மற்றும் வாழ்வாதார கொடுப்பனவு (உத்தியோகத்தர்) | 28,840.00 | 508,153.50 |
| பிரயாண மற்றும் வாழ்வாதார கொடப்பனவு (பணியாளர் குழாம்) | 912,857.00 | 690,575.00 |
| உள்ளூர் பிரயாணம் | 340,972.38 | 379,897.00 |
| | 1,282,669.38 | 1,578,625.50 |
| ***குறிப்பு 29*** | | |
| **விநியோகச் செலவு** | | |
| எரிபொருளும் உராய்வு நீக்கியும் | 8,904,389.31 | 6,848,661.32 |
| பிற விநியோகச் செலவுகள் (நுகர்வுப் பண்டங்கள்) | 190,237.87 | 202,314.78 |
| முத்திரை / தபால் கட்டணம் | 159,370.00 | 1,135,335.00 |
| எழுதுகருவி மற்றும் அலுவலகத் தேவைகள் | 6,598,480.70 | 6,324,474.65 |
| **மொத்தம்** | **15,852,477.88** | **14,510,785.75** |
| ***குறிப்பு 30*** | | |
| **ஒப்பந்தச் சேவைகள்** | | |
| தங்குமிட செலவுகள் | 129,423.00 | |
| விளம்பரம் / காட்சிப்படுத்தல்கள் | 506,515.00 | 1,362,843.25 |
| கணக்காய்வுக் கட்டணம் | 800,000.00 | 800,000.00 |
| வங்கிக் கட்டணம் | 6,340.00 | 6,860.00 |
| வங்கிக் கட்டணம் (IPG) | 54,243.75 | 57,286.25 |
| தூய்மைக் கட்டணம் | 2,792,896.60 | 1,188,923.16 |
| நிகழ்ச்சி/வைப செலவுகள் | 31,749.38 | |
| Lease rental operational vehicle | 7,298,350.44 | 6,954,256.59 |
| சட்டச் செலவுகள் | 906,464.00 | 338,676.38 |
| கூடடச் செலவுகள் | 204,267.21 | 449,058.00 |
| அலுவலக வாடகை | 29,961,163.08 | 26,766,152.16 |
| பிற வேலைச் செலவுகள் | 125,021.44 | 86,763.00 |
| அச்சுக் கட்டணம் | 613,489.50 | 585,308.33 |

| விபரம் | 2024 (இல.ரூ) | 2023 (இல.ரூ) |
|---|---|---|
| அறவிடல் செலவுகள் | 233,563.64 | 310,972.42 |
| பாதுகாப்புக் கட்டணம் | | 33,500.00 |
| பணியிடப் பயன்பாடு, பட்டியல் செலவுகள் (நிர்/மின்சாரம் போன்றவை) | 8,696.89 | 10,780.15 |
| SM / பிற பணியாளர் குழாம் செலவுகள் | 211,381.88 | 326,750.00 |
| ஸ்ரீ விக்ரமபுர செலவுகள் | 263,109.42 | 570,195.94 |
| தொலைபேசகி கட்டணம் (தொடர்பாடல்) | 1,371,768.00 | 1,292,917.49 |
| பயிற்சிச் செலவு (பணியாளர் குழாம்) | 428,333.00 | 932,050.00 |
| போக்குவரத்து | 181,348.36 | 348,637.94 |
| **மொத்தம்** | **46,128,124.59** | **42,421,931.06** |

*குறிப்பு 31*
**பராமரிப்புச் செலவுகள்**

| | | |
|---|---|---|
| காப்பறுதிச் செலவுகள் | 517,398.95 | 871,933.26 |
| கணக்கீட்டுப் பொதி பராமரிப்பு | 72,000.00 | 72,000.00 |
| வீட்டுத் தளபாடங்கள் மற்றும் பொறுத்துதல்கள் திருத்தம் மற்றும் பராமரிப்பு | 16,975.00 | |
| கணினி திருத்தலும் பராமரிப்பும் | 718,379.02 | 567,123.28 |
| உபகரண திருத்தலும் பராமரிப்பும் | 2,152,996.32 | 2,382,403.88 |
| வாகன திருத்தம் மற்றும் பராமரிப்பு | 9,155,811.58 | 8,259,807.23 |
| மனைத் தளபாடங்கள் பொருத்திகள் / திருத்தம் பராமரிப்பு அலுவலக கட்டிட திருத்தம், பராமரிப்பு | 22,400.00 | 69,700.00 |
| | | 130,910.00 |
| வெப் மற்றும் பிற ஊடக வசதிகள் | 199,690.47 | |
| **மொத்தம்** | **12,855,651.34** | **12,353,877.65** |

*குறிப்பு 32*
**பிற மீண்டெழும் காலவதியாகும் / ஒதுக்கீடுகள்**

| | | |
|---|---|---|
| பண்டங்களை அகற்றும் கணக்கு | | (91,116.20) |
| அறவிட முடியாக் கடன்பட்டோர் | 943,485.47 | 13,066,468.63 |
| பணிக்கொடை | 9,989,425.50 | 2,931,497.00 |

| விபரம் | 2024 (இல.ரூ) | 2023 (இல.ரூ) |
|---|---|---|
| பிடிபண வாடகை கணக்கு | 6,854,043.04 | 9,276,675.66 |
| **மொத்தம்** | **17,786,954.01** | **25,183,525.09** |

*குறிப்பு 33*

**நாணயமாற்றலல்லாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்து கிடைக்கும் வருமானம்**

| | | |
|---|---|---|
| நாணய மாற்றமல்லாத மூலதன | 3,063,911.54 | 29,769,347.71 |
| காணி விடுவித்தல் - அநுராதபுரம் | (230,000.00) | |
| மறுமதிப்பீடு – ஒச்சர்ட்வத்தை | 86,000,000.00 | |
| **மொத்தம்** | **88,833,911.54** | **29,769,347.71** |

*குறிப்பு 34*

**நாணயமாற்று கொடுக்கல் வாங்கல்களிலிருந்து கிடைக்கின்ற வருமானம்**

| | | |
|---|---|---|
| மூலதன நன்கொடைகள் நாணயமாற்று | | 3,000,000.00 |
| **மொத்தம்** | | **3,000,000.00** |

*குறிப்பு 35*

**மூலதனச் செலவு**

**நிலையான சொத்துக்களின் தேய்மானம்**

| | | |
|---|---|---|
| தளபாடம் பொருத்திகளின் தேய்மானம் | 2,090,487.71 | 884,214.78 |
| கணினி தேய்மானம் | 1,006,732.59 | 1,761,745.33 |
| சாரதிகள் ஓய்வறை தேய்மானம் | 35,640.00 | 35,640.00 |
| புலப்படாத சொத்துகளின் தேய்மானம் | 125,000.00 | 125,000.00 |
| அலுவலக உபகரணம் தேய்மானம் | 1,978,062.20 | 1,592,197.14 |
| களஞ்சிய அறை தேய்மானம் | 68,850.00 | 68,850.00 |
| வாகனம் தேய்மானம் | 9,940,000.00 | 9,940,000.00 |
| அநுராதபுரம் கட்டிட தேய்மானம் | 245,160.13 | 245,160.13 |
| **மொத்தம்** | **15,489,932.63** | **14,652,807.38** |

| விபரம் | 2024 (இல.ரூ) | 2023 (இல.ரூ) |
|---|---|---|
| ***குறிப்பு 36*** | | |
| **அபிவிருத்தி செலவுகள்** | | |
| பராமரிப்பு - அங்குலானை | 3,590,733.32 | 1,005,535.57 |
| பராமரிப்பு – அநுராதபுரம் | 292,797.80 | |
| Concept Socialization of the Proj. Con. | 229,400.00 | 769,388.51 |
| குடியிறுப்பு தினம் | 4,272,380.06 | 1,954,611.50 |
| பராமரிப்பு - லுனாவை | 2,661,290.00 | 16,000.00 |
| லுனாவை பராமரிப்பு - நிர்க்கசிவு | 16,595,520.00 | |
| சஹஸ்புர - பராமரிப்பு | 139,970.00 | |
| பராமரிப்பு – தையல் இயந்திர பராமரிப்பு | | 6,000.00 |
| சிங்கபுர பராமரிப்புச் செலவு | 162,805.00 | 118,600.00 |
| சமூக அபிவிருத்தி வேலைத்திட்டம் | 6,194,601.70 | 4,362,746.50 |
| பராமரிப்பு – தலவாக்கலை வீடமைப்புக் கருத்திட்டம் | | 1,374,676.00 |
| **மொத்தம்** | **34,139,497.88** | **9,607,558.08** |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை அறிக்கை

HUD/E/USDA/FA/24/01
2025. ஜுன்.24 ம் திகதி

தலைவர்
நகர குடியிறுப்பு அபிவிருத்தி அதிகார சபை

**நகர குடியிறுப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 2024-டிசெம்பர் 31ம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக்கூற்று மற்றும் பிற சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான 2018ம் ஆண்டின் 19ம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 வது பிரிவிற்கமைய கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழிவுள்ள அபிப்பிராயம்

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 2024 .டிசெம்பர் 31ம் திகதியில் நிதி நிலைக்கூற்று மற்றும் அன்றைய தினத்தில் முடிவடையும் ஆண்டிற்கான நிதிச் செயற்றிறன் கூற்று, உரிமைகள் மாற்றமடையும் கூற்று மற்றும் ஏற்புடைய கணக்கீட்டு நிலைமைக்குறிய தகவல்களும் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களுக்குறிய பதிவுகளைக் கொண்ட 2024ம் ஆண்டின் டிசெம்பர் 31ம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக்கூற்று இலங்கை ஜனநாயகச சோசலிச குடியிரசின் அரசியல் அமைப்பு விதியன் 154(1) அமைப்பு விதியில் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018ம் ஆண்டின் 19ம் இல்க்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 1971ம் ஆண்டின் 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் ஒழுங்குகளின் பிரகாரம் எனது கட்டளைகளின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பு விதியின் 154அ (6) அமைப்பு விதியின் பிரகாரம் எனது கட்டளைகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. விதியின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்தல் சமர்ப்பிக்கப்படுகின்றது.

எனது அறிக்கையில் முனைப்பழிக்கப்பட்ட அபிப்பிராயத்தின் பொருட்டான அடிப்படையில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிருந்து வற்புறுத்தல்கள் தவிர்ந்த அதிகாரசபைகளின் நிதிக் கூற்றின் ஊடாக 2024ம் ஆண்டில் டிசெம்பர் 31ம் திகதியில் நிதி நிலை மற்றும் அன்றைய தினத்தில் முடிவடையும் ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடுகள், மற்றும் நிதிப்பாய்ச்சல்கள் இலங்கை அரசபிரிவின் கணக்கீடு நியமங்களுக்கு ஏற்றாற்போல் உண்மையான மற்றும் நியாயமான கணக்கீட்டு நிலையங்களுக்கு உண்மையான மற்றும் நியாயாமான நிலையொன்றினை காட்டுவது என்பதே எனது கருத்தாகும்.

### 1.2 முனைப்பழிக்கப்பட்டள்ள அபிப்பிராயத்தின் அடிப்படை

(அ) இலங்கையின் அரச பிரிவின் கணக்கிட்டு நியம இலக்கம் 10 இன் 28 ஆவது பந்தியின் பிரகாரம் பொருட்களை விற்பனை செய்வதனால் அறவீட்டு மிகைத்தொகையினை இனங்காணும் பொருட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஐந்து நிபந்தனைகள் பூர்த்தியானதன் பின்னர் மிகைக் கட்டணங்கள் இனங்காணப்பட வேண்டியதாக இருந்தாலும் லூனாவை வீடமைப்புக் கருத்திட்டத்தில் வீடுகள் பல்வேறு முறைகளின் கீழ் விடுவிக்கப்பட்டு இருந்ததுடன் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மிகைக் கட்டணம் அடையாளம் காணப்பட்டு இருந்ததனால் அதிகார சபையால் இந்த வீடுகளை விற்பனை செய்யும் சந்தர்ப்பத்தினை காண்பதற்கு குறிப்பிட்ட கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கையின் அரசாங்க பிரிவு கணக்கீட்டு நியமம் 11 இற்கு ஏற்புடையதகாதவாறு, 2023 ஆம் ஆண்டில் ரூபா மில்லியன் 60 இற்கு கணக்குப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா மில்லியன் 120 இற்கு நியாயமான பெறுமதியோடு நிட்டம்புவை ஒச்சர்வத்தை,நடப்பாண்டில் ரூ.மில். 146 இற்கு மறு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் மறுமதிப்பீட்டு இலாபமானது ரூபா மில்லி 26 மறுமதிப்பீட்டு ஒதுக்கத்தில் வரவிடுவதற்கு நியமத்தின் 46 ஆவது பந்தியிற்கு ஏற்புடையதல்லாத பிரகாரம் மாற்றப்படாத கொடுக்கல் வாங்கல்களில் இருந்து கிடைத்த மிகைக் கட்டணமாக கணக்கு பதியப்பட்டிருந்ததுடன் நியமத்தின் 45 ஆவது பந்திக்கு ஏற்புடைய பிரகாரம் மாற்றப்படாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்து மிகைக் கட்டணம் இனங்கானப்படாது நடப்பாண்டின் இறுதிவரை அதிகார சபைக்கு கிடைத்திருந்த ரூபா மில்லியன் 652.3 பெறுமதியான காணி அரசாங்கத்தின் அன்பளிப்பின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தமை காரணமாக அரசாங்க நன்கொடையாக அந்த அளவில் அதிகமாக கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) 2022 டிசம்பர் 14 ஆம் திகதி இலவச கொடுப்பனவு ஒன்றாக அதிகார சபைக்கு கிடைக்கப்பெற்றருந்த 2012 டிசம்பர் 26ம் திகதியில் அரசாங்கத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா மில்லியன் 102 ஆன லூனாவைக் காணி இலங்கை அரசு பிரிவு கணக்கிட்டு நியமம் 11 இற்கு ஏற்புடைய பிரகாரம் மீளாய்வு ஆண்டின் இறுதியில் நிதி கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அதிகார சபைக்கு வணிக நோக்கத்திற்காக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா மில்லியன் 380 பெறுமதியான நிட்டம்புவை ஓச்சர்ட்வத்தை மற்றும் வெலிசரை மில்லகஹவத்த காணி இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நீயம இலக்கம் 13 இன் 07 ஆவது பந்திக்கு அமைய முதலிடப்பட்ட ஆதரவொன்றாக இனங்கானப்பட்டு கணக்கிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை காரணமாக மீளாய்வு ஆண்டில் முதலிடப்பட்ட ஆதனம் அந்த அளவில் இருந்து குறைத்து காட்டப்பட்டிருந்தது.

(உ) இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நியமம் 19 இற்கு ஏற்ற பிரகாரம் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படாது ரூபா மில்லியன் 9.99 இற்கான பணிக்கொடை செலவுகள் மீளாய்வு ஆண்டிற்குள் இனங்காணப்பட்டிருந்ததனால் இப்பெறுமதி தொடர்பில் மற்றும் அதற்குரியதாக இனங்காணப்பட்டிருந்த ரூபா மில்லியன் 37. 93 இற்கான நீண்ட காலப் பொறுப்புக்களின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமல் உள்ளது.

(ஊ) 2024 டிசம்பர் 31 ம் திகதியில் அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டிய 18 கணக்குகளின் மீதி மற்றும் கணக்காய்வின் பொருட்டு சமர்ப்பித்த உப அட்டவணையின் மீதிகளுக்கிடையே ரூபா மில்லியன் 15.46 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(எ) அனுராதபுரம் கட்டுக்கெலியாவ "துரு இத்துருகம" குடியிருப்பு கருத்திட்டத்திற்கு உரிய காணிப்பகுதி 06 இன் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா மில்லியன் 1.43 மீளாய்வு ஆண்டின் இறுதிவரை கணக்குப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் இக்கருத்திட்டத்தில் 02 வீடுகள் 2024 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டிருந்தும் அதன் பெறுமதியான ரூபா மில்லியன் 2. 36 இற்குரிய சொத்துக்கள் கணக்கிலிருந்து அகற்றுவதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்பாக கணக்குப்பதிவுகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஏ) லூனாவை வீடமைப்பு கருத்திட்டத்தில் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்குரிய கருத்திட்ட முகாமையாளரால் 2024 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டியதாக உறுதிப்படுத்தப்பட்டு இருந்த ரூபா மில்லியன் 14.03 இற்கான பற்றுச்சீட்டொன்று மீளாய்வு ஆண்டின் இறுதியில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் கணக்கு வைப்பதற்கு அல்லது வெளிக்காட்டுவதற்கு அதிகார சபையால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) லூனாவை வீடமைப்பு கருத்திட்டத்திற்குரிய வீடுகளை விற்பனை செய்வதனால் கிடைக்கின்ற இலாபத்தில் இருந்து கருத்திட்டத்தின் பொருட்டு பெற்றுக் கொண்ட நிதி ஒதுக்கீட்டினை திரும்ப திறைசேரிக்கு ஈடு செய்யப்பட வேண்டும் என 2020 டிசம்பர் 20ஆம் திகதி இடப்பட்ட அமை. பத்/20/1844/306/055 என்ற இலக்கத்தினையுடைய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அறிவிக்கப்பட்டு இருந்தும் திறைசேரியால் அக்கருத்திட்டத்திற்கு வழங்கிய ரூபா மில்லியன் 1,267 இல் இதுவரையில் செலுத்தாத உள்ள ரூபா மில்லியன் 1,167 ஐ செலுத்த வேண்டிய மீதி ஒன்றாக சுட்டிக்காட்டாது உரித்துக்கள் மற்றும் ஒதுக்கங்களின் கீழ் காட்டியமையினால் உரித்துக்கள் மற்றும் சொத்துக்கள் அந்த அளவில் இருந்து மிகையாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஒ) அதிகார சபையினால் அங்குலானை மாடி வீட்டுத் தொகுதியில் மேற்கொள்ளப்பட்ட மின்னுயர்த்தி திருத்தத்தின் பொருட்டு நிழல் முகாமைத்துவ கூட்டுத்தாபணத்திலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா மில்லியன் 1.61 மொத்தமான மாற்ற முடியாத பராமரிப்புச் செலவாக கணக்குப்பதிவுகள் மேற்கொண்டமையினால் நிறுவனத்தின் செலவுகள் அப்பெறுமதியில் அதிகமாகவும் கிடைக்க வேண்டிய மீதி அப்பெறுமதியில் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வு ஆண்டில் மரத்தளபாடங்களின் தேய்மானப் பெறுமதி ரூபாய் மில்லியன் 0.899ஆக இருந்தும் நிதிக் கூற்றில் அது ரூபா மில்லியன் 2.090 என குறிப்பிடப்பட்டிருந்ததனால் ஆண்டின் தேய்மான செலவு ரூபா மில்லியன் 1.191 ஆல் மிகையாக கணக்கிடப்பட்டு மிகைத்தொகை அந்த அளவிலிருந்து மதிப்பிழந்து இருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.ஆ.நி) ஏற்றதாக என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமத்தின் கீழ் எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழிக்கப்பட்ட கருத்தின் பொருட்டு அடிப்படை ஒன்றினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் உள்ளது என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 அதிகார சபையின் 2024ம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள ஏனைய தகவல்கள்.

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கின்ற அதிகார சபையின் 2024 ஆம் ஆண்டின் அறிக்கையில் உட்படுத்தக்கூடிய இருப்பினும் நிதி கூற்றுகள் மற்றும் அவை தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதன் மூலம் கருதப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்களின் பொருட்டு முகாமைத்துவம் பொறுப்பளித்தல் வேண்டும்.

நிதி கூற்று தொடர்பில் எனது கருத்துக்கள் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாததுடன் நான் அது தொடர்பில் எவ்விதத்திலும் சிபாரிசு செய்வதோ அல்லது கருத்தினை வெளியிடுவதோ மேற்கொள்வதில்லை.

நிதிக் கூற்று தொடர்பான எனது கணக்காய்வுக்குரியதாக எனது பொறுப்பானது ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தில் வாசிப்பது மற்றும் அவ்வாறு மேற்கொள்ளும் போது பிற தகவல்கள் நிதி கூற்றோடு அல்லது கணக்காய்வின் போது அல்லது பிற ஏதேனும் ஒரு விதத்தில் பெற்றுக் கொண்ட எனது அறிவுக்கு அமைய எண்ணிக்கை சார்ந்ததாக பொருத்தமாகின்றதா என்று கவனத்தில் கொள்வதாகும்.

அதிகார சபையின் 2024 ஆம் ஆண்டு அறிக்கையை வாசிக்கும் போது அதன் எண்ணிக்கை சார்ந்த வழிகள் பிழையாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பதனை நான் குறிப்பிட்டிருந்தால் அதனை சீர் செய்யும் பொருட்டு கட்டுப்படுத்துகின்ற பிரிவினருக்கு அந்த விடயங்களை அறிவித்தல் வேண்டும். மேலும் சீர் செய்யாத பிழைகள் குறிப்பிடப்பட்டு இருப்பின் அவை அரசியலமைப்பு விதியின் 154 (6) யாப்பின் பிரகாரம் என்னால் உரிய காலத்திற்குள் பாராளுமன்றத்தில் சபை முன் வைக்கப்படுகின்ற அறிக்கையில் உட்படுத்தப்படும்.

## 1.4 நிதிக் கூற்று தொடர்பில் முகாமைத்துவத்தினதும் நிர்வகிக்கின்ற பிரிவினரினதும் பொறுப்புக்கள்.

இந்த நிதி கூற்று இலங்கை அரசாங்கப் பிரிவின் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்றதாக தயாரிப்பதும் நியாயமான விதத்தில் சமர்ப்பிப்பதும் மோசடிகள் அல்லது பிழைகள் காரணமாக ஏற்படக்கூடிய எண்ணிக்கை சார்ந்த போலியான கூற்றுக்களின்றி நிதிக் கூற்றினை தயாரிப்பதற்கு ஏற்றாற் போல் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றினை தயாரிக்கும் போது, அதிகார சபையினை தொடர்ச்சியாக நடாத்திச் செல்லக்கூடிய ஆற்றல்களை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என்பதுடன், முகாமைத்துவம் அதிகார சபையை முடிவுறுத்துவதற்கு எண்ணுவதாயின் அல்லது பிரிதேனும்ம் மாற்றுத்திட்டங்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் செயற்பாடுகளை இடை நிறுத்துவதற்கு என்னுவதாயின் போன்றவைகள் தவிர்ந்த தொடர்ச்சியாக செயல்படுதல் என்பதன் அடிப்படையில் கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளல் மற்றும் அதிகார சபையின் தொடர்ச்சியான செயற்பாட்டிற்குரிய விடயங்களை வெளிக்கொண்டு வருவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகார சபையின் நிதி அறிக்கையிடல் செயல்பாடு தொடர்பில் விசாரணை செய்யும் பொறுப்பு, நிர்வகிக்கப்படுகின்ற பிரிவினரால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 16 (1) உப பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய பிரகாரம் சுய வருமானங்கள் செலவுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உரிய பிரகாரம் புத்தகங்களையும் அறிக்கைகளையும் பராமரித்துச் செல்லல் வேண்டும்.

## 1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்று, மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படுகின்ற எண்ணிக்கை சார்ந்த போலிக் கூற்றுகளற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாடு ஒன்றினை வழங்குவதும் எனது கருத்தில் உள்ளடங்கியுள்ள கணக்காய்வு அறிக்கையினை வெளியிடுவதே எனது குறிக்கோள் ஆகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர்ந்த மட்டத்திலான உறுதிப்படுத்தலாகும், இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது சகல சந்தர்ப்பங்களிலும் எண்ணிக்கை சார்ந்த போலியான கூற்றுக்கள் வெளிக்காட்டிக் கொள்ளப்படுவது உறுதிப்படுத்திக் கொள்ளப்பட மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ ஏற்படுவதன் தாக்கங்கள் காரணமாக எண்ணிக்கை சார்ந்த போலியான கூற்றுக்கள் ஏற்படலாம் என்பதுடன் அங்கு எண்ணிக்கை சார்ந்த நிலை இந்த நிதிக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு பயனர்களால் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார ரீதியான தீர்மானங்கள் தொடர்பில் ஏற்படுகின்ற தாக்கங்களின் அடிப்படையில் தங்கி நிற்கின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய கணக்காய்வின் பிரிவொன்றாக எனது கணக்காய்வின் போது தொழிற்சார் மத்தியஸ்த நிலை மற்றும் தொழிற்சார் சந்தேகத்திற்குரியதாகவும் செயற்பட்டது தொடர்ந்தும் என்னால்.

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் போது மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதி கூற்றுகளில் ஏற்படக்கூடிய எண்ணிக்கை சார்ந்த போலிக் கூற்றுகள் ஏற்படுகின்ற பாதிப்புகளை இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்யும் பொருட்டு சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பொருத்தமான கணக்காய்வு முறைகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தியது. தவறுதலாக குறிப்பிட்டதன் காரணமாக ஏற்பபடுகின்ற எண்ணிக்கை சார்ந்த போலிக் கூற்றுக்களினால் ஏற்படுகின்ற தாக்கங்களை விட மோசடிகளினால் ஏற்படுகின்ற தாக்கங்கள் முக்கியமானதாக குறிப்பிடப்படுவது அவை கூட்டுச் சதிகள் மூலம், போலி ஆவணங்களை தயாரிப்பதன் மூலம், வேண்டுமென்றே தட்டிக் கழித்தல் பிழையான விதத்தில் பதிதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளிலிருந்து விலகுதல் போன்ற காரணங்களினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித் தன்மை தொடர்பில் அபிப்பிராயம் ஒன்றை வெளியிடும் நோக்கமற்றதாக இருந்தாலும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பொருத்தமான கணக்காய்வு முறையினை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பில் தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- உபயோகப்படுத்திய கணக்கீட்டு நியமங்களின் பொருத்தப்பாடு கணக்கீட்டு மதிப்பீடுகளில் நியாயமான நிலை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட தொடர்புடைய வெளிக்கொணரல்கள் போற்றப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகார சபையின் தொடர்ச்சியான நிலைப்பாடு தொடர்பில் எண்ணிக்கை சார்ந்த சந்தேக நிலைப்பாடு உள்ளதா என்பது தொடர்பில் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சாட்சிகளின் அடிப்படையில் கணக்கீட்டின் பொருட்டு அதிகார சபையின் தொடர்ச்சியான செயற்பாடு தொடர்பில் தளமொன்றினை பயன்படுத்திக் கொள்வதற்குரியதாக தீர்மானிக்கப்பட்டது. போதுமான அளவு தொடரற்ற நிலை ஒன்று உள்ளதனை நான் தீர்மானிப்பதாயின் நிதிக் கூற்றுகளில் அது தொடர்பிலான வெளிக் கொணர்வுகளுக்கு போதுமாகாத விடத்து எனது அபிப்பிராயத்தினை மாற்றி அமைத்தல் வேண்டும். எவ்வாறு இருந்தும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான செயற்பாடு முடிவடையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தின் பொருட்டு அடிப்படையாகக் கொண்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானது மற்றும் வெளிக்காட்டப்பட்டவைகள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுகளில் மொத்த சமர்ப்பிப்புகளும் போற்றப்பட்டது.

எனது கணக்காய்விற்குள் இனம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுகளை தேடிப் பார்த்தல், பிரதான உள்ளக கணக்காய்வின் குறைபாடுகள் மற்றும் பிற விடயங்கள் தொடர்பில் கட்டுப்படுத்துகின்ற பிரிவினர்களை விளக்கமளிக்கின்றேன்.

## 2. பிற சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல்களின் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கைகள்.

2.1 2018ம் ஆண்டின் 19 ம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பான விசேட எற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பழிக்கப்பட்ட அபிப்பிராயத்தின் பொருட்டு அடிப்படைான பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலுருந்தான வற்புறுத்தல்கள் தவிர்ந்த 2018ம் ஆண்டின் 19ம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய, கணக்காய்வின் பொருட்டு தேவையான சகல தகவல்கள் மற்றும் விளக்கமளிப்புக்கள் என்னால் விசாரனைகளிலிருந்து காணக்கூடிய விதமானது முறையான நிதியியல் அறிக்கை அதிகார சபையில் பராமரிக்கப்பட்டுள்ளது.

2.1.2 2018ம் ஆண்டின் 19 ம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (௭) (ஈ) (ஹை) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய அதிகார சபையின் நிதிக் கூற்று முன்னையவற்றுடன் நேர் ஒத்ததாக அமையும்.

2.1.3 2018ம் ஆண்டின் 19ம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i) (ஈ) (iV) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய எனது அறிக்கையின் அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பிரிவின் 1.2(இ)(I)(III) மற்றும் (எ) இல்குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர்ந்த முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளின் முன்வைக்கப்படட நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

2.2 பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் ஊடாக மற்றும் பெற்றுக் கொண்ட சாட்சிகளினப்படையில் போதமான விடயங்களுக்கு வரையறுப்பதன் ஊடாக கீழ் குறிப்பிடப்படும் கூற்றுக்களை முன்வைக்கக்கூடியதாக எனது எதுவும் கவனத்திற்கு உள்ளாகவில்லை.

2.2.1 2018ம் ஆண்டின் 19 ம் இலக்க தேசிய கணக்காாய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கமைய அதிகார சபையில் கட்டுப்பாட்டுச் சபையின் எவரேனும் அங்கத்தவர்கள் ஒருவருக்கு அதிகார சபை தொடர்புபட்டு ஏதேனும் ஒரு ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது பிறிதொரு விதத்தில் பொதுவான வணிக நிலையிலிருந்து விலகி தொடர்பு உள்ளது எனவும்.

2.2.2 2018ம் ஆண்டின் 19ம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் தேவைப்பாட்டிற்கமைய குறிப்பிடப்படும் அவதானிப்புகள் தவிர்ந்த ஏதேனும் குறித்த எழுத்துமூல சட்டத்தில் அல்லது அதிகார சபையின் கட்டுப்பாட்டுச் சபையினால் வெளியிடப்பட்ட பிற பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு எற்புடையதற்ற விதத்தில் செயற்பட்டுள்ளதாகவும்

| | சட்ட திட்டங்கள் / கட்டளைகளின் தலைப்பு | ஏற்புடையாமை |
|---|---|---|
| (அ) | 2008 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டம் | நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குறிய தேசிய கொள்கை ஒன்றினை உருவாக்கும் பொருட்டு மற்றும் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கான உறுதிப்பாட்டின் பொருட்டு இந்த அதிகார சபை உருவாக்கப்பட்டு இருந்தாலும் ஆரம்பிக்கப்பட்டு 17 வருடங்கள் கடந்தும் தேசிய கொள்கை ஒன்றினை உருவாக்குவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் அதிகார சபைக்கு இயலாமல் போய் உள்ளது. |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் II அத்தியாயத்தின் 13.1.2 மற்றும் 13.4 பந்தி | பதில் கடமையாற்றும் பொருட்டு சிபாரிசு செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தருக்கு அங்கீகரித்த ஆட்சேர்ப்பு முறைக்கு ஏற்ப வெற்றிடமாகியுள்ள பதவியில் பதில் கடமையாற்றும் பொருட்டு தகுதிகள் இருக்க வேண்டியதாக இருந்தும் 2021 ஆம் ஆண்டில் பணிப்பாளர்(பொறியியல்) உதவிப் பணிப்பாளர்(காணி) மற்றும் உதவிப் பணிப்பாளர்(ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) ஆகிய பதவிகளின் பொருட்டு உரிய தகுதிகளைக் கொண்டிராத உத்தியோகத்தர்கள் பதில் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்டிருந்தனர். அதேபோன்று 2023 பெப்ரவரி 21 ஆம் திகதி 02/2023/12 என்ற இலக்கத்தினை உடைய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் பதவிகளின் பொருட்டு தேவையான அனுபவம் இல்லாத மேற்படி உத்தியோகத்தர்களை அப்பதவிகளில் நிரந்தரமாகப்பட்டிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டு தகுதிகளைக் கொண்டிராத உத்தியோகத்தர்கள் உரிய பதவிகளில் கடமைகளை நிறைவேற்றியிருந்தனர். |

2.2.3 2018ம் ஆண்டின் 19ம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஒ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் அதிகார சபையின் தத்துவங்கள் நோக்கங்கள் மற்றும் பணிகளுக்கு ஏற்ற விதத்தில் செயற்படாமை எனவும்,

2.2.4 2018/ம் ஆண்டின் 19ம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் அவதானிப்புக்கள்

தவிர்ந்த அதிகார சபையின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறன் மிக்கதாக மற்றும் பயனுறுதி வாய்ந்ததாக கால வரையறைக்குள் குறித்த சட்டதிட்டங்களுக்கு ஏற்றதாக பெறுகைகளை மேற்கொண்டு பயன்படுத்தப்படவில்லை எனவும்.

(அ) திட்டமிடல் மற்றும் கட்டுமானம் (னுநளபைெ யனெ டீரடைன) கருத்திட்டம் ஒன்றாக நமைுறைப்படுத்தப்பட்ட மொரட்டுவை லுனாவை வீடமைப்புக் கருத்திட்டம் மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கி 06 மாதங்கள் கடந்தவுடன் அந்த விடுகளின் சுவர்களிலிருந்து நீர்க்கசிவுகள் எற்படடதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற அடிப்படையில் அந்த நவினமயப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு பணிப்பாளர் சபை அங்கீகாரததின் பிரகாரம் அந்த வீடுகளை விற்பனைசெய்த தொகையிலிருந்து ரூபா மில்லியன் 41.38 ஐ பெற்றுக்கொள்வதற்கு அதிகார சபையால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறு இருந்தும் நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டிருக்கவல்லை. அதேபோன்று இந்த கருத்திட்டத்தின் ஒப்பந்தக் காரரான அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினதும் கருத்திட்ட முகாமையாளரான அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண சட்ட கூட்டுத்தாபனத்திலிருந்தும் இக்குறைபாடுகளின் பொருட்டு எவ்வித தொகையினையும் அறவிட்டுக் கொள்வதற்கு அதிகார சபையால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.கருத்திட்ட முகாமையாளரக்கு இக்கருத்திட்டத்தின் பொருட்டு ரூபா மில்லியன் 6.43 உம் அதிகாரசபையால் செலுத்தப்பட்டிருந்தது.

**2.3 பிற விடயங்கள்.**

(அ) காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் பூர்த்தி அடையாமை மற்றும் கூட்டாளுகை சான்றிதழை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டதன் அடிப்படையில் மீளாய்வு ஆண்டின் இறுதியில் அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த மறுசீரமைப்பு அடிப்படையில் மற்றும் விற்பனை அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட 1719 வீட்டு அலகுகளிலிருந்து 1115 வீட்டு அலகுகளின் பொருட்டு வீட்டு உரிமையாளர்களுக்கு உறுதிகள் வழங்கப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) 2020 டிசம்பர் 22 ஆம் திகதியின் அமை.பத்/20/1844/306/055 என்ற இலக்கத்தினை உடைய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அரசாங்க மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டுப் பெறுமதியில் நூற்றுக்கு 20 வீத பெறுமதி ஒன்றினைக் கூட்டி விற்பனை விலையினை தீர்மானித்து வீடுகளை வழங்க வேண்டியிருந்தும் அதற்கு மாற்றமாக பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்திற்கு அமைய வீடொன்றிற்கான விற்பனை விலையாக அரசாங்கத்தின் மதிப்பீட்டினை மாத்திரம் அறவிட்டு அதிகார சபையின் 24 உத்தியோகத்தர்களுக்கு வீடுகளை வழங்கியதன் காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா மில்லியன் 20.68 தொகை இழக்கப்பட்டு இருந்தது. மேலும் மீளாய்வு ஆண்டின் இறுதியில் அதிகார சபையின் பணியாளர் குழாமினருக்கு விற்பனை செய்த வீட்டு அலகுகளிலிருந்து ரூபா மில்லியன் 92. 09 அதிகார சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

(இ) மீனவ மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட அங்குலானை மாடி வீடமைப்பு திட்டத்திலிருந்து சினிமாக் கலைஞர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு நிதி அறவீடுகள் இன்றி இலவச கொடுப்பனவு பத்திரம் ஒன்றின் மூலம் ரூபா மில்லியன் 62.87 பெறுமதியான 53 வீட்டு அலகுகளை வசிப்பதற்கு வழங்கி இருந்ததும் 2019 அக்டோபர் 16ஆம் திகதியின் அமை.பத்/19/2761/122085 என்ற இலக்கத்தினையுடைய அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய நியாயமான தொகையின் அந்த பயனாளிகளிடமிருந்து அறவிட்டு கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறு இருந்தும் இந்த வீடமைப்பு அலகுகள் 38 இலிருந்து ரூபா மில்லியன் 2. 08 மீளாய்வு ஆண்டில் இறுதியில் கிடைக்க வேண்டியிருந்தது.2022 அக்டோபர் 4ஆம் திகதியின் USDA/LEG/LG/06/15-1 என்ற இலக்கத்தினையுடைய சட்டமா அதிபரின் கடித ஆலோசனைகளின் பிரகாரம் இலவச கொடுப்பனவினை செல்லுபடியற்றதாக ஆக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் மேலும் 12 வீடுகளுக்கு வழக்குத் தொடுப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

(ஈ) அதிகார சபைக்கு சொந்தமாக இருந்த தனியார் நிறுவனம் ஒன்றினால் நிர்மாணிக்கப்பட்டு இருந்த ரூபா மில்லியன் 44.78 பெறுமதி உடைய சகஸ்புற 67 வணிக அலகுகள் மற்றும் பெறுமதிகளை இனங்காண முடியாமல் இருந்த 57 சேவை அலகுகளை வாடகைக்கு விடுவதனால் அதிகார சபைக்கு வாடகை வருமானத்தினை ஏற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருந்தும் இலவச கொடுப்பனவு ஒன்று என்றதன் அடிப்படையில் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபையின் கீழ் உள்ள முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்கு பணிப்பாளர் சபையின் ஊடாக தீர்மானிக்கப்பட்டமை காரணமாக அந்த வாடகை வருமானமும் இந்த அதிகார சபைக்கு கிடைக்காமல் உள்ளது.

(உ) 2020 டிசம்பர் 22ஆம் திகதியின் அமை.பத்/20/1844/306/055 என்ற இலக்கத்தினையுடைய அமைச்சரவை தீர்மானத்திற்கு முரணாக ரூபா மில்லியன் 9.3 பெறுமதியினை உடைய லுனாவை வீடமைப்பு திட்டத்தில் மூன்று வீட்டு அலகுகளின் விற்பனை விலை ஒப்பந்தத்திற்கு அமைய அறவீடுகளை மேற்கொள்ளாது அந்த வீடுகளில் பாவனை கூட ஒப்படைக்கப்பட்டு இருந்தது.

(ஊ) தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தினால் (NERDC) அனுராதபுரம் பொலிவுறு தொழில்நுட்பத்தின் கீழ் ரூபா மில்லியன் 4.9 ஐ செலவு செய்து நிர்மாணித்த 06 வீடுகள் தொடர்பில் 2022 நவம்பர் 19ஆம் திகதி வழங்கிய அறிக்கைக்கமைய இந்த வீடுகள் மனிதன் வசிப்பதற்கு தகுதியற்ற வீடுகள் ஆகும் என குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அந்த விடயங்கள் அதிகார சபையில் பொறியியலாளர் ஒருவராலும் 2022 டிசம்பர் 20 ஆம் தேதி உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கின்ற சந்தர்ப்பத்தில் இதில் இரண்டு வீடுகள் தங்களது பாவனைக்கு ஏற்ற பிரகாரம் செய்து கொள்வதற்கான நிபந்தனைக்கு இசைய வெளிப்பிரிவினரிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் நிலுவையான நான்கு வீடுகளும் தொடர்ச்சியான 12 வருடங்கள் பூராக பயன்படுத்தாமல் இருந்தது.

(எ) 2024 டிசம்பர் 31ம் திகதியில் அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர மற்றும் ஒப்பந்த ரீதியான பணியாளர் குழாம் குளாம் முறையே 151 மற்றும் 29 என இருந்ததுடன் அன்றைய தினத்தில் நிலையான நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆன பணியாளர் குழாமினர் முறையே 101 மற்றும் 08 என்று இருந்தது. அதற்கமைய நிரந்தர பணியாளர் குழாமினரில் மற்றும் ஒப்பந்த ரீதியான பணியாளர் குழாமினரில் வெற்றிடமானது முறையே 50 மற்றும் 21ஆக இருந்தாலும் அதிகார சபையின் தற்போதைய பணிகளுக்குரியதாக அங்கீகரித்த பணியாளர் குழாமினரை திருத்தம் செய்து கொள்வதற்கோ அல்லது அத்தியாவசியமான பணியாளர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கோ அதிகார சபைக்கு முடியாமல் போனது.

(ஏ) 2024 செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் அரச தனியார் கூட்டு முயற்சியின் கீழ் செயல்படுகின்ற அதிகார சபைகளின் நடுத்தர வருமானம் பெறும் வீடமைப்பு கருத்திட்டத்தில் ஆரம்ப கட்ட வேலைகளின் கீழ் உள்ள கருத்தி திட்டங்கள் தொடர்பில் கீழுள்ள அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றது.

(i) அபிவிருத்திக் கருத்திட்டங்களின் பொருட்டு காணிகளை இனங்காண்பது 2024 டிசம்பர் ஆகும்போது நூற்றுக்கு நூறு வீதம் முன்னேற்றம் ஒன்றினை பெற்றுக்கொள்ள உத்தேசிக்கப்பட்டு இருந்தும் 2009 ஆம் ஆண்டின் இறுதியில் எவ்வித பௌதீக அல்லது நிதி முன்னேற்றம் ஒன்றினை பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

(ii) 2024 ஆம் ஆண்டின் செயற்பாட்டு திட்டமிடலுக்கு அமைய சிங்கபுர தளவத்துகொடை கடுவெலை மற்றும் அத்துருகிரிய ஆகிய வீடமைப்பு கருத்திட்டங்களில் இவ்வாண்டிற்குள் செயல்படுத்த எந்த பணியும் வருட இறுதி வரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) அனுராதபுரம் துருஇத்துருகம வீடமைப்பு கருத்திட்டத்தில் முடிவுறுத்துவதற்கு உத்தேசித்த ஐந்து பணிகள் 2024 ஆம் ஆண்டு வரை பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை.

(iv) உள்ளக ரீதியான உழைப்புக்களின் மூலம் ஒதுக்கப்பட்ட ரூபா மில்லியன் 1.10 பெறுமதியினை 2024 ஆம் ஆண்டில் முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட தலவாக்கலை வீடமைப்புக் கருத்திட்டத்தில் நீர் விநியோகத் தொகுதியை நிர்மாணிப்பதற்கும் வீடுகளை புதுப்பிப்பதற்கும் உரிய பணிகளில் எவ்வித பௌதீக முன்னேற்றத்தினையும் பெற்றிருக்கவில்லை.

(v) சிலாபம் வீடஅமைப்பு கருத்திட்டத்தின் முதலாவது கட்டத்தில் வீடுகளின் திருத்தம் மற்றும் உறுதிகளை வழங்கும் நடவடிக்கைகளுக்காக ரூபா மில்லியன் 4.27 ஒதுக்கப்பட்டு இருந்தும் அதன் பௌதீக முன்னேற்றம் நூற்றிற்கு 0.004 என்ற மிகக் குறைந்த மட்டத்தில் தான் இருந்ததுடன் எவ்வித நிதி முன்னேற்றமும் அவதானிக்கப்படவில்லை.

(ஐ) அதிகார சபையினால் புனரமைப்பு என்ற அடிப்படையில் (Re-location) மற்றும் விற்பனை அடிப்படையில் என்ற பிரகாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளில் இருந்தும் வழங்கியுள்ள பிற கடன்களில் இருந்தும் கடன் தவணை பணத்தினை அறவிட்டுக் கொள்வதன் முன்னேற்றமானது மிக மோசமான மட்டத்தில் உள்ளதாக கீழ் குறிப்பிடப்படும் விடயங்களுக்கு அமைய அவதானிக்கப்பட்டது.

(i) அதிகார சபையினால் புனரமைப்பு அடிப்படையில் வழங்கப்பட்ட 07 வீடமைப்பு கருத்திட்டங்களுக்குரிய 399 வீடுகளில் இருந்து மீளாய்வு ஆண்டின் இறுதியில் அறவிட வேண்டிய மொத்த கடன் தவணைப் பணத்தின் பெறுமதி ரூபா மில்லியன் 114.86 ஆகும் என்பதுடன் அதில் 3-5 வருட காலத்திற்குள் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதியானது ரூபா மில்லியன் 38.33 மற்றும் 05 வருடம் தாண்டியதன் பின்னர் அறவிட வேண்டிய மீதியானது ரூபா மில்லியன் 48.07ஆக இருந்தது. அந்த மொத்த மீதிகள் மொத்த கடன் தவணைப் பணத்திலிருந்து முறையே நூற்றுக்கு 33% மும் நூற்றுக்கு 42% முமாக உள்ளமை

(ii) அதிகார சபையினால் விற்பனை என்ற அடிப்படையில் வழங்கிய 09 வீடமைப்பு கருத்திட்டங்களுக்குரிய 277 வீடுகளிலிருந்து மீளாய்வு ஆண்டின் இறுதியில் அறவிட வேண்டிய மொத்த கடன் தவணை பணத்தின் பெறுமதியானது ரூபா மில்லியன் 72 ஆகும் என்பதுடன் 2-5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் இருந்து அறவிட வேண்டிய ரூபா மில்லியன் 22.42 உம் 05 வருடங்களை தாண்டியது ரூபா மில்லியன் 27.78 ஆக இருந்தது. அந்த மீதிகள் மொத்தக் கடன் தவணைப் பணத்திலிருந்து முறையே நூற்றிற்கு 31 மற்றும் நூற்றிற்கு 39 வீதங்களாகும்.

(iii) லூனாவை வீடமைப்பு அலகுகளை வழங்கும்போது கொடுப்பனவாக வீடொன்றின் மொத்த பெறுமதியிலிருந்து நூற்றுக்கு 25% த்தினை அதிகார சபைக்கு அறவிட்டுக் கொள்வதற்கும் எஞ்சிய 75% த்தின் பொருட்டு அரச வங்கி ஒன்றுடன் தொடர்பு கொண்டு 25 வருடங்களில் செலுத்தும் கடன் வசதிகளை பயனாளிகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதும் அந்த நூற்றுக்கு 25 வீதத்திற்கான தொகையினை மூன்று மாத காலத்திற்குள் அதிகார சபைக்கு அறவிட்டு கொள்வதற்கும் அமைச்சரவையின் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் கிடைக்கப்பெற்று இருந்தது. எவ்வாறு இருந்தும் 2021 ஏப்ரல் 09ஆம் திகதி மக்கள் பாவனைக்கு வழங்கப்பட்ட இந்த வீடமைப்புக் கருத்திட்டத்திலிருந்து 2024 டிசம்பர் 31ஆம் திகதியில் 177 வீட்டுப் பயனாளிகள் மட்டளவில் முழுமையான வீட்டின் பெறுமதி கிடைத்திருந்ததுடன் 179 வீட்டுப் பயனாளிகளிலிருந்து அறவிட வேண்டிய பெறுமதியானது ரூபா மில்லியன் 473.02 ஆகும்.

**ஜீ.எச்.டீ. தர்மபால**
**பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி.**



නාගරික ජනාවාස සංවර්ධන අධිකාරිය
நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை
Urban Settlement Development Authority